

யா / ஆனைக்கோட்டை

பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின்

# பவள விழா மலர்

SOUVENIR FOR 75th ANNIVERSARY OF

# ANAICODDAI BALASUBRAMANIA VIDYALAYAM

1927-2002

உ

யா/ ஆனைக்கோட்டை

பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின்

# J/ANAICODDAI BALASUBRAMANIA VIDYALAYAM

# பவளவிழாச் சிறப்பிதழ் மலர்

## 1927 - 2002

## SOUVENIR FOR 75th ANNIVERSARY

# பொருளடக்கம்


1. பஞ்சதோத்திரம் 01
2. பாடசாலைக்கீதம் 02
3. சமா்ப்பணம் 03
4. ஆசிச்செய்திகள் -
5. இதழாசிரியா் இதயத்திலிருந்து 05
6. அதிபா் அறிக்கை 06
7. PERMANENT TEACHERS 23
8. எங்கள் பாடசாலை, தாய் 24
9. முயற்சி திருவினையாக்கும், நொடிகள் 25
10. குழந்தைகளுக்கும் சேமிப்பு அவசியம் 26
11. நூல்நிலையம், ஒரு குழப்பமான விசயம் 28
12. எல்லாம் எனக்குத் தெரியும் 29
13. பெஞ்ஜமின் பிறாங்க்லின் 30
14. புதுயுகம் படைக்க புறப்படு பெண்ணே 31
15. நான் மயிரிழையில் தப்பிக்கொண்ட ஒரு விபத்து, அன்பு 32
16. உழவுத்தொழில் 33
17. அறுகம்புல் அா்ச்சனை 34
18. கொக்கும் அணிலும் 35
19. அன்பு வழியில் வாழ வரம் வேண்டும் 36
20. தாய் அன்பின் மகத்துவம் 38
21. கணனி வைரஸ் 39
22. My Mother, My Father 40
23. நான் போற்றும் பெரியாா் 41
24. இசையும் மனித வாழ்வும் 42
25. எழுத்துக்களின் குணங்கள், நான்கின் பெருமை 43
26. My Country, My School 44
27. தாவர வோ்கள் (நாடகம்) 45
28. தொடா்பாடற் பரிவா்த்தனையில் இணையம் 48
29. My Self, The Trees, My Pet 49
30. நிறை வாழ்வுக்கு வழிவகுக்கும் பொறுமை என்னும் பெருங்குணம் 50
31. சமாதானம் மலரட்டும் 52
32. அறிவொளி தருவன நூல்களே 53
33. My Birthday Party, The Importance of English 55
34. Mother Theresa 56
35. The Outer Planets 57
36. மீளுமா பள்ளிக்காலம் 58
37. ஆரம்பக் கல்வி 59
38. கணனியும் அதன் பயன்பாடும் 60
39. தத்துவ முத்துக்களும் பொன்மொழிகளும் 61
40. தாய்மையும் குழந்தையின் கல்வி வளா்ச்சியும் 62
41. பாடசாலைகளில் சீரமியத்தை ஒழுங்கமைத்தல் 64
42. வீட்டு வைத்தியம் 67
43. மனித உரிமைகள் வரலாறும் வளா்ச்சியும் 69
44. ஆசிரிய சேவையும் சமூகமும் 71
45. இலத்திரனியல் வா்த்தகம் 73
46. மனப்பாங்குகள் 78
47. சித்திரக்கலைப் பாடத்தில் சிறந்த பெறுபேற்றை அடைவதற்குரிய வழிகள் 82
48. பாடசாலைகளுக்கான புதிய பணிகள் 84
49. சிறுவா்களின் உளவிருத்தியில் பாடசாலையின் பங்களிப்பு 87
50. கல்வி 88
51. அன்று கட்டாந்தரை நாளை கல்லூரியாகும் 90
60. பரிசில் பெறுவோா் 91
61. நன்றி நவிலல் 102

# பஞ்சதோத்திரம்

திருச்சிற்றம்பலம்

பண் – கொல்லி

## தேவாரம்

தலம் – கழுமலம்

மண்ணின்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகையிருந்ததே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்து
உன்விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி
சய சய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழி செழுங் கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

பண் – பஞ்சமம்

## திருப்பல்லாண்டு

தலம் – சிதம்பரம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன்னடியின்கீழ் இருக்க வென்றார்.

திருச்சிற்றம்பலம்

# பாடசாலைக்கீதம்

## பல்லவி

பாலசுப்பிரமணிய வித்தியாலயம் வாழ்க
கோல ஆனைக்கோட்டை வளர்
கோயில் கொண்ட எங்கள் அன்னை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

## அனுபல்லவி

சீலமொடு கல்விகலை சேர்த்து ஊட்டும் தாயவள்
ஞாலமதில் எமக்குக் கல்வி ஞானம் தரும் தூயவள்
பால சுப்ர மணிய வித்தியாலயம்.

## சரணங்கள்

ஆசிரியர் அதிபரை அனுதினமும் நாம் துதிப்போம்
அவர் தரும் அறிவுரைகள் அனைத்தையும் நாம் மதிப்போம்
காசினியில் கல்விதனை கசடற நாமும் கற்போம்
கல்வியினை நாம் பயின்று கற்றாங்கு ஒழுகி நிற்போம்
பால சுப்பிர மணிய வித்தியாலயம்.

விஞ்ஞானம் கணிதமொடு விளையாடல் ஆடல் பாடல்
மெய்ஞ்ஞான நெறிகளோடு மேவு தமிழ் ஆங்கிலமும்
அஞ்ஞானம் நீக்கியென்றும் அறிவு தரும் பாடங்களை
எஞ்ஞான்றும் தந்து எம்மை ஏற்றி வைக்கும் எங்கள்அன்னை
பால சுப்ர மணிய வித்தியாலயம்.


ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழாம் ஆண்டிலே
தூயராம நாத வள்ளல் தொடக்கி வைத்த ஆலயம்
தாயவளாம் பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
ஆயகல்வி கலை எமக்கு அள்ளித் தரும் அறிவாலயம்
பால சுப்ர மணிய வித்தியாலயம்.

தாமரை மலர் மலரும் தடாகமும் சூழ்ந்திருக்கும்
மாமதுர அருள் பொழியும் மூத்தநயினார் வீற்றிருக்கும்
தேமதுரத் தமிழ் பயிற்றும் தெய்வக்குரு அருள் இருக்கும்
பூமலரும் முகத்துடனே பூந்தமிழ் சைவம் வளர்க்கும்
பால சுப்ர மணிய வித்தியாலயம்.

வாழ்க வாழ்க வாழ்க பாலசுப்ரமணிய வித்தியாலயம்
சூழ்க கல்வி கலைகள் என்றும் சோபனம் சேர்ந்தோங்குக
ஏழிசையிற் பாடி நாமும் எங்கள் தாயைப் போற்றுவோம்
வாழி வாழி வாழி என்று வாழ்த்துப்பாடி ஏற்றுவோம்
பால சுப்ர மணிய வித்தியாலயம்.

ஆக்கம் :- பிரம்மஸ்ரீ நவிரமணி ஐயர்,
இணுவையூர்.

# சமர்ப்பணம்



ஐந்து வயதிலிருந்து
கல்வி கற்க வரும்
அறிவுச் சிறார்களுக்கு
அறிவுக்கு விருந்தூட்டி
கவிஞராய் கதாசிரியராய்
வல்ல நல்ல ஆசானாய்
அன்பு மிக்க அதிபராய்
கருமமே கண்ணாய்
கடமையாற்றிய
முன்னை நாள் அதிபர்
அமரராம் அப்பச்சி மகாலிங்கம்
அவர்களுக்கு – எம்
அன்புப்படையலிது
சமர்ப்பணமே.

# யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய பவளவிழா மலர் 1927-2002

## காப்பாளர்

திருமதி.சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்(அதிபர்)

## இதழாசிரியர்

திருமதி.அம்பிகை சிவஞானம்

## மலர்க்குழு

திரு.நா.இராஜகுமாரன்(தலைவர்)
திருமதி.ச.இராஜசேகரம்(செயலாளர்)
செல்வி.த.கனகசபை(பொருளாளர்)
செல்வி.ஆ.ஸ்ரீவதனி
திருமதி.ந.சந்திரகுமார்
திருமதி.வி.பாஸ்கரன்
திருமதி.த.பாஸ்கரன்
திருமதி.பி.விக்கினேஸ்வரன்

## ஆலோசகர் குழு

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்
கல்விச் சிந்தனையாளர்கள்

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870 **நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.**

ஆசிச் செய்தி



**அன்பு நெஞ்சத்தீர் :-**

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் தனது 75வது ஆண்டு பவளவிழாவை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனைக்கோட்டை வாழ் மக்களின் கல்விப்பணிக்கு 75 ஆண்டுகள் பணியாற்றி தலை நிமிர்ந்து நிற்பது எல்லோருக்கும், ஊர்மக்களுக்கும் பெருமையைச் சேர்த்துள்ளது. யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சியில் பல பாடசாலைகள் பணியாற்றுகின்றன. இப்பாடசாலை சமயத்துடன் சேர்ந்த கல்வியை வழங்கிக் கொண்டு இருப்பது பெருமைக்குரியது. மனிதனை மனிதநேயத்துடன் வாழ வைப்பது கல்வி, கல்வியை சரியாக கற்றுக் கொள்வது கல்வியின் உயர்நிலையாகும். இதனை,

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவரும் விதம்பி உள்ளார். இதன் வழியாக கல்வியைப் பயிற்றுவிக்கின்ற பாடசாலைகளும் அதிபர் ஆசிரியர்களும் என்றும் பெருமைக்குரியவர்கள். பாடசாலை பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பல வளர்ச்சிகளைக் கண்டு மக்களும் சேவையாற்ற பிரார்த்திக்கின்றோம். பவள விழா மலர் வெளியிடும் ஆசிரியரையும் அதிபர் மாணவரையும் இறைவன் அருள் புரிவாராக

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய ஸ்வாமிகள்

Ministry
248 2/1 காலி வீதி
கொழும்பு - 04
248 2/1 ගාලු පාර
කොළඹ - 04
248 2/1 Galle Road
Colombo - 04

Jaffna Regional Office
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය
යාපනය
District Secretariat
Jaffna

# இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
# හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
# MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS

Ministry
Telephone : 01-554801
Fax : 01-554803
E-mail : tmahesh@eureka.lk

Jaffna Regional Office
Telephone : 021-3625
: 021-3644

**தியாகராசா மகேஸ்வரன், பா. உ.**
**තියාගරාජා මහේස්වරන්, පා. ම.**
**THIYAGARAJAH MAHESWARAN, M. P.**

# வாழ்த்துச்செய்தி



ஆனைக்கோட்டை வாழ் கல்விமான்களால் ஸ்தாபிக்கப்பட்டதும், 1927ம் ஆண்டு சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதுமான, யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம், இவ்வருடம் தனது பவள விழா நிறைவினை கொண்டாடுவதனையிட்டு அதன் ஞாபகார்த்தமாக, முதலாவது மலராக, பவளவிழா சிறப்பிதழ் வெளியிடுவதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது தமிழ் பேசும் மக்களின் மூலதனங்களில் ஒன்றான கல்விச் செல்வத்தினை வளர்ப்பதிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் யாழ் மாவட்டத்தில் முன்னிலையில் திகழும் ஓர் வித்தியாலயமாக இப்பாடசாலை விளங்குவதினை அனைவரும் அறிவர்.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சி உணர்வுபூர்வமாக சேவையாற்றிவரும் அதிபர், மற்றும் ஆசிரிய பெருந்தகைகளுக்கும், எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்கின்றேன். எதிர்வரும் காலங்களில் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ந்து நன் மாணவ செல்வங்களையும், எதிர்கால சமுதாயத்தின் சிறந்த பிரஜைகளை உருவாக்க மனமுவந்த நல்லாசிகளை கூறி அமைகின்றேன்.

தி. மகேஸ்வரன்

**திரு.தி.மகேஸ்வரன்**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.**

# ஆசிச்செய்தி

***யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் "பவளவிழா மலர்" என்னும் சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.***

ஒரு மனிதனுடைய வாழக்கையில் கல்வி என்பது மிகவும் ஒரு இன்றியமையாத ஒன்று. அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை தளரவிடாது மிகுந்த உற்சாகத்துடன் இப்பாடசாலையின் தலைசிறந்த அதிபர், ஆசிரியர்கள் அரும்பாடு பட்டு செயற்படுவதை யாவரும் அறிவர். இதன் பலனாக கடந்த காலங்களில் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையிலும் இப்பாடசாலை சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகிலும் இப்பாடசாலை பெருஞ்சாதனைகளை ஈட்டியுள்ளமை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். குறிப்பாக கடந்த 7வருடங்களாக உடற்பயிற்சிப் போட்டியில் வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பெரும் சாதனையை ஈட்டியுள்ளதுடன் கரப்பந்தாட்டப் போட்டியிலும் மாகாண மட்டத்திற்கு தெரிவாகியமை சிறப்புக்குரிய விடயங்களாகும்.

இப்பாடசாலை அதிபர் அவர்களினதும், ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் ஆக்கபூர்வமான கல்வி முயற்சிகளை கல்வி உலகம் மகிழ்வுடன் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. பவளவிழா மலர் சிறந்து விளங்கி மிக விரைவில் எல்லோரினது கைகளிலும் மலர வேண்டுமென இறைவனை வேண்டுவதுடன், இப்பெருமுயற்சியில் முன்னின்று உழைத்துவரும் அதிபர், மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

**NADARAJAH RAVIRAJ**
**Member of Parliament**
**Jaffna District**
**Sri Lanka**

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

[illegible]

[illegible]

திருகோணமலை [illegible] Trincomalee

026 - 20035 (Secretary) 026 – 22176 (General) 026 – 22730 (Fax) E-mail : edunep@sltnet.lk


எங்கள் இல. / [illegible] / My No. - 8/8/3/01/04

உங்கள் இல. / [illegible] / Your No. ---------

2002.10.23

# ஆசிச் செய்தி

சமூகம் ஒன்றின் வளர்ச்சியும் பண்பாட்டு உயர்வும் அச்சமூகத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. பல சமூகங்களில் இருந்து பாடசாலைக்கு வரும் குழந்தைகள் அறிவு, திறன் மனப்பாங்கு என்பவற்றைப் பெற்று தாம் வாழும் சமூகத்தோடு இயைந்து வாழக்கூடிய நற்பிரஜையாக சமூகத்திற்கு மீண்டு செல்கின்றனர். இதனால் பாடசாலை ஒன்றின் செயற்பாடு நேரடியாகவே சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது கண்கூடு.

அந்த வகையில் யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் தான் அமைந்துள்ள சமூகத்தின் பலதுறை வளர்ச்சிக்கும் பெரும்துணை செய்து நிற்கின்றது. க.பொ.த.(சா.்.த)திலும் 5ம் ஆண்டு புலமைப்பரீட்சையிலும், மாணவர்களை ஊக்குவித்து நல்ல அடைவு மட்டத்தை பெற்றுள்ள இப்பாடசாலை கல்வி வளர்ச்சியில் பெரும் விழிப்பினைக் கொண்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், இப்பாடசாலை பெரும் ஈடுபாட்டை கொண்டுள்ளது என்பதனை உடற்பயிற்சிப் போட்டியில் தொடர்ந்து 7வருடங்களாக மாகாண மட்டத்தில் சம்பியனாகத் திகழ்வதும், கரப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்று வருவதும் இதற்கு தக்க சான்றுகளாக அமைந்துள்ளன. மாணவர்களது உடல், உள வளர்ச்சியிலும் அக்கறை காட்டி அறிவுதிறன் மனப்பாங்கை அவர்களிடம் ஏற்படுத்தி பூரணமான மனிதர்களாக மாணவர்களை உருவாக்கி நிற்கும் இப்பாடசாலை பவளவிழாவின்போது வெளியிடப்படுகின்ற மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலையின் புகழ் மேலும் சிறப்புற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

க.சண்முகலிங்கம்,
செயலாளர்
கல்விப் பண்பாட்டு அலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

# ஆசிச்செய்தி



யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் 1927இல் ஆரம்பிக்கப்பட்டு 75ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று பவளவிழா கொண்டாடுவதனையிட்டு மனம் நிறைவு பெறுகின்றது. அத்தோடு அப்பாடசாலையினால் வெளியிடப்படும் பவளவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவதனை நினைத்தும் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

தன்மீது நம்பிக்கை வைத்த மாணவச் செல்வங்களது அறிவு, திறன், மனப்பாங்கு விருத்திகளுக்கு வழி அமைத்துக் கொடுக்கின்றது. கரப்பந்தாட்டப் போட்டிச் சிறப்புத் தேர்ச்சியால் இவ்வித்தியாலய மாணவர்கள் மாகாணநிலைப் போட்டிகளிலும் பங்குகொண்டு சாதனை படைக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளனர். உடற்பயிற்சி, வலைப்பந்து போட்டிகளிலும் இவ்வித்தியாலய மாணவர்களது சாதனைகள் மனப்பதிவுகளை உண்டுபண்ணியுள்ளன. பரீட்சைப் பெறுபேறுகளும் இவ்வித்தியாலயத்தின் சிறப்பை எடுத்தியம்புகின்றன. இந்நிலைப்பாடுகளால் சுற்றியுள்ள சமூகச் சூழலில் இவ்வித்தியாலயம் தொடர்பாக நன்மதிப்புண்டு.

அதிபரின் அர்ப்பணிப்பு, விடா முயற்சி அத்துடன் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாடுகளுக்கு துணை போகும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், பக்க பலமும் இவ்வித்தியாலயத்தின் சிறப்பிற்கு மூல காரணிகளாக அமைகின்றன. அந்தவகையில் இவ்விழாவின் நிறைவிற்கும் வித்தியாலயத்தின் பெருமைக்கும் பாடுபடும் அனைவரையும் வாழ்த்துவதில் உவகை அடைகின்றேன்.

23/9/02

வீ.இராசையா,
மேலதிக மகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

# பெருமையுடன் வாழ்த்தும்..........................



1927ல் ஆரம்பிக்கப்பட்ட ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம், அர்ப்பணிப்புள்ள அதிபர் ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட நல்லொழுக்கமும் கல்வியாற்றலும் உள்ள மாணவர்களால் பெருமை பெற்று வளர்ந்தது. எனினும் திருமதி.சூியகுமாரி - ஜெயவீரசிங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றதன் பின்னர் இந்த அறிவாலயம் சகலதுறைகளிலும் தனது முத்திரையைப் பதித்துச் செல்கின்றது. பொதுப் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெறும் அதேவேளையில் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் உயர்நிலைகளை உருவாக்கிச் செல்கின்றது. உடற்பயிற்சிப் போட்டியில் தொடர்ச்சியாகப் பல வருடங்கள் வலய மட்டத்தில் 1ம் இடம் பெற்றுச் சாதனை புரிந்துள்ளது.

மாணவரது ஒழுக்கம், கட்டுப்பாடு, அலுவலக நிர்வாகம், ஆசிரியர் ஒன்றிப்பு அனைத்தும் இப்பாடசாலையில் அழகுற மிளர்வதை எப்பொழுதும் காண்கிறோம். உயர் கல்வித் தகைமை பெற்ற அதிபரின் ஆளுமை, கண்டிப்பு யாவும் இக்கிராமப் புறப் பாடசாலையை கணிக்கக்கூடிய இடத்தில் வைத்ததையிட்டுப் பெருமையடைகின்றேன். சகல வெற்றிகளுக்கும் பக்கபலமாக கரிசனை காட்டும் பழைய மாணவர் யாவரையும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி. றெஜினா இருதயநாதன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலிகாம வலயம்.**

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி



கடந்த எழுபத்தைந்து வருடங்களாக ஆனைக்கோட்டையில் வாழும் ஏழைச் சிறார்களுக்கு தளராத ஊக்கத்தோடு கல்வி வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி என்பவற்றை வழங்கிவரும் யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் பவள விழாவையொட்டி பாடசாலைச் சமூகத்தினால் வரலாற்றுப் பதிவாக வெளியிடப்படும் முதலாவது மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதிலும் இம்மலினூடாக இப்பாடசாலையை வாழ்த்துவதிலும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடந்த ஒரு தசாப்த காலமாக பல்துறை வளர்ச்சியில் இப்பாடசாலை தனது விசேட முத்திரையைப் பதித்து வருவதை அவதானிக்க முடிகிறது. கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றில் ஒப்பீட்டளவில் ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க உயர் வளர்ச்சி வீதத்தைக் கொண்ட பாடசாலையாகவும் கரப்பந்தாட்ட விளையாட்டில் கடந்த வருடம் மாவட்டச் சம்பியனாகி மாகாண மட்டத்தில் விளையாடிய பாடசாலையாகவும் ஆண்கள் உடற்பயிற்சிப் போட்டியில் கடந்த ஏழு வருடங்களாக வலயமட்டச் சம்பியனாகவும் அதற்கு அப்பால் விளையாடும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் தேசிய மட்டச் சம்பியனாக வரும் தகைமை கொண்ட பாடசாலையாகவும், 15 வயதின் கீழ் வலைப்பந்துப் போட்டியில் கோட்டமட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பாடசாலையாகவும் தமிழ்த்தினப் போட்டியில் கலைத்துறைப் படைப்புக்களை மிகச்சிறப்பாக மேடையேற்றும் பாடசாலையாகவும் விளங்கி வருவது இப்பாடசாலையின் அண்மைக்காலச் சிறப்புக்களாகும்.

கல்வி நிர்வாகம், கல்வி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறப்புத் தகைமையைக் கொண்டு விளங்கும் திருமதி.சு.ஜெயவீரசிங்கம் அவர்கள் இப்பாடசாலையைக் கடந்த எட்டு ஆண்டுகளாக நிர்வகித்து வருவதே இப்பாடசாலையின் எழுச்சிக்கான பிரதான காரணம் என்பதை யாவரும் அறிவோம். மாணவர் ஒழுக்கம், பாடசாலை ஒழுங்கமைப்பு, கல்வி முகாமைத்துவம் என்பவற்றில் வளர்ச்சியடைந்து வரும் இப்பாடசாலை எதிர்காலத்தில் தனது சுற்றுப்புறத்தில் கல்வி அறிவு, பொருளாதார வசதி, சமூக முன்னேற்றம் என்பவற்றில் பின்னடைவு பெற்ற பெற்றோர்களின் பிள்ளைகள் அறிவு திறன், மனப்பாங்கு என்பவற்றில் சமூகம் எதிர்பார்க்கும் வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ள உதவும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வளர்ச்சிப் பாதைக்கு தம்மை அர்ப்பணித்து வழிகாட்டிவரும் அதிபர், துணை அதிபர் மற்றும் ஆசிரியர்களை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டி வாழ்த்துவதோடு இப்பாடசாலை வளர்ச்சிக்கு பல்துறை ஒத்துழைப்பை வழங்கிவரும் பழைய மாணவர்களையும் பெற்றோர்களையும் நலன் விரும்பிகளையும் நன்றி உணர்வோடு பாராட்டுகின்றேன்.

க.தனபாலசிங்கம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்.

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் ஆசிச் செய்தி



யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் இம்மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1997ம் ஆண்டிலிருந்தே இப்பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபாடுடையேன். இக்காலப்பகுதியில் இங்கு கடமையாற்றி அதிபர் திருமதி.சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் அவர்களதும் ஆசிரியர்களதும் ஒத்துழைப்புடனும் நாடகத்துறையை வளர்ப்பதில் எனது உதவிகையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகிறேன். இப்பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மட்டுமன்றி கல்வித்துறையிலும் பெருவளர்ச்சி பெற்று வருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பாடசாலை மேன்மேலும் சகல துறைகளிலும் வளர்ந்து யாழ் மாவட்டத்தில் முன்னணியான பாடசாலையாக விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல மூத்தநயினார் அருள்பாலிக்க வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

**திரு.க.மனோகரன்**
**(பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்)**

# இதழாசிரியர் இதயத்தில் இருந்து ............

வரலாற்றுப் பெருமை மிக்க எமது வித்தியாலய அன்னை எழுபத்தைந்தாவது ஆண்டை நோக்கி வெற்றிநடை போடுகின்ற அதேவேளை வித்தியாலயத்தின் காலக்கண்ணாடியாகிய "பாலசுப்ரமணிய வித்தியாலயம்" 2002 ஆவது ஆண்டில் எழுபத்தைந்தாவது அகவையைப் பூர்த்தி செய்து பூரிப்படைகின்றாள். நாமும் பொங்கிப் பூரிக்கின்றோம்.

எமது வித்தியாலயத் தாயின் சாதனைகளை நாம் கூறித்தான் நீங்கள் தெரிய வேண்டு மென்பதில்லை. பாலசுப்பிரமணியத்தின் சாதனைகள் அவள் பிள்ளைகள் கூறு முன்பே மக்களைச் சென்றடையுமல்லவா? ஆனால் உங்களுக்குத் தெரியாததும் முக்கியமானதுமான சாதனைகள் இம்மலரிலே தவழ்ந்து வருவதை நீங்கள் படித்து அறிந்து கொள்வீர்கள். இதழாசிரியர் என்ற வகையில் என் இதயத்து உணர்வுகளை எழுத்தில் வடிக்க முற்பட்டுள்ளேன். பவளவிழா மலர் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பேரானந்தம் அடைகின்றேன்.

எமது பாடசாலை வரலாற்றிலே முதன்முதலாக வெளிவருகின்ற இம்மலரானது எமது நீண்ட நாளைய கனவை நிறைவேற்றுகிறது. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் வெளிவரும் இம்மலரானது பவளவிழாவினைச் சிறப்பிக்கின்றது. எமது அதிபரின் அயராத முயற்சியுடனும், வழிகாட்டலுடனும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் வெளிவரும் இம்மலரில், கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் எமது பாடசாலை ஈட்டிய சாதனைகள், படங்கள் மூலமும், கட்டுரைகள் மூலமும் புலப்படுகின்றன.

உங்கள் அன்புக் கரங்களில் தவழும் இம்மலர்க் குழந்தையின் சுகநலங்களை உங்கள் அன்புக்குரியவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்; ஆலோசனைகள் இருப்பின் எம்மிடம் பகருங்கள். அனைவருக்கும் எனது அகம் நிறைந்த நன்றிகள்.

திருமதி.அம்பிகை சிவஞானம்

# அதிபர் அறிக்கை



**மதிப்புக்குரிய முதன்மை விருந்தினர் அவர்களே,**
**சிறப்பு விருந்தினர் அவர்களே,**
**கௌரவ விருந்தினர் அவர்களே,**
**சகோதரப் பாடசாலை அதிபர்களே,**
**ஆசிரியர்களே,**
**பெற்றோர்களே,**
**மாணவர்களே,**
**பழைய மாணவர்களே,**
**நலன் விரும்பிகளே,**
**உங்கள் அனைவருக்கும் நல்வரவு கூறுகின்றேன்.**

கல்விப்பணியே தமது மகத்தான பணியென அயராது உழைத்து வருபவரும், கடமையுணர்வும் அளப்பரிய அர்ப்பணிப்பும் கொண்டவரும், எமது வலிகாமம் வலயப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை ஆற்றிவருபவருமான வலயக் கல்விப்பணிப்பாளர் மதிப்புக்குரிய திருவாளர் வி. இராசையா அவர்களே, தாங்கள் இன்றைய நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூகந் தந்திருப்பது பெரும் பேறாகும். தங்களை இருகரம் கூப்பி வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. றெ. இருதயநாதன் அவர்களே, எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகத் தாங்கள் நல்கிவரும் கல்விச் சேவையையும் அவ்வப்போது தங்களால் எமக்கு அளிக்கப்பட்டு வரும் ஊக்குவிப்புக்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கின்றோம். தங்களையும் பேரன்புடன் வரவேற்று மகிழ்வடைகின்றோம்.

சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு. க. தனபாலசிங்கம் அவர்களே, தாங்கள் எமது கோட்டத்தைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து அதிபர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக எமது வெற்றிகளின் போது எம்மை ஊக்குவிப்பவராகவும், எமது தேவைகளை உணர்ந்து உதவுபவராகவும் தாங்கள் ஆற்றிவரும் கல்விப்பணி மேலானது. தங்களை எம் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பெற்றமை நாம் செய்த பாக்கியமென்றே கூறவேண்டும். தங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

திணைக்களக் கட்டிடப் பொறியியலாளர் திரு. ஜீ. சிவபாலன் அவர்களே, கல்லூரிக் கட்டிட நிர்மாணங்களுக்கு பக்கபலமாகத் தாங்கள் வழங்கிவரும் பெரும் வழிகாட்டல்கள், உதவிகள் எமது நன்றிக்குரியவை. தங்களைச் சிறப்பு விருந்தினராக வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

கௌரவ விருந்தினர்களாக இங்கு வருகை தந்திருக்கும் பெரியோர்களே, நண்பர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, என்றும் எம் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, மாணவச் செல்வங்களே உங்கள் எல்லோரையும் அன்புடன் வரவேற்றுக் கொள்கின்றோம்.

2000ஆம், 2001ஆம் ஆண்டுகளில் பரிசுத்தின அறிக்கையையும் எமது வித்தியாலயத்தின் பவள விழாவில் நான் அதிபராகக் கடமையேற்றபின் உள்ள செயற்பாடுகளையும் சுருக்கமாக சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன்.

**மாணவர் வளம் :**

ஆரம்பப் பிரிவில் 262 மாணவர்களும், இடைநிலையில் 246 மாணவர்களுமாகத் தற்போது 508 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். தரம் 1 தவிர்ந்த ஏனைய வகுப்புக்கள் இரண்டு பிரிவுகளாக உள்ளன.

# எமது பாடசாலையிலுள்ள ஞானவைரவர் ஆலயம்



எமது பாடசாலையின் ஞானவைரவர் ஆலயத்தின் பிரம்மஸ்ரீ கதிர்காமக் குருக்கள் ஐயா அவர்கள் கற்பூரதீபம் ஏற்றிவதைப் படத்தில் காணலாம்.



# எமது அதிபர்
# Our Principal



**Mrs.S.Jeyaveerasingam**
**B.A.,Dip in Ed., SLPS(1)**
**Class(1)**

இணைந்த அதிபர்



MR.T.THARMALINGHAM
SLPS - 1

எமது பாடசாலையுடன் இணைந்து இயங்கிய கிளி/ வேம்பொடுகேணி அதிபர்.



MR.S.RAMALINGAM
B.A, Dip in Ed, SLPS (II)

முகாமைத்துவ உதவியாளர்



MR.T.SRITHARAN
B.A.

உபஅதிபர்



MRS.G. GANESHALINGAM
SLTS(1)

பகுதித்தலைவர்



MISS.T.KANAGASABAI
B.A.,Dip in Ed., SITS(2.1)
M.ed.

**ஆசிரிய வளம் :**

இன்று எமது பாடசாலையில் 18 நிரந்தர ஆசிரியர்களும் ஒரு முகாமைத்துவ உதவியாளரும் ஒரு தற்காலிக இணைக்கப்பட்ட ஆசிரியரும் ஒரு பகுதி நேர ஆங்கில ஆசிரியருமாக மொத்தம் 20 பேர் கடமையாற்றுகின்றனர். 2000 ஆம் ஆண்டில் இருந்து கிளி / கொம்பொடு கேணி சி.சி.த.க பாடசாலை எம்முடன் இணைந்து செயற்பட்டது. அப்பாடசாலை ஆசிரியர்களுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்ட தென்மராட்சி ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் கடமை புரிந்து எமது பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தனர். அவர்களின் கல்விப்பணிகளும் கடமையுணர்வுள்ள செயற்பாடுகளும் எம்மால் மறக்க முடியாதன. அவர்கள் அனைவரும் தற்போது தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் சென்றுள்ளனர். அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைச் செலுத்துகின்றேன்.

தற்போது இரண்டு ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலை சென்றுள்ளனர். ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. ஆங்கில ஆசிரியர் எவரும் இல்லாத நிலையில் இதுவரை காலமும் இரு பிரிவுகளாக இருந்த வகுப்புக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுக் கல்வி போதிக்கப்படுகிறது. ஒரு வகுப்பில் 50 மாணவர்களுக்கு மேல் இருப்பினும் சகல ஆசிரியர்களும் கடமையுணர்வுடன் பாடசாலை வளர்ச்சிக்கும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பெரும்பணியாற்றி வருவதையிட்டு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக இணைந்த ஆசிரியர்கள் திருமதி பிரேமராணி விக்கினேஸ்வரன், செல்வி விபுசாந்தி தர்மசேகரம் திரு. கே. கே. ரமணன் ஆகியோர்களாவர்.

திரு. T. திருஞானசம்பந்தர், திருமதி. சோமசுந்தரம் ஆகியோர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர். திரு. T. திருஞானசம்பந்தர் சிறந்த ஒரு ஆங்கில பாட ஆசிரியராக சேவையாற்றி எம்மாணவர்களின் ஆங்கில அறிவு வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர். ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவர் இன்னும் பல வழிகளில் பாடசாலை வளர்ச்சிக்கு உதவி புரிந்து வருகின்றமை எமது நன்றிக்குரியது.

## வாண்மை விருத்தி

பட்டதாரியானோர் விபரம்

1. செல்வி. த. கனகசபை
2. திருமதி. அ. சிவஞானம்
3. செல்வி. ஸ்ரீவதனி ஆறுமுகராசா
4. திருமதி. ஜெ. மகேந்திரன்

பட்டப்பின் டிப்புளோமா பெற்றோர் விபரம்

1. செல்வி.த.கனகசபை
2. திருமதி.அ.சிவஞானம்

பட்டப்படிப்பின் டிப்ளோமா கற்போர் விபரம்

1. செல்வி. ஆ. ஸ்ரீவதனி
2. திருமதி. ச. இராஜசேகரம்
3. திருமதி. ஜெ. மகேந்திரன்
4. திரு. தா. ஸ்ரீதரன்

கல்விமாணி கற்போர் விபரம்

1. திருமதி. ந. சந்திரகுமார்

முதுகல்விமாணி பெற்றோர் விபரம்

செல்வி. த. கனகசபை

ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறுவோர் விபரம்

1. திரு. கே. கே. ரமணன்
2. செல்வி. வி. தர்மசேகரம்

## பாடசாலை வரலாறு

ஆனைக்கோட்டை மூத்தநயினார் எனும் முருகப் பெருமான் வீற்றிருக்கும் ஆலயச் சூழலில் அமைந்துள்ள எமது பாடசாலை 1927இல் ஆரம்பிக்கப்பட்டது. கல்விமான்கள், பெரியோர்களது அயராத முயற்சியினால், யாழ் மாவட்டத்தின் பிரபல்ய பாடசாலைகளான இராமநாதன் கல்லூரி, ரமேஸ்வராக் கல்லூரி போன்றவற்றைத் தாபித்தவரான உயர்திரு. பொன். இராமநாத வள்ளல் அவர்களால் எமது பாடசாலை 1927 ஐப்பசி விஜய தசமியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்கான காணியை வழங்கி இதனை ஸ்தாபித்த பெருமை திரு. இராமலிங்கம் செல்வநாயகம் அவர்களுக்கே உரியது.

இப்பாடசாலையின் முதல் அதிபராக ஏழாலையைச் சேர்ந்த அமரர் திரு. சிவக்கொழுந்து அவர்கள் கடமையாற்றினார். இடைப்பட்ட காலத்தில் அதிபராக இருந்தவர்களை அறிய முடியவில்லை. ஆயினும் அராலியைச் சேர்ந்த மயில்வாகனம் என அழைக்கப்படும் வே. கந்தர் என்பவரும் அதனை அடுத்து அமரர் திரு. இராமலிங்கம் அவர்களும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு. சண்முகம் அவர்களும், அதனை அடுத்து அராலியைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும் அவரைத் தொடர்ந்து சுதுமலையைச் சேர்ந்த திரு. ஆறுமுகராஜா அவர்களும் அதன்பின் நவாலியைச் சேர்ந்த அமரர் திரு. அப்பச்சி மகாலிங்கம் அவர்களும் (1982 - 1990) அதனை அடுத்து இளைப்பாறிய தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. A. V. கணேசலிங்கம் அவர்களும் (1991 - 1994) அதிபர்களாகப் பணி புரிந்துள்ளார்கள்.

## முகாமைத்துவம்

என்னுடன் இணைந்து இப்பாடசாலையின் வளர்ச்சியை முன்னெடுக்க உபஅதிபர் பகுதித்தலைவர் உட்பட முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் அனைவரும் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் கிளி/வேப்படுகேணி அதிபர் திரு. இராமலிங்கம் அவர்கள் பாடசாலை நிர்வாகத்தில் எனக்கு பல ஆலோசனைகளை வழங்கியுள்ளார். மேலும் அதிபர் திரு தர்மலிங்கம் அவர்கள் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேம்படுத்துவதில் உள்ளக மேற்பார்வை செயற்பாடுகளில் உதவுகின்றார்.

பாடசாலையின் நிர்வாக கடமைகள் ஒழுங்காற்று நடவடிக்கைகள், பாடசாலைச்சுத்தம் என்பவற்றை சிறப்பாக பேணுவதில் சிரேஷ்ட ஆசிரியை செல்வி. ஸ்ரீ. ஆறுமுகராசா அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். முகாமைத்துவ உதவியாளர் திரு. தா. ஸ்ரீதரன் ஆசிரியர் திரு. நா. இராஜகுமாரன் ஆகியோர் நிர்வாக கடமைகளில் பலவழிகளிலும் உதவிபுரிந்து வருகின்றமை எனது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவையாகும்.

## செயற்படுத்த உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள்

- ஆரம்பக்கல்வி மாணவர்களின் மொழித்திறன் விருத்திக்கான விசேட செயற்திட்டம் திருமதி அ. சிவஞானம், திருமதி. க. சிவப்பிரகாசம் ஆகியோரின் பொறுப்பிலும் மேற்பார்வையிலும் நடைமுறைப்படுத்த ஒழுங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- உள்ளக விளையாட்டுகளான கரம், சதுரங்கம் ஆகியவயவற்றிற்கான பயிற்சிகளை ஓய்வு நேரத்திலும் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவ உதவியாளர் தா. ஸ்ரீதரனின் மேற்பார்வையில் பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
- இரண்டு மாடிக் கட்டிடத்தின் குறைவேலைகள் தொடர்ந்து கட்டி முடிக்கப்படுவதற்கான ஒழுங்குகள்.
- பாடசாலை பான்ட் வாத்தியக் குழுவினரைப் பயிற்றுவித்தல்
- மாணவர் குடிநீர் வசதிக்கான குழாய் நீர் ஒழுங்குகள்
- இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் விருத்தி

குறிப்பு :- இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை காலமும் எமது பாடசாலையில் நூலக வசதி இல்லாது இருந்தது. தற்போது வலிகாம வலய கல்விப்பணிப்பாளர் அவர்கள் உலக வங்கியின் நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் எமது பாடசாலையையும் தெரிவு செய்து சிறந்த வசதிகள் கொண்ட நூலகத்தை அமைத்து தந்து உதவியதற்கு பாடசாலைச் சமூகம் மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறது.

# G.C.E (O.L) Results

## க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்

| இல No | வருடம் Year | தோற்றியோர் Sat | சித்தியடைந்தோர் Qualified | சித்தி அடைந்தோர்வீதம் Qualified Persantage |
|---|---|---|---|---|
| 1 | 1995 | 13 | 05 | 38.46% |
| 2 | 1996 | 29 | 08 | 27.5% |
| 3 | 1997 | 29 | 14 | 48.3% |
| 4 | 1998 | 27 | 17 | 58.6% |
| 5 | 1999 | 24 | 16 | 66.7% |
| 6 | 2000 | 12 | 09 | 75% |
| 7 | 2001 | 25 | 16 | 64% |

# Grade : 05 Scholarship Results

## தரம் : 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

| இல No | வருடம் Year | தோற்றியோர் Sat | சித்தியடைந்தோர் Qualified | சித்தி அடைந்தோர்வீதம் Qualified Persantage |
|---|---|---|---|---|
| 1 | 1995 | 15 | 01 | 6.67% |
| 2 | 1996 | 18 | 00 | 0.0% |
| 3 | 1997 | 22 | 02 | 9.0% |
| 4 | 1998 | 17 | 01 | 5.9% |
| 5 | 1999 | 25 | 01 | 4.0% |
| 6 | 2000 | 28 | 01 | 3.5% |
| 7 | 2001 | 23 | 04 | 17.4% |
| 8 | 2002 | 27 | 03 | 11.1% |

# கடந்த காலங்களில் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர் விபரம்

1995 - 1. செல்வன் வி. பிரபாகரன் - 3D,2C, S
2. செல்வி. க. ஜெயா - D, 5C
3. செல்வன் க. பிரபாகரன் - D, 4C, S
4. செல்வன் க. ஜெயந்தன் - 2D, C, S

1996 - 1. செல்வன் சு. சுந்தரலிங்கம் - 4D, 3C, S
2. செல்வன் வி. பிரபாகரன் - 3D, 3C, S
3. செல்வன் த. சரத்பாபு - D, 4C, S
4. செல்வன். க. முரளிதரன் - D, 3C, 2S
5. செல்வி. க. ஜெயா - D, 3C, S

| | | | |
|---|---|---|---|
| 1997 | - 1. | செல்வன் த. சரத்பாபு | - D, 4C, S |
| | 2. | செல்வன் க. முரளிதரன் | - 6C, S |
| | 3. | செல்வி. ந. மகேஸ்வரி | - 5C, S |
| | 4. | செல்வன். மு. கௌரிகாந்தன் | - 5C, 2S |
| 1998 | - 1. | செல்வி. ப. வானதி | - 4D, 3C |
| | 2. | செல்வி. சி. குகதர்சினி | - 4D, 2C, S |
| | 3. | செல்வி. து. லோகேஸ்வரி | - 3D, 4C, S |
| | 4. | செல்வி. ப. சசிகலா | - 3D, 4C |
| | 5. | செல்வி. ஜெ. ஜனனி | - 2D, 2C, 2S |
| 1999 | - 1. | செல்வி. செ. செல்வநாயகி | - 5D, 4C, S |
| | 2. | செல்வி. த. கலாநிதி | - D, 5C, 2S |
| | 3. | செல்வி. பா. தவராணி | - D, 5C, 4S |
| | 4. | செல்வி. தி. சுகாகினி | - D, 3C, 4S |
| | 5. | செல்வி. பொ. புஷ்பலதா | - D, 2C, 3S |
| 2000 | - 1. | செல்வன். ந. ரஜினகுமார் | - D, 4C, 4S |
| | 2. | செல்வி. ஜெ. விஜயந்தினி | - D, 2C, 4S |
| | 3. | செல்வி. சி. குணாளினி | - 4C, 5S |
| | 4. | செல்வன் அ. குகநாதன் | - D, C, 4S |
| | 5. | செல்வி. செ. விஜயகுமாரி | - D, 2C, 4S |
| 2001 | - 1. | செல்வி. வி. அஜந்தா | - 4A, 3B, 2S |
| | 2. | செல்வி. த. சுகாஜினி | - 4A, 3B, C, 2S |
| | 3. | செல்வி. கு. தாரணி | - 2A, 3B, C, 2S, |
| | 4. | க. கேமினா | - 3A, B, 5C |
| | 5. | க. சுகந்தா | - 2A, B, 5C, S |

இதுவரை காலமும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விகிதாசாரத்தை விட 2001ல் 4 மாணவர்களும் 2002ல் 3 மாணவர்களும் சித்தி பெற்று சித்தி விகிதாசாரம் அதிகரித்ததுடன் வெட்டுப்புள்ளியை அண்பித்த புள்ளியைப் பெற்ற மாணவர்களின் தொகையும் அதிகரித்துள்ளது. இத்தகைய வளர்ச்சிக்குக் காரணமாகவும் அம் மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வழிகாட்டியாகவும் இருக்கும் ஆசிரியை திருமதி. பிறேமராணி விக்னேஸ்வரன் அவர்களை மனதார நன்றி கூறிப் பாராட்டுகிறேன். அத்துடன் திருமதி. அ. சிவஞானம், செல்வி. வி. பொன்னன், செல்வி. வி. தர்மசேகரம் ஆகிய ஆசிரியர்களும் இம்மாணவர்களுக்குக் கல்வி போதித்து வழிகாட்டியுள்ளனர். இவர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறேன். க.பொ.த.(சா.த) பரீட்சையில் கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு அயராது உழைத்த சகல பாட ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

ஜனாதிபதி புலமைப்பரிசில் பெறும் மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | செல்வி. கு. தாரணி | - தரம் 11 |
| 2. | செல்வி. வி. துஷ்யந்தி | - தரம் 11 |
| 3. | செல்வி. சி. சிவதர்மளா | - தரம் 11 |
| 4. | செல்வி. ம. சிந்துஜா | - தரம் 11 |
| 5. | செல்வி. க. சிந்துஜானி | - தரம் 11 |
| 6. | செல்வி. க. உஜித்தா | - தரம் 11 |
| 7. | செல்வி. ப. சுபாஷினி | - தரம் 11 |
| 8. | செல்வி. பா. சங்கீதா | - தரம் 11 |
| 9. | செல்வன். ச. றொபின்சன் | - தரம் 11 |
| 10. | செல்வன். ம. பானுதன் | - தரம் 7 |
| 11. | செல்வி. ச. றேணுகா | - தரம் 9 |

# இணைப்பாடவிதானம்

1. விளையாட்டுத்துறை

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கலந்து எமது பாடசாலை பல சாதனைகளைப் புரிந்து வருகிறது. கோட்ட, வலய, மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கடந்த 7 வருடங்களாக முதலாம் இடத்தைப் பெற்று 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணியினர் வலிகாம வலய வெற்றிக்கேடயத்தையும் இம்முறை சுவீகரித்துக் கொண்டனர். வலய மட்டத்துடன் இப்போட்டி மட்டுப்படுத்தப்பட்டமையால் கடந்த காலங்களில் மாகாண தேசிய மட்டங்களில் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பிருந்தும் அச் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாமை வருந்தத்தக்கது. உடற்பயிற்சிப் போட்டியில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் என்னுடன் இணைந்து செல்வி ஸ்ரீவதனி ஆறுமுகராசா மாலை நேரத்திலும் பாடசாலைக்கு வருகை தந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை என்றும் சகலரினதும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியதாகும். மேலும் உடற்பயிற்சி ஆசிரியர் திருமதி. வி. பாஸ்கரன் மற்றும் உடற்பயிற்சி அணியினரைப் பயிற்றுவிப்பதில் உதவிய செல்வன். இ. கோபிநாத் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலை மூன்று அணியினரைப் பயிற்றுவித்துக் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் பங்குபற்றி வெற்றி பெற்ற பெருமைக்குரியது. குறிப்பாக 2000 ஆம் ஆண்டில் 17 வயதின் கீழ் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கோட்டம், வலயம், மாவட்ட மட்டங்களில் முதல் இடத்தைப் பெற்று மாகாண மட்டப்போட்டியில் முதல் பங்குபற்றியமை பெருமைக்குரியது. இவ்வணியினரைப் பயிற்றுவிப்பதில் பொறுப்பாசிரியர் திரு. நா. இராஜகுமாரன் செல்வன். க. பிரபாகரன் செல்வன். இ. கோபிநாத் ஆகியோரது அயராத முயற்சியைப் பாராட்டுகின்றேன். இப்போட்டிக்கென எமது மாணவர் அணியைத் திருகோணமலைக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் புரிந்து அவர்களை மீண்டும் அழைத்து வந்த எமது அன்புக்குரிய ஆசிரியை திருமதி. ந. சந்திரகுமார் அவர்களை மிகுந்த நன்றியுடன் பாராட்டிக் கொள்கிறேன்.

பெண்களுக்குரிய வலைப்பந்தாட்டக் குழுவினர் 2000ஆம் ஆண்டில் இருந்து போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றனர். 2002ல் 15 வயதின் கீழ் பெண்கள் அணியினர் கோட்ட மட்டத்தில் 2ம் இடத்தையும், 19 வயதின் கீழ் பெண்கள் அணி 3ம் இடத்தையும் பெற்றுள்ளனர். இந்த அணியைப் பயிற்றுவிப்பதில் திருமதி. ந. சந்திரகுமார், திருமதி. பி. விக்கினேஸ்வரன், திருமதி ந. பரமநாதன், திருமதி, ஜீ மகிழ்ராஜதுரை, திருமதி. சிவபாலன் புஸ்பமலர் ஆகியோர் எனது பாராட்டுதல்களுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

பாடசாலையின் மெய்வல்லுனர் நிகழ்வுகளில் கோட்ட வலய மட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டுவதற்கு பயிற்சியினை வழங்கிய உடற்பயிற்சி ஆசிரியர் திருமதி வி. பாஸ்கரன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது பாடசாலையின் சகல விளையாட்டுப் போட்டிகளுக்கும் மாணவர்களை அழைத்துச் சென்று அவர்களின் தேவையறிந்து அவ்வப்போது உதவி புரிந்து வெற்றிக்கு வழிவகுத்த ஆசிரியர் திரு. நா. இராஜகுமாரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியும் பாராட்டுதல்களும் உரித்தாகட்டும்.

விளையாட்டுத்துறையில் எமது பாடசாலையின் இத்தகைய வெற்றிகளுக்கு அவ்வப்போது தேவயையான நுட்பங்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய இளைப்பாறிய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளரும் தற்போதைய யாழ் பல்கலைக்கழக உடற்பயிற்சி விரிவுரையாளர் திரு. K. நாகமணி அவர்களுக்கும், ஒய்வு பெற்ற உடற்கல்விச் சேவைக்கால ஆலோசகர் திரு முருகேசு அவர்களுக்கும் எமது பாடசாலை சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

## சாரணியம்

எமது பாடசாலையில் சாரணிய செயற்பாடுகள் 1998இல் இருந்து திருமதி ந. சந்திரகுமார் ஆசிரியையின் வழிகாட்டலில் மறுசீரமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் ஓர் ஆண் ஆசிரியர் இன்மையால் சாரணியச் செயற்பாடுகளைத் தொடர்ந்து செயற்படுத்துவதில் சிரமமாக உள்ளது.

## ஒழுக்காற்றுத்துறை

பொறுப்பாசிரியர் செல்வி. ஸ்ரீவதனி ஆறுமுகராஜாவுடன் இணைந்து ஒன்பது ஆசிரியர்களின் வழிகாட்டலில் இம்மன்றம் 21 மாணவர் தலைவர்களுடன் பாடசாலை மாணவர்களது ஒழுக்கத்தை நிலைநாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## இந்துமாமன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | - திருமதி. வி. பாஸ்கரன் |
| தலைவர் | - க. உஜித்தா |
| செயலாளர் | - வ. விஜயலட்சுமி |
| பொருளாளர் | - வி. பிரசன்னா |

இக்கழகம் தினந்தோறும் நடைபெறும் காலைப்பிரார்த்தனை ஒழுங்குகளை நெறியாழ்கை செய்து வருகின்றது. குருபூசை தினங்கள், மற்றும் விசேட சைவ சமய தினங்கள் ஆகியன உரிய முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன. சிவராத்திரி தினத்தில் விஷேட பூசை வழிபாடுகள் நடைபெறும் பாடசாலையில் உள்ள வைரவப் பெருமானின் மணவாளக் கோலம் வருடந்தோறும் சிறப்பாக இம் மன்றத்தின் உதவியுடன் கொண்டாடப்படுகிறது.

## ஆரம்பக் கல்வி மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்கள் | - திருமதி. அ. சிவஞானம் |
| | திருமதி. க. சிவப்பிரகாசம் |
| தலைவர் | - செல்வி. வி. தர்சினி |
| செயலாளர் | - செல்வன். க. கார்த்திகன் |
| பொருளாளர் | - செல்வி. கு. அஜந்திகா |

இம் மன்றம் மாதந்தோறும் மாணவர்களிடையே மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக் கொணரும் முகமாக இயங்கிவருகிறது. தரம் ஒன்று தொடக்கம் தரம ஐந்து வரை உள்ள மாணவர்களின் நிகழ்ச்சிகள் ஆசிரியர்களுடைய வழிகாட்டலுடன் சிறந்த முறையில் மேடையேற்றப்படுகின்றன.

## கவின்கலை மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்கள் | - திருமதி. G. கணேசலிங்கம் |
| | திருமதி. சா. புஸ்பநாதன் |
| தலைவர் | - செல்வன். ஜெ. ரேகானந்தன் |
| செயலாளர் | - செல்வி. ச. ரேணுகா |
| பொருளாளர் | - செல்வி. பா.சுபாசினி |

இம் மன்றம் மாணவர்களின் கவின்கலை உணர்வையும் ஆற்றலையும் வளர்க்கும் நோக்குடனும் கவின்கலையின் முக்கியத்துவத்தை உணர வைக்கும் நோக்குடனும் செயற்பட்டுவருகின்றது. நடனத்துறையில் எமது மாணவர்கள் பங்குபற்றி கோட்ட, வலய, மாவட்ட மட்டத்திலும், இசைத்துறையில் கோட்டத்திலும் பரிசில்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்து சமய அபிவிருத்திச் சங்கப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களைப் பெற வழி வகுக்கின்றது.

## மனைப்பொருளியல் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | - திருமதி. ஜீ. மகிழ்ராஜதுரை |
| தலைவர் | - செல்வி. அ. தர்சினி |
| செயலாளர் | - செல்வி. செ. விஜிதா |
| பொருளாளர் | - செல்வி. கு. சுதாஜினி |

பாடசாலையில் நடைபெறும் சகல வைபவங்களுக்கும் பங்களிப்பை நல்குவதோடு மாணவரிடையே விருந்தோம்பல், சிக்கனம், சேமிப்பு ஆகிய பண்புகளையும் வளர்த்து வருகின்றது. மற்றும் மனைப் பொருளியல் போட்டிகளில் பங்குபற்றி கோட்ட வலய மட்டங்களில் முதன்மை இடத்தையும் பெற்றுவருகிறது. கல்விக் கண்காட்சியில் மாணவரை ஈடுபடுத்துவவதுடன் பரிசில்களையும் பெற்றுள்ளது.

## சமூகக் கல்வி மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | - திரு. நா. இராஜகுமாரன் |
| தலைவர் | - செல்வன். சி. சுரேஷ் |
| செயலாளர் | - செல்வி. த. ஜீவனா |
| பொருளாளர் | - செல்வன். ச. றொபின்சன் |

இம் மன்றம் மாதந்தோறும் வினாடிவினாப் போட்டியினை நடாத்தி கோட்ட மட்டத்தில் நடைபெறுகின்ற போட்டிகளுக்குத் தயார்ப்படுத்துகிறது. கல்விக் கண்காட்சியிலும் மாணவரை ஈடுபடச் செய்து பரிசில்களையும் பெற்றுள்ளது.

வணிக மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | - திருமதி. ஜெ. மகேந்திரன் |
| தலைவர் | - செல்வி. க. சிந்துஜானி |
| செயலாளர் | - செல்வி. த. ஷகிலா |
| பொருளாளர் | - செல்வன். லோ. தீபக் |

இம் மன்றம் மாதந்தோறும் கூடி நாளாந்த வணிக மன்றங்களைப் பற்றிக் கலந்துரையாடுகிறது. மேலும் வணிகப் போட்டிகளுக்கும் மாணவரைத் தயார்படுத்துவதுடன் வணிகக் கண்காட்சிக்கும் அழைத்துச் சென்று கோட்ட, வலய மட்ட பல பரிசில்களைப் பெற்றுள்ளது.

## தமிழ் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்கள் | - திருமதி. ச. இராஜசேகரம் |
| | திருமதி. அ. சிவஞானம் |
| தலைவர் | - செல்வி. க. ஜெனந்தினி |
| செயலாளர் | - செல்வி. பு. அனுஷிபா |
| பொருளாளர் | - செல்வி. சீ. தயாழினி |

இத் தமிழ் மன்றம் மாதந்தோறும் தனது செயற்பாடுகளைச் சிறப்பாக செய்து வருகின்றது. தமிழ்த் தினப் போட்டிகளுக்கு இம் மன்றத்தின் செயற்பாடுகள் உறுதுணையாக அமைகின்றன. மாணவர்களிடையே மறைந்துள்ள ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன.

## கணித விஞ்ஞான மன்றம்

பொறுப்பாசிரியர்கள் - 1. செல்வி. த. கனகசபை
2. செல்வி. ஆ. ஸ்ரீவதனி
3. திருமதி. ந. சந்திரகுமார்
தலைவர் - செல்வி. ஜெ. மதனரூபி
செயலாளர் - செல்வி. பொ. தீபகா
பொருளாளர் - செல்வன். மா. கிறிஸ்ரி கொன்சலஸ்

இம் மன்றம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வெள்ளிக்கிழமை 8ம் பாடவேளை பாடசாலை மண்டபத்தில் கூடுகின்றது. பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலுடன் கருத்தரங்குகள் பாட மேம்பாடு, வினா விடைப்போட்டிகள் போன்ற விஞ்ஞான கணித ரீதியான நிகழ்ச்சிகள் வகுப்பு மாணவரிடையே நடாத்தப்பட்டு வருகின்றது.

## சுகாதாரக் கழகம்

பொறுப்பாசிரியர்கள் - திருமதி. ஜெ. மகேந்திரன்
திருமதி. வி. பாஸ்கரன்
தலைவர் - செல்வன். ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ்
செயலாளர் - செல்வி. க. ஜெனந்தினி
பொருளாளர் - செல்வி. செ. விஜிதா

இச் சுகாதாரக் கழக உறுப்பினர் நேரத்துடன் பாடசாலைக்கு வருகைதந்து பாடசாலைச் சுத்தம், மாணவர் சுத்தம் என்பவற்றைக் கவனிக்கிறது. காலத்துக்காலம் சுகாதாரப் பரிசோதகர்களை அழைத்து மாணவர்களின் உடல் நலத்தைப் பேணுகிறது.

## கோட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றி பெற்ற விபரம்

ஆண்கள் அணி

1995 - 1ம் இடம்
1997 - 1ம் இடம்
1998 - 2ம் இடம்
1999 - 1ம் இடம்
2000 - 1ம் இடம்
2001 - 1ம் இடம்
2002 - 1ம் இடம்

பெண்கள் அணி

1998 - 2ம் இடம்

## வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றி பெற்ற விபரம்

ஆண்கள் அணி

1995 - 2ம் இடம்
1997 - 1ம் இடம்
1998 - 2ம் இடம்
1999 - 1ம் இடம்
2000 - 1ம் இடம்
2001 - 1ம் இடம்
2002 - 1ம் இடம்

# கரப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற விபரம்

15 வயதின் கீழ் ஆண்

| ஆண்டு | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 2002 | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |

17 வயதின் கீழ் ஆண்

| ஆண்டு | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1998 | 3ம் இடம் | | |
| 2000 | 2ம் இடம் | | |
| 2001 | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் |
| 2002 | 1ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் |

19 வயதின் கீழ் ஆண்

| ஆண்டு | கோட்டம் |
|---|---|
| 1998 | 3ம் இடம் |
| 2001 | 2ம் இடம் |
| 2002 | 1ம் இடம் |

# கோட்ட மட்ட வலைப்பந்து போட்டிகளில் வெற்றி பெற்ற விபரம்

2002 15 வயதின் கீழ் பெண் - 2ம் இடம்
2002 19 வயதின் கீழ் பெண் - 3ம் இடம்

## போட்டிகள்

### தமிழ்மொழி சம்பந்தமான போட்டிகள்

### கோட்ட மட்டம்

2000

1. மகளிர் தினக் கட்டுரைப்போட்டி - 1ம் இடம்
   செல்வி. க. ஜெனந்தினி

2. சஞ்சிகை ஆக்கம் - 2ம் இடம்
   தரம் 8, 9 மாணவர்கள்

3. தமிழ் மொழித் தினம்
   இசை தனி - 3ம் இடம் செல்வி. பு. அனுஷியா
   சிந்து நடைக்கூத்து - 1ம் இடம்

2001

1. சிறுவர் தினப் போட்டி
   கட்டுரை - 2ம் இடம் - செல்வி. க. ஜெனந்தினி
2. தமிழ் மொழித்தினம்
   கட்டுரை - 1ம் இடம் - செல்வி. செ. விஜிதா
   தனிநடனம் - 1ம் இடம் - செல்வி. பொ. தீபகா
3. முதியோர் வாரம்
   கட்டுரை - 2ம் இடம் - செல்வி. க. ஜெனந்தினி
4. அன்பு வாரம்
   கட்டுரை - 2ம் இடம் - செல்வி. க. ஜெனந்தினி
   கவிதை - 1ம் இடம் - செல்வி. க. ஜெனந்தினி

2002

1. மகளிர் தினக் கட்டுரைப்போட்டி
   1ம் இடம் - செல்வி. பொ. தீவப்பிரியா
   2ம் இடம் - செல்வி. க. ஜெனந்தினி

2. தமிழ் தினப்போட்டி
   வாசிப்பு 3ம் இடம் - செல்வி. வி. தர்சினி
   தனி இசை 2ம் இடம் - செல்வி. ம. சிந்துஜா
   தனி இசை 3ம் இடம் - செல்வி. பு. அனுஷியா

3. முதியோர் தினக்கட்டுரைப் போட்டி
   க. ஜெனந்தினி - 1ம் இடம்

## பாடரீதியான போட்டிகள்

### ஆங்கில தினப் போட்டிகள்

கோட்ட மட்டம்

2000

1. Copy writing - 3ம் இடம் செல்வி. அ. சிந்துஜா
2. Copy writing - 1ம் இடம் செல்வி. செ. விஜிதா
3. Dictation - 3ம் இடம் செல்வி. செ. விஜிதா
4. Dictation - 3ம் இடம் செல்வி. க. சிந்துஜானி

2001

1. Copy writing - 3ம் இடம் செல்வி. த. மலர்விழி
2. Copy writing - 3ம் இடம் செல்வி. க. சிந்துஜானி
3. Dictation - 3ம் இடம் செல்வி. வி. தர்சினி

2001

1. விவசாய வினாவிடைப்போட்டி - கோட்ட மட்டம்
   1. 1ம் இடம் செல்வி. த. சுகாஜினி
   2. 2ம் இடம் செல்வி. க. ரஜந்தா

2. சகல கலாவல்லி மாலைப்போட்டி - கோட்ட மட்டம்
   1. 3ம் இடம் செல்வி. கு. தாரணி

3. சமூகக்கல்விப் போட்டிகள் - கோட்ட மட்டம்
   1. கண்காட்சி - 3ம் இடம் செல்வன். சி. ஜெனிபர்
   2. வினாவிடை - 1ம் இடம் செல்வி. க. சிந்துஜானி
   3. வினாவிடை - 3ம் இடம் செல்வி. கு, கஜேந்தினி

4. கணித விஞ்ஞானப் போட்டிகள் : கோட்டமட்டம்
   1. 3ம் இடம் : செல்வி. கு. கஜேந்தினி - தரம் 07
   2. 2ம் இடம் செல்வி. க. சிந்துஜானி - தரம் 11
   3. 4ம் இடம் செல்வி. சி. சுரேக்கா - தரம் 06

## வணிக பாடப்போட்டி

1997

1. கணக்கியல் அறிவுப் போட்டி
   செ. செல்வநாயகி - கோட்டம் 1ம் இடம், வலயம் 2ம் இடம்
2. கட்புல சாதன ஆக்கப்போட்டி
   சி. குகதர்சினி - கோட்டம் 4ம் இடம்

1998

1. கணக்கியல் அறிவுப் போட்டி
   ந. ரஜினகுமார் - கோட்டம் 2ம் இடம்
   சி. குணாளினி - கோட்டம் 4ம் இடம்

1999 வினாடி வினாப் போட்டி
செ. செல்வநாயகி கோட்டம் 3ம் இடம்
யே. ஜெயந்தி கோட்டம் 3ம் இடம்
கு. சுதாஜினி கோட்டம் 3ம் இடம்
இ. தேவராணி கோட்டம் 3ம் இடம்

2000 கட்புல சாதன ஆக்கப் போட்டி
க. காந்தநேசன் கோட்டம் - 1ம் இடம்
வே. செந்துருபன் கோட்டம் - 1ம் இடம்
பொ. யோகேஸ்வரன் கோட்டம் - 1ம் இடம்
கு. தாரணி கோட்டம் - 5ம் இடம்

2001 கட்புல ஆக்க சாதனப் போட்டி
பகுதிக்கடை - கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவை.
நிறுவன அமைப்பு - கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவை.

## மனைப்பொருளியல் சம்பந்தமான போட்டிகள்

**கோட்ட மட்டம்**

1997 1. ஆக்கத்திறன்
   1. செல்வன் அ. பார்த்திபன் - 2ம் இடம் (தரம் -4)
   2. செல்வன் இ. பிரதீபன் - 2ம் இடம் (தரம் -6)

2. தையற் போட்டி
   1. செல்வன் சி. வசந்ததாசன் - 3ம் இடம் (தரம் -4)
   2. செல்வன் சி. காந்தநேசன் - 2ம் இடம் (தரம் -7)

3. பொக்கே செய்தல்
   1. செல்வன் அ. அகிலன் - 1ம் இடம் (தரம் - 8)
   2. செல்வி. இ. சயந்தினி - 3ம் இடம் (தரம் -8)
   3. செல்வி. பு. ஜெயசோதி - 2ம் இடம் (தரம் 9)
   4. செல்வன். த. நித்தியதயாளன் 3ம் இடம் (தரம் 9)

4. மாலை கட்டுதல்
   1. செல்வி. த. நிரோஜினி - 1ம் இடம் (தரம் 10)

5. கோலம் போடுதல்
   1. செல்வி. த. மகேஸ்வரி - 3ம் இடம் (தரம் 11)

1998 1. மாலை கட்டுதல்
   1. செல்வி. க. பேபிசந்திரா - 1ம் இடம்
   2. செல்வி. ச. கிருபாலினி - 2ம் இடம்

2000 1. குறுவினாவிடைப் போட்டி
   1. செல்வி. சி. விஜயராணி - 5ம் இடம்

2. பூ செய்தல்
   1. செல்வன் வே. செந்துருபன் 1ம் இடம் (தரம் 10)
   2. செல்வன் க. திலகராஜ் - 2ம் இடம் (தரம் 10)

2001 1. கண்காட்சி வலயமட்டம்
   1. ப. செல்வி. ப. துசிதா - பெயின்ரிங் 1ம் இடம் (தரம் 10)
   2. செல்வி. த. தாமரை வாணி - ஐசிங் - 2ம் இடம் (தரம் 10)
   3. செல்வி. ந. பிரியதர்சினி - சஞ்சிகை - 3ம் இடம் (தரம் 11)

2. வினாவிடைப் போட்டி - கோட்டம்
   1. செல்வி. அ. தர்சினி- 1ம் இடம் (தரம் 10)
   2. செல்வி. ப. துசிதா - 3ம் இடம் (தரம் 10)
   3. செல்வி. ந. பிரியதர்சினி 2ம் இடம் (தரம் 11)

3. வினாவிடைப் போட்டி வலயம்
   1. செல்வி. ந. பிரியதர்சினி - 1ம் இடம் (தரம் 11)
   2. செல்வி. ப. துசிதா - 3ம் இடம் (தரம் 10)
   3. செல்வி. அ. தர்சினி - 4ம் இடம் (தரம் 10)

2002 1. குறுவினாப் போட்டி - கோட்டம்
   1. செல்வி. செ. விஜிதா - 1ம் இடம் (தரம் 10)
   2. செல்வி. வ. விஜயலட்சுமி - 2ம் இடம் (தரம் 10)
   3. செல்வி. அ. தர்சினி - 1ம் இடம் (தரம் 11)

2. குறுவினாப் போட்டி - வலயம்
   1. செல்வி. செ. விஜிதா - 1ம் இடம் (தரம் 10)
   2. செல்வி. வ. விஜயலட்சுமி - 2ம் இடம் (தரம் 10)
   3. செல்வி. அ. தர்சினி - 1ம் இடம் (தரம் 11)

பாட விதானத்துடன் இணைந்த சகல போட்டிகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றி வெற்றி பெற்றுவருகின்றனர். இவற்றில் குறிப்பாக வணிக மன்றப் போட்டிகள், மனைப் பொருளியல் போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றிக்கு இப்பாடங்களைப் போதித்த திருமதி. ஜெ. மகேந்திரன், திருமதி. ஜீ. மகிழ்ராஜதுரை ஆகிய இருவரதும் அயராத முயற்சியே காரணமாகும். இவர்களது பணிமேலும் தொடர இவர்களை வாழ்த்துகின்றேன்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், இசை, சமூகக்கல்வி போன்ற துறைகள் முன்னேற வேண்டிய துறைகளாக உள்ளன. இதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு இனிவரும் காலங்களில் பரிசில்களைப் பெற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

## பாடசாலை வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்பு

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 225 உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகின்றது. ஆரம்பத்தில் திரு. ஜெயரட்ணம் அவர்களும் தற்போது திரு. க. மனோகரன் அவர்களும் செயலாளராகக் கடமையாற்றுகின்றனர். இவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருகின்றனர். தற்போதைய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. க. மனோகரன் அவர்கள் கடந்த 5 வருடங்களாக பாடசாலை மாணவர்களுக்கு சிந்து நடைக்கூத்தினைப் பயிற்றுவித்து நாடகத்துறை வளர்ச்சிக்கு பேருதவி புரிந்துள்ளார். இவ்வருடம் ரூ 20,000 க்கு மேற்பட்ட பணத்தை செலவழித்து ஒரு நாடக விழாவை நடத்தி பாடசாலை அபிவிருத்திக்கு நிதி திரட்டுவதற்குப் பேருதவியாக இருந்துள்ளார். அவரது அயராத முயற்சியும், பாடசாலைப் பற்றும், கலைத்துறை ஆற்றலும் எமது பாடசாலைக்குக் கிடைத்த மாபெரும் அதிஷ்டம் என்றே கூறவேண்டும். தன்னலமற்ற சேவை கொண்ட செயலாளரையும் அவரது குடும்பத்தையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன். ஓய்வு பெற்ற உபஅதிபர் திரு. க. கதிரேசு அவர்கள் இச்சங்கத்தின் நலன் விரும்பியாக ஆரம்ப காலத்தில் இருந்தே செயற்பட்டு பாடசாலை வளர்ச்சிக்கு அவ்வப்போது பல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார். அவருக்கு இங்கே எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திரு. வே. குலசிங்கம் பாடசாலையின் சகல விழாக்களிலும் முன்னின்று உதவிகளையும் ஒத்தாசைகளையும் புரிவதுடன், இவருடன் சேர்ந்து சி. இராசசிவகுமார் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதிலும் அயராது அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றார். இவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

2002ஆம் ஆண்டில் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியுதவியுடனும், பெற்றோர் அன்பளிப்புடனும் பாடசாலையின் வடகிழக்கு மூலையில் உள்ள ஒரு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் சகல நிர்வாக சபை உறுப்பினர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பை நல்கிவருகின்றனர். இவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

## பாடசாலை வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு

இச்சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பாடசாலை வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டவர்களாகவும், தங்களுடைய அயராத முயற்சிகளால் இணைபாடவிதான வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். திரு. இ. பாலசுந்தரம்பிள்ளையவர்கள், ஆரம்ப காலத்தில் இருந்தே பாடசாலை வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்து வருவதுடன் அவருடைய மகன் பா. தர்மசீலன் அவர்களால் அளிக்கப்பட்ட 50,000/= ரூபாவை பாடசாலைக் கல்வி அபிவிருத்தி நிதியாக அளித்துள்ளார். பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் அவரும் அவர் மகனும் கொண்ட ஆர்வமும், ஈடுபாடும் எமது பாடசாலை ஏழைச்சிறார்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

பொருளாளர் திரு. பொ. பிரபாகரன், செயலாளர் திரு. க. பிரபாகரன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் திரு. அ. கருணாமூர்த்தி, திரு. இ. கோபிநாத், திரு. நா. சதீஸ்குமார், திரு. வி. விஜயராஜ், திரு. வி. சங்கீவன், திரு. இ. குகதாசன், திரு. தெ. தேசிங்கராஜா, திரு. சி. திலீபன், திரு. ந. வரதன், செல்வி. ந. மகேஸ்வரி, திரு. தெ. தேவராசா, திரு. நா. சுரேஷ்குமார், திரு. த. சரத்பாபு திரு. க. தெய்வீகன், செல்வன். வே. செந்துருபன், செல்வன், பொ. யோகேஸ்வரன், திரு. சு. சந்திரலிங்கம், திரு. மு. கௌரி காந்தன் க. முரளிதரன் ஆகியோர் பாடசாலை வளர்ச்சியில் அயராது உழைத்து வருகின்றனர். இவர்கள் பாடசாலை விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவித்து போட்டிகளுக்கு அழைத்துச் செல்வதுடன் சகல நிகழ்வுகளிலும் முன்னின்று உழைத்து வருகின்றனர். இவர்களது பேருதவிகளால் இன்று பாடசாலை வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதை என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இவர்களது ஒத்துழைப்புத் தொடர்ந்து எமது பாடசாலைக்கு இருக்கும் என நம்புகிறேன்.

பழைய மாணவர் சிலர் வெளிநாட்டில் இருந்து இங்கு வந்ததும் பாடசாலை அபிவிருத்திக்கென நிதியுதவி வழங்கி உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நான் எமது பாடசாலை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது பழைய மாணவர் சங்க உறுப்பினர் பிரம்மஸ்ரீ இ. வாகீஸ்வரசர்மா அவர்கள் புலமைப் பரிசில் நிதியத்துககென ரு 25000 ஐ தாமாக விரும்பு அன்பளிப்புச் செய்துள்ளார். இவரது தந்தையார் பிரம்மஸ்ரீ செ. இராமலிங்கசர்மா அவர்கள் இப்பாடசாலையில் முன்னாள் ஆசிரியராகக் கடமையாற்றியவர். சமஸ்கிருதத்தில் மிகவும் புலமை பெற்றவர். தனது தந்தையார் பிரம்மஸ்ரீ செ. இராமலிங்க ஐயரதும், தாயார் திருமதி. இ. உருத்திராணி அம்மா அவர்களதும் ஞாபகார்த்த அன்பளிப்பாக அவர்களுடைய மகன் இ. வாகீஸ்வர சர்மா அவர்கள் செய்த அன்பளிப்பு புலமைப் பரிசில் நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இவருக்குப் பாடசாலை சார்பில் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

எமது பாடசாலைப் பழைய மாணவர் திரு. து. இராமச்சந்திரன் (கண்ணன்) பாடசாலையின் ஏழை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக புலமைப்பரிசில் நிதியை வருடாவருடம் அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளார். இவரது அன்பளிப்புப் பணம் 5ம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் 2001ம் ஆண்டில் வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவி செல்வி. சுரேக்கா - சிவதாசனுக்கு வருடாவருடம் வழங்கப்படவுள்ளது. பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் கரிசனையும், விழிப்புணர்வும் கொண்ட திரு. து. இராமச்சந்திரன் அவர்களால் மனமுவந்து அளிக்கப்படும் இத்தகைய உதவி எமது பாடசாலைச் சமூகத்தினால் வரவேற்கப்படுகின்றது. இவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சுதுமலையைச் சேர்ந்த 'மணியண்ணை' என அழைக்கப்படும் திரு. K.S. சுப்பிரமணியம் என்ற பழைய மாணவர் எமது பாடசாலைக்கு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ந. ரவிராஜ் அவர்களிடம் இருந்து 'பாண்ட்' இசைக் கருவிகளைப் பெறவும் ஏனைய உதவிகள் பெறவும் பெரும் உதவிகள் புரிந்து வருகின்றனர். திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும், எமது பாடசாலை சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை வளர்ச்சிக்கு ரு 5000/- க்கு மேற்பட்ட நிதியுதவியை வழங்கியோர்

| | | ரூபா.சதம் |
|---|---|---|
| 1. | திரு. இந்திரன் காராளசிங்கம் (சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) | 50,000.00 |
| 2. | திரு. பாலசுந்தரம் நிர்மசீலன் (சுவிஸ்) | 50,000.00 |
| 3. | திரு. பாலசுப்பிரமணியம் காசிநாதன் (சுவிஸ்) | 25,828.00 |
| 4. | திரு. கந்தசாமி சந்திரன் | 10,000.00 |
| 5. | திரு. இராஜநாயகம் பாஸ்கரன் | 10,000.00 |
| 6. | திரு. தங்கவேலாயுதம் சுரேஷ் | 10,000.00 |
| 7. | திருமதி. ஜெயந்தி | 10,000.00 |
| 8. | திரு. க. கதிரேசு (முன்னாள் உபஅதிபர்) | 5,000.00 |
| 9. | திரு. பரஞ்சோதிநாதன் | 5,000.00 |
| 10. | திரு. கந்தசாமி சந்திரகுமார் | 15000,00 |

# 2002இல் நடைபெற்ற நாடகவிழா சீட்டிழுப்புக்குப் பொருள் உதவி புரிந்தோர்

1. திரு. அ. யோகராசா - 1ம் பரிசு அன்பளிப்பு - சைக்கிள்
2. திரு. பொ. பிரபாகரன் - 2ம் பரிசு அன்பளிப்பு - பெற்றோமக்ஸ்
3. திரு. த. தர்மலிங்கம் - 3ம் பரிசு அன்பளிப்பு - மின்னடுப்பு (இணைக்கப்பட்ட அதிபர்)

திரு. இந்திரன் காராளசிங்கம் அவர்கள் ஏழை மாணவரது கல்வி வளர்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டு உழைக்கின்ற ஒரு வள்ளல் ஆவார். கட்டடிடங்களையும் தேவைப்படு ஏனைய உதவிகளையும் காலம் அறிந்து, தேவை அறிந்து வாரி வழங்கும் பண்பாளன். இவர் சுதுமலை சிந்மய பாரதியிலும் மானி/ மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் கட்டிடங்களைக் கட்டியதுடன் பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கெனப் பெரும் நிதியுதவிகளையும் புரிந்துள்ளார்.

எமது பாடசாலைக்கும் நிதியுதவி அளிக்குமாறு கேட்டபோது இவர் மனம் உவந்து முன்வந்து ரூ. 53,000/= ஐ அன்பளிப்புச் செய்ததுடன் எமது மாணவி செல்வி. டயானி (தரம் 7A) க்கு திருக்குறள் மனனத் திறமையைக் கண்டு உடனே தனது பணத்தில் நாம் 1000/= வை வழங்கியமை என்றும் மறக்க முடியாத நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஒரு செயலாகும். இவருக்கு எமது பாடசாலை சார்பாக நன்றிகளைத் தெவித்துக் கொள்கிறேன்.

# புலமைப் பரிசில் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | | ரூபா.சதம் |
|---|---|---|
| 1. | இந் நிதியம் 1998ம் ஆண்டில் திருமதி அப்பச்சி மகாலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. | 2000.00 |
| 2. | அமரர் அப்பச்சி மகாலிங்கம் (முன்னாள் அதிபர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்) அவரது ஞாபகார்த்தமாக அவரது பேர்த்தி நிஷானி சிவனேசகாந்தன் அவர்களால் வழங்கப்பட்டது. | 10,000.00 |
| 3. | அமரர்களான பிரம்மஸ்ரீ செ. இராமலிங்க ஐயர் (முன்னாள் சமஸ்கிருத ஆசிரியர் யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்) இ. உருத்திராணி அம்மா ஆகியோர்களது ஞாபகார்த்தமாக அவர்களது மகன் பிரம்மஸ்ரீ இ. வாகீஸ்வரசர்மா (குட்டான் ஐயா) அவர்களால் வழங்கப்பட்டது. | 25,000.00 |
| 4. | திரு. த. இராமச்சந்திரன் (கண்ணன் கடை)அவர்களால் 2001 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளியைப் பெற்ற செல்வி. சிவதாசன் சுரேக்கா எனும் மாணவிக்கு வருடா வருடம் புலமைப்பரிசில் நிதியாக வழங்க முன் வந்துள்ளார். | 2000.00 |
| 5. | திருமதி. சரஸ்வதி குமாரசாமி (ஓய்வு பெற்ற உப அதிபர்) கமலவாசா ஆனைக்கோட்டை | 3000.00 |
| 6. | திரு. இந்திரன் காராளசிங்கம் சுதுமலை மானிப்பாய் | 3000.00 |
| 7. | திருமதி கமலராணி லோகேஸ்வரன் ஓய்வு பெற்ற ஆசிரியை நவாலி | 1000.00 |

# பாடசாலை வளர்ச்சிக்குப் பொருள் உதவி புரிந்தோர்

ரூபா சதம்

1. திரு. க. சாந்தகுமார் (சந்திரன்) கணனியும் அதன் உபகரணங்களும் 100100.00

2. திரு. எஸ். இராமேஸ்வரன் (கௌரி அழகுமாடம்)
   1. வெற்றிக் கிண்ணம், கேடயங்கள் 10000.00
   2. 1998, 1999 பரிசளிப்பு விழாவுக்கான சகல பரிசுகளும்
   3. பாடசாலைப் பெயர்கொண்ட முகப்பு வளைவு 35000.00

3. திரு. க. மனோகரன் (பா.அ.ச.செயலாளர்)
   நாடக விழாவுக்காக நாடகம் 20000.00

4. திரு. க. கதிரேசு (முன்னாள் உப அதிபர்)
   உடற்பயிற்சி அணியினருக்கான சீருடை

5. திரு. க. பிரபாகரன் (பழைய மாணவர்)
   1. ஜிம்னாஸ்டிக் உபகரணம் 2. பாடசாலைக்கொடி
   3. கரபந்தாட்ட அணியினருக்கான முழங்கால் கவசம் ஆறுசோடி

6. திரு. வை. சந்திரராஜா (கிராமசேவையாளர் ஆனைக்கோட்டை)
   கரப்பந்தாட்ட அணியினருக்கான சீருடை

7. திரு. து. இராமச்சந்திரன் (கண்ணன் கடை)
   து. பாலவச்சந்திரன் ஞாபகார்த்தமாக 'Speach Stand'

8. திரு. செ. வரதராஜன் (முருகன் கபே)
   பாடசாலை எந்த நிகழ்வுக்கும் சிற்றுண்டி இலவசமாக வழங்கி வருகிறார்

9. திரு. நா. சிவசுந்தரம் (செல்வநாயகி பந்தல் சேவை)
   பாடசாலை நிகழ்வுகளுக்கு இலவச பந்தல் சேவை)

10. திருமதி. கு. புஷ்பராஜா (பா.அ.ச.உறுப்பினர்)
    நாடக விழா கலைஞர்களுக்கு சிற்றுண்டி, இராப் போசனம் என்பன இலவசம்

11. திரு. த. திருச்செல்வம்
    பவளவிழா மலருக்கான சகல படங்களையும் இலவசமாக எடுத்துள்ளார். தண்ணீர்க் குழாய்களை இலவசமாக இணைத்து உதவினார்.

மிக அமைதியாக அடக்கமாக நடைபெறும் இன்றைய நிகழ்வில் பரிசுத்தின அறிக்கையில் ஏதும் தவறு விடப்பட்டிருப்பின் அவை அடுத்த அறிக்கையில் இடம்பெறும் எனக் குறிப்பிட்டு நேரத்தையும் கவனத்தில் கொண்டு நன்றியுடன் எனது அதிபர் அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

❋ ❋ ❋

## ஆசிரியர் குழாம் - 2002



## யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சம்பியன் 2001 - 17 வயதின் கீழ் ஆண்



இருப்பவர்கள் : திரு.சுந்தரலிங்கம், திருமதி.கொ.கணேசலிங்கம், செல்வி.ஸ்ரீ.ஆறுமுகராஜா, திருமதி.சூ.ஜெயவீரசிங்கம்(அதிபர்), திருமதி.ந.சந்திரகுமார், செல்வன்.இ.கோபிநாத், திரு.நா.ராஜகுமாரன்

நிற்பவர்கள் : அ.அனுரதன், க.சதீஸ்கரன், ந.டிஸ்லேஸ்குமார், சி.தீபன், சு.றொபின்சன், இ.தர்மேந்திரா, ப.ஜெனகரன், ஸ்ரீ.நித்தியாபரன், இ.செந்தூரன்

# PERMANENT TEACHERS 2002

| *NAME OF TEACHERS* | *GRADE* | *QUALIFICATION* |
|---|---|---|
| 1. MRS. S. JEAVEERASINGHAM | SLPS 1 | |
| | CLASS 1 | B.A.DIP. IN EDU. |
| 2. MR. T. THARMALINGAM | SLPS 1 | HINDUISM TRD. |
| 3. MR. T. SRITHARAN | | MANAGEMENT ASST. B.A. |
| 4. MRS. G. GANESHALINGAM | CLASS 1 | MUSIC .TRD. |
| 5. MISS. T. KANAGASABAI | 2.1 | SCI. TRD. B.A. DIP. IN EDU. |
| 6. MISS. S. ARUMUGARAJAH | 2.11 | MATHS. TRD. B.COM |
| 7. MRS. N. CHANDRAKUMAR | 2.11 | MATHS. TRD. |
| 8. MRS. S. PUSPANATHAN | 2.11 | DIP. IN DANCE |
| 9. MRS. J. MAHENDRAN | 2.11 | COM. TRD. B.COM |
| 10. MRS. V. BASKARAN | 2.11 | PHY. TRD. |
| 11. MRS .A. SIVAGNANAM | 2.11 | PRI.TRD, B.A.DIP. IN. EDU. |
| 12. MRS. N. MAHILRAJADURAI | 2.11 | H.SCI. TRD. |
| 13. MR. N. RAJAKUMARAN | 3.1 | B.COM |
| 14. MRS. S. RAJASEKARAM | 3.1 | TAMIL TRD. B.A. |
| 15. MRS. T. BASKARAN | 3.1 | PRI. TRD |
| 16. MISS. V. PONNAN | 3.1 | PRI. TRD |
| 17. MRS. N. PARAMANATHAN | 3.1 | PRI. TRD |
| 18. MISS. S. MUTHULINGAM | 3.1 | SCI. TRD |
| 19. MISS. V. THARMASEKARAM | | TRAINEE |
| 20. MRS. P. VIGNESWARAN | | TRAINEE |
| 21. MR. K. K. RAMANAN | | TRAINEE |

## DISPLACED TEACHERS

| | | |
|---|---|---|
| 1 MR. S. RAMALINGAM | SLPS 1 | B.A. DIP. IN EDU. |
| 2 MRS. P. THAYAVATHY | | MANAGEMENT ASST. |
| 3 MRS. K. SIVAPIRAGASAM | SLTS 1 | PRI. TRD |
| 4 MR. J. JAYANTHAN | 3.1 | DIP. IN. PRI. |
| 5 MRS. V. THAYAPARY | | TRAINEE |
| 6 MR. K. VISHNUKANTHAN | 3.1 | SCI. TRD |
| 7 MRS. S. KULAVEERASINGAM | 2.11 | PRI. TRD. |
| 8. MR. MAHINDAN | 2.11 | B.S.C, MATHS. TRD. |

# எங்கள் பாடசாலை

இது எங்கள் பாடசாலை
எங்கள் பாட்டன், பாட்டி
அம்மா, அப்பா, மாமா மாமிக்கு
முன்னரே எங்கள் உறவினர்கள்
படித்த நல்ல பாடசாலை
பவளவிழா வந்தது
வாழ்க........ வாழ்க......... என்று
நாமும் வாழ்த்துவோம்

**செ. தயானா**
தரம் 1

# தாய்

"அ" எனும் எழுத்து அகர எழுத்துக்களில் முதன்மை பெறுவது போல அன்னையானவள் மானிடப் பிறப்பில் முதன்மை பெறுகிறாள். அவள் இல்லை என்றால் நாம் இவ்வுலகில் பிறந்திருக்க முடியாது. அவளே அன்னை. எமக்கு உயிர் கொடுத்தவள் அன்னையே. "அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்பது ஔவையார் வாக்கு. அதிலும் பெண்ணாகப் பிறத்தல் அரிது. பெண்ணாக மட்டும் பிறந்தால் போதாது. பெண்ணாணவள் தாய்மைப் பேற்றை அடையும்போது மேலும் சிறப்படைகிறாள். ஒரு அன்னை தன் உதிரத்தைப் பிள்ளைக்குப் பாலாக ஊட்டுகின்றாள். தனது நலத்தைப் பாராது இரவு பகல் முழுவதும் தன் பிள்ளைச் செல்வத்துக்கே தனது முழுநலனையும் வழங்குகின்றாள்.

ஒரு குழந்தை பிறந்து பெரியவனாகிச் சபையோர் முன்னிலையில் அல்லது சமூகத்தில் பண்புடனும், கல்வியறிவுடனும் மேம்பட்டு விளங்குகின்றான் என்றால், மற்றவர்கள் அப்பிள்ளையைப் பார்த்து "அவன் தாய் வளர்த்த வளர்ப்பு" "அவன் வளர்ந்த சூழல்" என்று கூறுவதை நாம் காணலாம். ஒரு பிள்ளை பிறக்கும்போது நல்ல குணமுடையவனாகப் பிறப்பதில்லை. அக்குழந்தை நல்லவனாவதும், தீயவனாவதும் அவன் அன்னை வளர்ப்பினிலே. இவற்றிலிருந்து ஒரு அன்னையின் பெருமையை அறிய முடிகின்றது.

ஆக்கம் :-
**பா. கஜேந்தினி**
தரம் - 4B

# முயற்சி திருவினையாக்கும்

"முயற்சி திருவினையாக்கும்" என்ற கூற்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளியதாகும்"

முயற்சி திருவினையாக்கும் முயற்சி
இன்மை புகுத்திவிடும்

என்று முயற்சியைப் பற்றிக் கூறும் அதிகாரத்தில் வருகின்ற ஒரு பா ஆகும்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற பழமொழியும் இதனையே வலியுறுத்துகின்றது. முயற்சி இல்லாமற் சோம்பி இருந்தால் அந்தச் சோம்பேறிகள் உள்ளத்தில் தீய எண்ணங்கள் உருவாகும். அவையாவன பொய், களவு, பொறாமை, பேராசை முதலியனவாகும். அவர்கள் தமது சொந்த உழைப்பில் நில்லாது, பிறரிற் தங்கி வாழும் இயல்பை அடைவர். இதனையே ஆங்கிலப் பழமொழி " சோம்பும் உள்ளம் பிசாசின் தொழிற்சாலை" எனக் கூறியுள்ளது. முயற்சியுடையோர் முன்னேறுவர். இதற்கு உதாரணமாக ஆபிரிகாம் இலிங்கன் சிறுவயதில் தோட்டத்தில் வேலை செய்து வாழ்ந்து புத்தகங்களை இரவல் வாங்கிப் படித்து அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக வந்தமை குறிப்பிடத்தக்கது.

சீரும் சிறப்புமகா வாழ மெய்வருத்தம் பாராது, கண் அயராது, எக்கருமத்திலும் முயற்சியிலேயே கண்ணும் கருத்துமாக இருப்போம்.

பா. பகீரதன்
தரம் - 4A

# நொடிகள்

1. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான் வெளியே இருந்தால் விரைவில் மடிவான் அவன் யார்?
2. கல்லிலே பூத்து வாயிலே சிவப்பான் அவன் யார்?
3. வருவது தெரியும் போவது தெரியாது அது என்ன?
4. காலிருக்கு நடக்காது கையிருக்கு உண்ணாது அது என்ன?
5. உயிர் இல்லா பிராணி ஊரெங்கும் மணக்கும் அது என்ன?
6. வெளியே வெள்ளி உள்ளே தங்கம் அது என்ன?
7. வெட்டி வெட்டி எரியும் எங்கள் வீட்டு விளக்கு அது என்ன?
8. வேகாத வெயிலில் வெள்ளையப்பன் விளையாடுவான் அது என்ன?
9. ஆயிரம் கண்கள் உள்ள தேவி ஆற்றிலே மூழ்கி வெய்யிலிலே காய்கிறாள் அது என்ன?
10. வெட்ட வெட்ட வெட்டுப்படாதது அது என்ன?

விடைகள்
1. மீன்
2. சுண்ணாம்பு
3. புகை
4. கதிரை
5. சாம்பிராணி
6. முட்டை
7. மின்னல்
8. உப்பு
9. மீன்பிடிவலை
10. தண்ணீர்

ச. சன்சீபன்
3 B

# குழந்தைகளுக்கும் சேமிப்பு அவசியம் !

பொதுவாகவே சேமிப்பு எனும்போது எதிர்காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி தேவைப் படும்போது உபயோகித்துக் கொள்ளலாம். சேமிப்பானது தன்னம்பிக்கையை வளர்ப்பது மட்டுமன்றி பாதுகாப்பு உணர்வையும் தருகின்றது. எனவே மனிதர் ஒவ்வொருவருக்கும் சேமிப்புப் பழக்கம் இருக்கவேண்டும். இன்று ஆரோக்கியமாக வசதியாக இருப்பவர் நாளை எப்படியிருப்பார் என்பது கடவுள் மட்டுமே அறிந்த உண்மை! ஆகவே நாளை நாம் நன்றாக இருக்க இன்றே சேமிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் மாதிரி இன்று சேமிக்கும் ஒருரூபாய் நாளை ஒருதொகைப் பணமாகலாம்.

வளர்ந்தவர்கள் சேமிப்பின் அவசியத்தை உணர்ந்தவர்கள். அறியாக் குழந்தைகளுக்கு சேமிப்பின் அவசியத்தையும் சிக்கனத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்த வேண்டும். கல்வியின் அவசியத்தை உணர்ந்து தம்பிள்ளைகளுக்கு ஊட்ட ஆர்வமுடன் துடிக்கும் ஒவ்வொரு பெற்றோரும் கல்வியோடு பக்கபலமாக சேமிப்புப் பற்றியும், சேமிப்பின் நன்மை பற்றியும், அது எதிர்காலத்தில் எப்படி அக்குழந்தைக்கு உதவப்போகின்றது என்பது பற்றியும் வலியுறுத்த வேண்டும். இன்றைய குழந்தைகள் தான் நாளைய சமுதாயத்தின் தூண்கள். தூண்கள் மிக உறுதியாக இருக்க சேமிப்பு அடிக்கல்லாகின்றது.


குழந்தைகளுக்கு சேமிப்பு எனும்போது பொதுவாகப் பணம்மட்டும் கருதப்படுவதில்லை. குணங்களும் நிச்சயமாகக் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அன்பு, நற்பழக்க வழக்கங்கள் சமயப் பற்றுக்கள், நட்பு, பிறருக்கு உதவுதல் போன்ற குணங்களையும் சேமிக்கக் கற்றுக் கொடுக்கும் பருவம் குழந்தைப் பருவமே! நல்லவனாக சமுதாயம் மதிக்கும் உத்தமனாக வாழ குழந்தையாக இருக்கும் போதே பெற்றோர் குழந்தைக்கு நற்பண்புகளையும், நற்கதைகளையும் கூறி அவன் மனம் தூய்மையாக இருக்க வழிவகை செய்யவேண்டும். இதுவும் சேமிப்புதான். பணத்தைச் சேமிக்கும்போது அது நாளை வட்டியுடன் சேர்த்து எமது கைகளில் கிடைக்கின்றது. அதேபோல நற்குணங்களும் நாளை பயிர் (குழந்தை) மரமாகும் (இளைஞன்) போது நன்மதிப்பும், மரியாதையும் வட்டியுடன் வந்து சேரும். பணத்தைச் சேமிக்க எப்படியும் ஒரு குறிப்பிட்டளவு வயது தேவைப்படுகின்றது. ஆனால் நற்பழக்கவழக்கம் கட்டாயம் குழந்தைப்பருவத்திலேயே சேமிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எனவே குழந்தைக்கு இப்போது அளிக்கும் நற்பழக்கவழக்கம் கல்வெட்டாக அப்பிஞ்சு மனதில் பதிந்து நாளை சமுதாயத்தின் மத்தியில் தனக்கென்று இடம்பிடித்து நட்சத்திரமாகத் திகழ வழிவகுக்கும்.

குழந்தைகளுக்கு சேமிப்பும் தெரியாது. சேமிப்பின் முக்கியத்துவமும் தெரியாது. பெற்றோர் தாமே இன்று தம் குழந்தைகளுக்காகச் சேமித்து வைப்பதுடன் சேமிப்பின் அவசியத்தையும் நாளாந்தம் விளக்கிக்கூற வேண்டும். உழைப்பின் அவசியத்தையும் கூறவேண்டும். நாணயம் என்றால் அதற்கு இரு பொருளுண்டு. ஒன்று உண்மை மற்றது பணம். எனவே "நாணயமாக" உழைத்து "நாணயத்தை" தேடினால்த்தான் அது நிலைத்துநிற்கும் என்பதைப் பிள்ளைகளுக்குப் பலகதைகளின் மூலம் மகிழ்ச்சி யாகத் தெரிவிக்கலாம். குழந்தை மனதில் பதியும் வண்ணம் விளையாட்டினூடாக, கதைகளினூடாக செய்தால் வெற்றி தரும். இளமையில் உடல் ஆரோக்கியம் இருக்கும். "முதுமையில் உடல் ஆரோக்கியமாக இருக்குமா"? என்பது கேள்விக்குறிதான். எனவே முதுமையில் யாரிடம் பிச்சை எடுக்காமல், கையேந்தாமல் கௌரவமாக உட்கார்ந்து சாப்பிட இளமையில் உழைத்து சேமிக்க வேண்டும். ஆடம்பரச்செலவுகள் இன்று அழகைத்தரலாம். நாளை சிக்கனமும் சேமிப்பும்தான் நிலைத்து நின்று அழகைத்தரும்.

பணத்தைச் சேமிப்பதா? குணத்தைச் சேமிப்பதா? சிறந்தது என்று யோசித்தால் இரண்டுமே மானிட வாழ்விற்கு இன்றியமையாதது என்பதைப் புரிந்து கொள்ளலாம். "காசேதான் கடவுளப்பா

# புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக ஆரம்பப் பிரிவு குடும்பப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி - 2001

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.தனபாலசிங்கம் அவர்கள் கொடியேற்றுவதையும், திரு.மாதவகுமார்(ஆரம்பப்பிரிவு) உதவிக் கல்விப்பணிப்பாளர்) திருமதி.பொ.ஜெயசிங்கம் (ஓய்வு பெற்ற ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர்), திருமதி.ஆ.ஜெயவீரசிங்கம் (எமது அதிபர்), திரு.இராஜகுமாரன்(ஆசிரியர்) ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.



## உடற்பயிற்சி 2002
## வலிகாம வலயம் சம்பியன்

கோட்டமட்டத்திலும் வலய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட உடற்பயிற்சி அணியினருடன் பொறுப்பாசிரியர்கள் பயிற்றுனர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். இருப்பவர்கள்(இ.வ) திருமதி.வி.பாஸ்கரன் (உடற்கல்வி ஆசிரியர், செல்வி.ஆறுமுகராசா ஸ்ரீவதனி (அணிப்பொறுப்பாசிரியர்) செல்வன்.செ.பிரகாஷ் (அணித்தலைவர்) திருமதி.சூ.ஜெயவீரசிங்கம் (அதிபர்) செல்வன்.இ.கோபிநாத் (பயிற்றுனர்) திரு.இராஜகுமாரன் (ஆசிரியர்)



# இந்து மன்றம் 2002



இப்படத்தில் அதிபருடன் இந்து மன்றத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களும் மாணவர்களும் காணப்படுகின்றனர்.

ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா காசில்லாதவன் குடும்பத்திலே” என்ற பாடல்கள் பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. அதேபோல “நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி” “ஆசை, கோபம், களவு கொண்டவன் பேசத் தெரிந்த மிருகம்” “அன்பு பண்பு கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்” என்ற பாடல்கள் குணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்து கின்றது. சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்போமானால் பணமும் குணமும் கடவுளுக்குச் சமமாக மதிக்கப்படுவதை இவ்விரு பாடல்கள்மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஆகவே தன்மானமுள்ள ஒரு மானிடன் தலைகுனியாமல் வாழ பணமும் குணமும் அவசியம் வேண்டும்! இதற்கு சேமிப்பு அத்தியாவசியமாகின்றது.

ஒரு தாக்கத்திற்கு எதிரானதும், சமனானதும் மறு தாக்கம் உண்டென்பது நியூட்டனின் விதி. ஆனால் சேமிப்பின் விதி என்ன தெரியுமா? நாம் சேமிக்கும் ஒரு சேமிப்பிற்குப் பலமடங்காக சேமிப்பு எம்மை வந்தடையும். இன்று சிறுகச் சிறுகச் சேமிக்கும் பணம் எப்படி வட்டியுடன் எம்மை வந்து சேருமோ அதேபோல குணமும், நற்பெயரையும் நற்சான்றிதழையும் நிட்சயமாக வட்டியுடன் எமக்கு வழங்கும். சற்று சிந்தித்துப் பாருங்கள். ஊருக்குள் நல்லது கெட்டதற்கு நிற்கும் ஒரு மனிதன் வீட்டில் நாளை நல்லது நடந்தால் ஊரே திரண்டு நிற்காதா? ஆகவே வட்டியும் முதலும் திரும்பி நமக்கே கிடைக்கின்றதே!

எனவே என்குழந்தை மட்டுமல்ல, எம் உறவினர் வீட்டுக்குழந்தைகள் மட்டுமல்ல, நம்ஊர்க் குழந்தைகள் மட்டுமல்ல, இந்த உலகின் குழந்தைகள் யாவும் எதிர்காலத் தூண்கள் தான்! எனவே எல்லாக் குழந்தைகளுக்கும் சேமிப்பின் அவசியத்தை உணர்த்துவோம். நாளை நல்ல தன்னம் பிக்கையுடைய கௌரவமுடைய தூண்களை உருவாக்க இன்றே எல்லோருக்கும் சேமிப்பின நன்மை பற்றி வலியுறுத்துவோம். சிக்கனமே சிறந்த செல்வம்! சேமிப்பே சிறந்த சொர்க்கம்! இங்கிருந்தே சொர்க்கம் காண இன்றே சேமியுங்கள். சேமிப்பின் சிறப்புக்களை மற்றவருக்கும் கூறுங்கள். நீங்களும் சேமித்து மற்றவரையும் சேமிக்க வையுங்கள். இது ஒவ்வொரு மானிடனுடைய கடமையாகும்!

ஆசிரியை
திருமதி.பி.விக்கினேஸ்வரன்

# நூல் நிலையம்

மாணவராகிய நாம் எமது அறிவை வளர்க்கப் பல்வேறு வழிகளிலும் முயற்சி செய்ய வேண்டும். "கண்டதும் கற்க பண்டிதனாவான்" என்பது பழமொழி. இதற்கு நாம் நல்ல அறிவாற்றல், சிந்தனை , கருத்து என்பன அமைந்த நூல்களைப் படித்துப் பயனடைய வேண்டும். இதற்கு எமது உற்ற துணையாக இருப்பது நூல்நிலையங்கள் ஆகும். இலகுவான முறையிலே பல்வேறு நூல்களையும் நாம் பெற்றுக்கொள்ள நூல்நிலையங்களே உதவுகின்றன. எமது அரசாங்கம் இந்நாட்டின் எல்லாப் பாகங்களிலும் நூல்நிலையங்களை அமைத்துள்ளது அதனைவிடத் தற்போது பாடசாலைகளிலும் நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனை நல்லமுறையிலே நாம் பேணவேண்டும். இவை இன, மத, மொழி வேறுபாடின்றி சகலமக்களும் சென்று பயன்பெற வழிவகுக்கின்றது. அமைதி, கட்டுப்பாடு, ஒழுங்கு போன்ற பண்புகள், நூல் நிலையங்களிலே காக்கப்படும். இவை எமது வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டியவை. "அறிவுடையாரை அனைவரும் விரும்புவர்" என்பதற்கு நூல் நிலையங்களையே நாடவேண்டும் நூல்நிலையத்தின் அருமை பெருமைகளை நன்குணர்ந்து எமது நண்பர்களையும் அவ்வாறே உணரச்செய்து எமது நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்குவோம்.

ப.ரகுதரன்
5B

# ஒரு குழப்பமான விஷயம்

ஈரான் மன்னனான நௌஷேர்கான் ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருடைய சமையற்காரன் வயதானவர். அவர் கைநடுக்கம் உள்ளவர். சமையற்காரன் குழம்பு ஊற்றும்போது மன்னனுடைய ஆடையில் ஒருதுளி குழம்பு கொட்டிவிட்டது. சமையற்காரன் ஒரு கணம் திகைத்து நின்றான். திகைப்பு நின்றதும் கோப்பையில் இருந்த குழம்பு முழுவதையும் எடுத்து மன்னரின் ஆடையில் ஊற்றி விட்டான். நௌஷ்ர்கான் இன்னும் சினம் கொண்டார்.

உடனே சமையற்காரன் மகாராஜாவே மன்னிக்க வேண்டும்! ஒரு துளி குழம்பு தெளித்து விட்டதற்காக அரசர் தமது பழைய சமையற்காரனைக் கொன்றுவிட்டாரே? என்ன அநியாயம்! என்று ஊரார் உங்களை குறை சொல்லுவார்கள். அப்படி ஒரு பழி உங்களுக்கு ஏற்பட வேண்டாம் என்று தான் குழம்பு முழுவதையும் தங்கள்மீது கொட்டி விட்டேன், என்றான்.

இப்பொழுது " என்னைத் தானே குற்றவாளி என்பார்கள் " என்றான். இதைக் கேட்டதும் நௌஷ்ர்கான் மன்னன் முகத்தில் கோபம் மறைந்து புன்முறுவல் தவழ்ந்தது.

வி.உ.ஷாளினி
தரம் 7A

## புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக ஆரம்பப் பிரிவு குடும்பப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி – 2001

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.தனபாலசிங்கம் அவர்கள் கொடியேற்றுவதையும், திரு.மாதவகுமார்(ஆரம்பப்பிரிவு) உதவிக் கல்விப்பணிப்பாளர்) திருமதி.பொ.ஜெயசிங்கம் (ஓய்வு பெற்ற ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர்), திருமதி.ஆ.ஜெயவீரசிங்கம் (எமது அதிபர்), திரு.இராஜகுமாரன்(ஆசிரியர்) ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.



## உடற்பயிற்சி 2002
## வலிகாம வலயம் சம்பியன்

கோட்டமட்டத்திலும் வலய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட உடற்பயிற்சி அணியினருடன் பொறுப்பாசிரியர்கள் பயிற்றுனர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். இருப்பவர்கள்(இ.வ) திருமதி.வி.பாஸ்கரன் (உடற்கல்வி ஆசிரியர், செல்வி.ஆறுமுகராசா ஸ்ரீவதனி (அணிப்பொறுப்பாசிரியர்) செல்வன்.செ.பிரகாஷ் (அணித்தலைவர்) திருமதி.சூ.ஜெயவீரசிங்கம் (அதிபர்) செல்வன்.இ.கோபிநாத் (பயிற்றுனர்) திரு.இராஜகுமாரன் (ஆசிரியர்)



# எல்லாம் எனக்குத் தெரியும்

ஓர் ஊரிலே ஒரு கழுதையும் ஒரு சேவலும் மிகவும் நண்பர்களாக இருந்தன. எங்கு சென்றாலும் இவை இருவருமே செல்வர். சம்மந்தமே இல்லாத இவர்கள் நட்பு எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது. எல்லோரும் இவர்களைப் பார்த்துக் கேலி செய்வர். அதைப்பற்றி இவர்கள் பொருட்படுத்திக் கொள்வது இல்லை. ஆனால் கழுதை கொஞ்சம் பெருமை பிடித்தது. சேவல் சொல்லும் அறிவுரையை ஏற்றுக் கொள்ளாது "நான்தான் பெரியவன்" எனவே நான் சொல்வதைத் தான் நீ கேட்க வேண்டும் என்று திமிராகப் பேசும். ஒருநாள் இருவரும் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. இந்தக் கழுதை கொழுத்து இருந்ததைக் கண்ட சிங்கராஜா அடித்துத் தின்னவேண்டும் என்ற எண்ணத்தில் வந்தது.

கழுதையை நோக்கி சிங்கம் வருவதைக் கண்டு நடுங்கியது. நண்பனுக்கு ஆபத்து என்றதை கண்ட சேவல் கூவியது. பலசாலியாய் இருந்தாலும் சேவல் கூவுவதைக் கேட்டதும் சிங்கம் பயந்து ஓடியது. இதைக்கண்ட கழுதை தன்னைக்கண்டு சிங்கம் ஓடுவதாகக் கூறியது. வலிமையான என் உடலைப் பார்த்துத்தான் சிங்கம் ஓடுகிறது எனக்கழுதை கூறியது. என்னுடைய கூக்குரல் கேட்டுத்தான் சிங்கம் ஓடுகிறது எனச்சேவல் கூறியது "இப்போது சிங்கத்தைத் துரத்திக்கொண்டு எட்டி உதைக்கப் போகிறேன்" என்றுகூறி சிங்கத்தைத் துரத்திக்கொண்டு கழுதை ஓடியது. அதைக்கண்ட சேவல் "நண்பா, நான் சொல்வதைக்கேள்!" எனக்கூறியது. எதையும் காதில் வாங்காமல் கழுதை ஓடியது. சேவலின் கூக்குரல் அடங்கியதும் பயம் தெளிந்த சிங்கம் திரும்பிப் பார்த்தது. தன்னைத் துரத்திக்கொண்டு வரும் கழுதையைக் கண்டதும் அடித்துக் கொன்று தின்றது. அப்புறம் சிங்கம் இன்பமாகக் கழுதைக் கறி சாப்பிட்டது.

நன்றி

நிரோஜினி
3 A

# பெஞ்ஜமின் பிறாங்க்லின்

பெஞ்ஜமின் பிறாங்கிலின் ஐக்கியஅமெரிக்காவின் Boston நகரில் 17 ஜனவரி 1706ல் மொத்தம் 17 பிள்ளைகளுள்ள குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தையார் சொற்ப வருமானம் பெறும் மெழுகுவர்த்தி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார்.

பெஞ்ஜமின் 10 வயதில் வறுமை காரணமாகக் கல்வி கற்பதை நிறுத்தி அவரது மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையத்தில் வேலைக்குஅமர்ந்தார். இதில் மனம் ஈடுபடாததால் James என்னும் மூத்த சகோதரரிடம் பத்திரிகை அச்சடித்துப் பிரசுரிக்கும் தொழிலில் பயிற்சிபெற்றார். மகிழ்ச்சியுடன் அச்சுக் கூடங்களை இயக்குவதில் ஆர்வமுடன் செயற்பட்டார்.

தமது கையில் கிடைக்கும் புத்தகங்களையெல்லாம் வாசித்துத் தாமாகவே படிப்பதில் முனைந் தார். இவர் எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், கப்பல் செலுத்துதல், இலக்கணம், தர்க்கசாஸ்த்திரம் போன்றவற்றைக் கற்றார். எழுத்தாற்றலிலும் தாமாகவே தேர்ச்சி பெற்றார். இதற்குச் சான்றாக அவரின் இறப்பின் பின்னர் பிரசுரிக்கப்பட்ட அவரது சுயசரிதை (Autobiography) அமெரிக்க இலக்கியத்தில் உயர்ந்ததாக மதிப்பிடப்பட்டது.

இவர் தனது சகோதரனது பத்திரிகையில் ஆக்கங்களை எழுதுவதெனத் தீர்மானித்தார். ஆனால் இவரது சகோதரர் இவரை சிறுவன் என்றவகையில் இவரது ஆக்கங்களை ஏற்றுக்கொள்ள வில்லை. இதனால் Mrs. Silence Dogwood என்ற புனைபெயரில் ஆக்கங்களை சமர்ப்பித்தார். இவர் அதைக் கண்டுபிடித்து அவர்மேல் கோபமடைந்து பெஞ்ஜமின் வாழ்க்கை துன்பத்துக்கு உள்ளாகின்றான். இதனால் 18 வயதான பெஞ்ஜமின் வேலையைவிட்டு நீங்கி வேறொரு நகரமான Philadelphia சென்றார்.

அச்சடிப்பவராக (Printer) சேவையாற்றிய அவரது படைப்புக்கள் விரைவாக வரவேற்கப்பட்டும் தேடப்பட்டும் வந்தன. அந்த நாளையில் அச்சிடும் இயந்திரங்கள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இங்கிலாந்து சென்று அச்சுக்கூடங்களைத் தெரிந்தெடுக்கத் தீர்மானித்தார் பெஞ்ஜமின்.

பின்னர் இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்து பத்திரிகையை நிறுவினார். அத்துடன் வருடாந்த நாட்காட்டி ஒன்றினையும் பிரசுரிக்கத் தொடங்கினார். இதில் வேறுபட்ட விடயங்கள் சுருக்கமான மணிமொழிகள் தோன்றின. அவை தற்காலத்துக்கும் பொருத்தமானவை. இவர் 42ஆவது வயதில் போதியளவு பணம் சம்பாதித்தமையால் தொழிலிலிருந்து ஓய்வுபெற்று முற்றாகப் பொதுச்சேவைக்குத் தன்னை அர்ப்பணித்ததுடன் விஞ்ஞானத்துறையிலும் ஈடுபட்டார்.

இளம் பொறியியலாளர்களும், வர்த்தகத்துறையினரும் இணைந்து ஒரு கலந்துரையாடல்குழு அமைக்கப்பட்டது. இது பின்னர் அமெரிக்க மெய்யியல் சங்கமாக விரிவுபடுத்தப்பட்டது. இச்சங்கம் ஓர் சிறந்த அமைப்பாக விளங்குகின்றது.

1753இல் பென்ஜமின் தபாலதிபர் ஜெனரலாக நியமனம் பெற்றார். தனது உழைப்பையும், ஆற்றல்களையும் இப்புதிய தொழிலுக்கு வழங்கினார். பல தபாலகங்களை நிறுவி தபால் சேவையை விருத்தி செய்தார். 1847ல் ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது தபால் முத்திரையை அச்சிட்டபோது இவரது படமே அம்முத்திரையில் தோற்றுவிக்கப்பட்டு அவரது பங்களிப்புக்கு வெகுமதிகள் கொடுக்கப் பட்டது. இவர் இப்படிப் பலகாலம் வாழ்ந்து விஞ்ஞானத்துறையை வளரச்செய்து இறைவனடி சேர்ந்தார்.

நன்றி

வி.தர்சினி
தரம் 5A

# புதுயுகம் படைக்க புறப்படு பெண்ணே

என்னடி பெண்ணே இன்னமும் தூக்கமா?
சன்னமாய் வாழ்வதில் சிந்தையில் வாட்டமா?
சொல்லடி பெண்ணே தமிழ்த்தாயின் மகளே?
கிளர்ந்து நீ எழுந்திடில் இந்நிலை வருமா?

சத்தியம் காத்திடும் பெண்ணினம் சாகுமா?
சாத்தியம் இல்லாக் கொடுமைகள் தீருமா?
நித்திலம் எங்கும் ஆணினம் ஆளுமா?
நித்திரையாகி நீதியும் மாளுமா?

உண்மையின் குரல்வளை இப்படி நசியுமா?
உன்னத வாழ்வுகள் மண்ணோடு மடியுமா?
இத்தனை கேவலம் அரங்கிலே ஏறுமா?
இன்றைய மகளிர்க்கு இலையுதிர் காலமா?

இன்றைய மகளிரே இன்னமும் அச்சமா?
இதயத்தில் உமக்கு உணர்ச்சியே இல்லையா?
உயிருக்குப் பயந்து உள்ளுக்குள் முடக்கமா?
உள்ளக் குமுறல்கள் உமக்குள்ளே அடக்கமா?

தன்மான உணர்வுகள் தரணியில் வாடுமா?
தனக்குநிகர் இல்லையென்ற ஆண்குரல் ஓங்குமா?
ஆணினம் உன்னை அடிமையாக்க முடியுமா?
ஆவேசம் கொண்டு அழித்திடத்தான் இயலுமா?

விலங்குகள் கைகளிலே பூட்டத்தான் முடியுமா?
விலைமகளிர் சந்தையிலே விற்கத்தான் முடியுமா?
மகளிரின் உரிமைமீறல் நடந்திடத்தான் முடியுமா?
மாண்புமிகு மகளிரின் கற்புநெறி அழியுமா?

சீதனம் என்னும் சிறையில் இடமுடியுமா?
சீக்கிரம் ஆணுக்கு அடிமையாக முடியுமா?
எழுந்து நீ பேசினால் இந்நிலை நீளுமா?
இல்லையேல் என்றுமே ஏமாற்றம் தானா?

ஏமாற்றி ஏமாற்றி இழுத்தடித்த
தொடர்கதை இனிமேலும் தொடராது
முற்றுப் புள்ளியிட்டு கதையை முடித்துவிட
முண்டியடிக்கும் மகளிர் முனைந்து விட்டனர்.

சண்டித்தனமும் சர்வாதிகாரமும் - மகளிர்
சக்திக்கு மண்டியிட்டே ஆக வேண்டும்!
புறப்படு பெண்ணே புதுயுகம் படைக்க!
உண்மைக்காய் குரல்கொடு உரிமைக்காய் உயிர்விடு!

ஆக்கம் :-
ஜெனந்தினி கந்தசாமி
தரம் - 11

# நான் மயிரிழையில் தப்பிக் கொண்ட ஒரு விபத்து

அன்று திங்கட்கிழமை அவசர அவசரமாகப் பாடசாலைக்குச் செல்வதற்காக எனது துவிச்சக்கர வண்டியுடன் காலை எட்டு மணியளவிற் புறப்பட்டேன். காலை நேரம் வீதியெங்கும் ஒரே வாகனங்களும் சன நெரிசல்களும் காணப்பட்டன. கடமைக்குச் செல்வதற்காக ஊழியர்களும், பாடசாலைக்குச் செல்வதற்காக மாணவர்களும் வேறு அலுவல்களுக்காகப் பட்டணம் நோக்கி மக்களும் நகர்ந்து கொண்டிருந்தார்கள். பாடசாலை பஸ் மிகவும் வேகமாக வந்து கொண்டிருந்தது.

வீதி ஒழுங்கைப் பேணுவதற்காகக் காவற்றுறையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். சைகையை அடுத்தே பிரயாணத்தை மேற்கொள்ளமுடியும். நான் பருத்தித்துறை வீதி வழியாக வந்து ஆஸ்பத்திரி வீதி வழியாகச் செல்வதற்குத் திரும்பவேண்டி இருந்தது. எம்மைச் செல்லுமாறு காவற்றுறையினர் சைகை காட்டியதும் நானும் என்னுடன் வந்தவர்களும் முடக்கைத் திரும்ப ஆயத்தம் ஆகினோம். அப்பொழுது ஆஸ்பத்திரிவீதி வழியாக ஒரு பஸ் மிகவும் வேகமாகவந்து சைகையைக் கவனத்திற் கொள்ளாது சென்றது. அப்பொழுது எனக்கு முன்னாற் சென்ற துவிச்சக்கர வண்டிக்காரர் இருவரையும் பஸ் அடித்து விட்டது. நான் பஸ் வருவதை அறிந்து வண்டியைத் திருப்பாது நிறுத்தி வைத்தமையால் மயிரிழையில் உயிர் தப்பினேன். விபத்துக்குள்ளானவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பஸ் வண்டி செலுத்தியவரின் கவனக் குறைவாலேயே இவ்விபத்து நடைபெற்றது. நான் கவனமாக வாகனத்தைச் செலுத்தியதால் உயிர் தப்பினேன். வீதி ஒழுங்கைக் கடைப்பிடிப்பதனாலும், பிறயோசனைகளைத் தவிர்த்துப் பிரயாணத்தை மேற்கொள்வதனாலும் விபத்துக்களில் இருந்து எம்மைப் பாதுகாப்பதுடன் பிற உயிர்களையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

ஆக்கம் :-
ஸ்ரீ.மேகரா
தரம் 6A

# அன்பு

1. அன்பு எல்லா மதங்களாலும் வலியுறுத்தப்படுகிறது.
2. அன்பு மனங்களில் அமைதியைத் தருகிறது.
3. அன்பு உள்ளங்களில் மகிழ்வைத் தருகிறது.
4. அன்பு பொறாமை கொள்ளாது.
5. அன்பு பகிர்தலை ஏற்படுத்தும்.
6. அன்பு சுயநலம் கொள்ளாது எப்போதும் பொது நலமே கொள்ளும்.
7. அன்பு இல்லாதவனிடத்தில் எவ்வளவு செல்வம் இருந்தாலும் அவன் ஒன்றுமில்லாதவனே.
8. அன்பு இல்லாதவன் யாருக்கும் பயனற்றவன்.
9. பிறரை அன்பு செய்யாதவனை இறைவனும் நோக்கமாட்டான்.
10. அன்பு எல்லா செல்வங்களிலும் மேலானது.

சி.சசிவன்
தரம் – 2

# உழவுத் தொழில்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் மண்ணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம் என்கிறார் பழம் பெரும் புலவர் பாரதியார். இவ்வுலகில் மானிடர் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் உழவுத் தொழிலுக்குள்ள சிறப்பும் மகிமையும் வேறெந்தத் தொழிலுக்குமில்லை. ஏனெனில் ஏனைய தொழில்களில் ஈடுபட்டாலும் எமது அன்றாடவாழ்வில் முக்கியஅம்சம் உணவே ஆகும். இதற்கு உழவனையே நாம் கையேந்தி நிற்கவேண்டும். உழவுத்தொழிலை விவசாயம், கமம், கிருஷிகம் என்னும் பலபெயர்கள் கொண்டு அழைப்பர். எத்தனை எத்தனை தொழில்களைச் செய்தாலும் அத் தொழில்களிற்கு வயிறு உண்டு. பசி உண்டு பசியை மாற்ற உணவு இன்றியமையாததாகும். ஆண்டி முதல் அரசன்வரை உணவுக்காக உழவனையே எதிர்பார்க்கின்றனர். உழவன் வயலிலோ சேற்றிலோ கால் வைக்காவிடில் நாம் சோற்றில் கைவைக்க முடியாது. இதன்பொருட்டு எம் அரசாங்கம் உழவுக்கே முதலிடம் அளிக்கின்றது. உழவுத்தொழிலை மக்கள் மனதிற் பதிப்பதற்காக கம்பர், திருவள்ளுவர் ஔவையார் போன்ற தமிழ்ப்புலவர்கள் இதனைத் தமிழிலேயே பாடியுள்ளனர். உழவுத்தொழில் எல்லா வற்றிற்கும் முதன்மையாக விளங்குகின்றது. எமது தமிழ்மறைப் புலவராகிய திருவள்ளுவர் உழவுத் தொழிலின் பெருமையையும், இனிமையையும் "உழவு" என்ற அதிகாரத்திலேயே உணர்த்துகின்றார். இவ்வாறே கம்பரும் பாடியுள்ளார். ஔவையாரும் இதனை இவ்வாறு பாடியுள்ளார். "சுழற்றும் ஓர் பின்னணி உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" தொல்லை பொறுக்காமல் உழவை விட்டுச் சென்றவர்கள் முடிவில் உழவனையே எதிர்பார்ப்பார். உணவை உற்பத்தி செய்பவன் உழவன் எல்லாவற்றிலும் தலையானது உழவுத்தொழில். தொழில்களையெல்லாம் விட உழவே தலையானது எனவே தான் "உழவர்கள்" ஒப்பற்ற அச்சாணி என வர்ணிக்கின்றனர். இவ் உழவுத் தொழிலின் மகிமை பற்றி ஔவையார் கூறும் இடத்தில் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" ஆம். உழுதுண்டு வாழ்பவரே உரிமையாக உயர்வாக வாழ்பவராவர் மற்றவர்களெல்லாம் பிறரை வணங்கி உண்டு அடிமையாக வாழ்பவரே ஆவர். நெற்கதிரின் நிழலை அண்டி வாழும் உழவர்கள் வெண்கொற்றக் குடையின் நிழலிலே தங்கி நாடாளும் வேந்தர்களையும் தமக்கு அடிபணியச் செய்துவிடும் தம் கையாலேயே உழைத்து உணவுண்ணும் இயல்புடையவர்கள் உழவர்கள். ஆகையாற் பிறரிடம் யாசிக்க மாட்டார்கள். ஆனால் யார் யாசிப்பார்களோ அவர்களுக்கு வேண்டிய பொருளை ஒழிக்காமல் அள்ளி வாரி வழங்குபவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. உழவர்கள் உழ மறுத்தார்கள் என்றால் உலக ஆசையைத் துறந்த துறவிகளும் கூட இவ்வுலக வாழ்வு அமையாது போய்விடும். நிலத்துக்குரியவன் நிலத்தை கவனிக்காவிட்டால் வயலும் உழவனுக்கு நற்போகத்தைத் தராது. நிறைவாக உழவுத் தொழிலின் மகிமை சிறப்பியல்புகளைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் சிப்பிக்குள் இருக்கும் முத்து வெளிக்கொணர்ந்தாற் போல வெளியாகின்றன. எனவே தான் எல்லாத் தொழிலுக்கும் பெரும் மதிப்பு கொடுக்கப்படுகின்றது. பிழைக்க வழி இல்லை என்று கூறிச் சோம்பி இருப்பவர்களைக் கண்டால் அவர் ஏழ்மை எளிமையை எண்ணி நிலம் எனும் மங்கை நகைப்பாள்.

க.கேமாவதி
தரம் 6 A

# அறுகம்புல் அர்ச்சனை

பார்வதிக்கும், பரமசிவனுக்கும் பிள்ளையார் முதற்பிள்ளை. உலகத்தைத் துன்புறுத்தி வந்த பல அரக்கர்களை பிள்ளையார் அழித்திருக்கிறார். ஒருநாள் கைலாய மலையில் பார்வதி பரமசிவனுடன் பிள்ளையார் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது நந்தியெம்பெருமான் திடீரென்று உள்ளேவந்து "பிரபு தெய்வேந்திரனும் பிரமனும் முப்பத்து முக்கோடி தேவர்களை அழைத்துக் கொண்டு தங்களை அவசரமாகப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்றார்.

பிள்ளையார் அனைவரையும் உள்ளே வரச் சொன்னார். அனைவரும் அமர்ந்ததும் என்ன சமாச்சாரம் என்று பிரமனைக் கேட்டார். பிரமா சொன்னார். "யானைமுகப் பெருமானே அனலாசுரன் என்ற அரசன் எல்லோரையும் துன்புறுத்துகின்றான். அவன் கிட்டேயே போக முடியவில்லை. யார் போனாலும் நெருப்பாகத் தடுத்து விடுகின்றான். அவனை நீங்கள்தான் சங்காரம் செய்ய வேண்டும். தெய்வேந்திரனும் நானும் அவன் பக்கத்தில போக முடியாமல் ஓடி வந்து விட்டோம்" என்றார்.

பிள்ளையார் உடனே எழுந்தார். அவருடன் கணங்களும் கிளம்பின. அனலாசுரன் இருக்கும் இடம் வந்தார். பிள்ளையாருக்கும் அனலாசுரனுக்கும் பெரும்போர் மூண்டது. சண்டையில் அனலாசுரன் தன் வாயிலிருந்து நெருப்பாகக் கக்கி பிள்ளையாரின் படைகளைப் பொசுக்கினான். இதனால் பிள்ளையாருக்குக் கடுங்கோபம் வந்தது.

நீண்ட நேரம் சண்டை செய்தும் அனலாசுரனை அழிக்க முடியாமல்ப் போகவே அவர் அனலாசுரனைத் தூக்கி அப்படியே விழுங்கிவிட்டார். வயிற்றுக்குள் சென்ற அனலாசுரன் சும்மா இருக்கவில்லை. பிள்ளையாரையும் எரிக்க ஆரம்பித்தான். பிள்ளையார் எரிகிறதே, எரிகிறதே" என்று குதிக்க ஆரம்பித்து விட்டார். அதைக்கண்ட தேவர்கள் குடம் குடமாகக் கங்கைநீரினால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள் எரிச்சல் குறைவில்லை. பனிக்கட்டியைக் கொண்டு வந்து தலைமீது வைத்தார்கள். அப்பொழுதும் அடங்கவில்லை. சந்திரனுடைய நிலவைப் பொழிந்தார்கள். அப்பொழுதும் அடங்கவில்லை. மீண்டும் ஒருபிடி அறுகம்புல்லைக் கொண்டு வந்து பிள்ளையாரின் தலைமீது வைத்தார்கள். உடனே எரிச்சல் அடங்கிவிட்டது. அன்று முதல் பிள்ளையாருக்கு "அறுகம்புல்" அர்ச்சனை தொடங்கியது.

ச.டிலானி
தரம் 6B

# பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் 2002



**இருப்போர் இடமிருந்து வலமாக**

திருமதி.ஜீ.மகிழ்ராஜதுரை, திருமதி.ப.பார்த்திபன், திரு.ந.சதீஸ்குமார், திரு.க.மனோகரன், திருமதி.சு.ஜெயவீரசிங்கம், திரு.பொ.கணேசறட்ணம், திரு.சி.இராஜசிவகுமார், திருமதி.ந.சந்திரகுமார்

**வலமிருந்து இடமாக நிற்போர்**

திரு.வே.குலசிங்கம், செல்வி.வி.பொன்னன், திருமதி.ச.இராஜசேகரன், திருமதி.சா.பொன்ராசா, திருமதி.ச.விக்கினேஸ்வரன், திருமதி.கு.புஸ்பராசா, திருமதி.இ.மகாலிங்கம், திருமதி.த.பாஸ்கரன், திருமதி.சா.ரவீந்திரன், திருமதி.பி.விக்கினேஸ்வரன்

**படத்தில் இல்லாதோர் பெயர் விபரம்**

1. திரு.சிவபாலன்
2. திரு.க.அன்னலிங்கம்
3. திருமதி.ச.விக்கினேஸ்வரன்
4. திருமதி.கதிராசிப்பிள்ளை
5. திருமதி.பாலகிருஸ்ணன்
6. செல்வி.த.கனகசபை
7. திருமதி.கௌ.கணேசலிங்கம்

# கோட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற காத்தவராஜன் நாடகத்தில் பங்கு பற்றியோர்.



(இ.வ) செல்வி. சி.சரண்ணியா, செல்வி.க. உஜித்தா, செல்வி.ப.சுபாசினி, செல்வி.ம.சிந்துஜா, செல்வி.வி.விஜயதர்சினி, செல்வி.வி.ரேணுகா, செல்வி.ம.பிரியதர்சினி, செல்வன்.ம.பானுதன், செல்வி.கு.தாரணி, செல்வி.வி.துஸ்யந்தி, செல்வி.வி.அஜந்தா.

# கொக்கும் அணிலும்

கொக்கு ஒன்று ஒரு மரத்தடியில் வாழ்ந்து வந்தது. அதற்கு அருகில் ஒரு குளம் உள்ளது. அந்தக் குளத்தில் தான் கொக்கு மீன்களைப் பிடித்துத் தின்றது. அத்துடன் தன் பசியையும் போக்கி வாழ்ந்து வந்தது. பின்பு சிலநாட்களில் அந்த மரத்தில் ஒரு அணிலும் குடிகொண்டது. பின் இருவரும் நல்ல நண்பர்களாக சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் ஒரு வேடன் பறவைகளைப் பிடிப்பதற்காக வலை வீசியிருந்தான். தற்செயலாக வந்த அந்தக்கொக்கு அந்தவேடனின் வலையில் சிக்குண்டது. இதைக் கண்ட அணில் தன் நண்பனைக் காப்பாற்றுவதற்காக ஓடிவந்து கொக்கு அகப்பட்ட வலையை தன் கூரிய பற்களால் அறுத்தது. கொக்கு அகப்பட்டதைக் கண்டதும் வேடன் ஓடி வந்தான். வேடன் ஓடி வருவதைக் கண்ட கொக்கு உடனே அந்த வலையையும் தூக்கிக் கொண்டு பறந்து விட்டது. உடனே கீழே பார்த்தான் அணில் வலையை வெட்டுவதைக் கண்டதும் வேடன் தன் கையிலிருந்த ஈட்டியை அந்த அணில் மீது எறிந்தான். அணிலோ அந்த வேடனிடமிருந்து தப்பி ஓடி வந்து மரத்தடியைச் சேர்ந்தது. உடனே கொக்கும் அணிலும் அந்த மரத்தைவிட்டு வேறிடத்திற்குச் சென்று சந்தோஷமாக இருவரும் வாழ்ந்தார்கள். ஆனால் வேடனோ இருந்த தன் வலையையும் கொக்கு கொண்டு சென்று விட்டதே என்ற மனவருத்தத்துடன் சென்று விட்டான்.

சிவரஞ்சினி
தரம் – 7B

# அன்பு வழியில் வாழ வரம் வேண்டும்

அன்பு வழியில் வாழ்ந்திட வேண்டும்
அறிவு மொழியில் வளர்ந்திட வேண்டும்
அழகு எண்ணத்தில் பறந்திட வேண்டும்
அமைதி வெள்ளத்தில் பாய்ந்திட வேண்டும்

ஆலம் விழுதென உறவுகள் வேண்டும்
ஆளுமை பழுதில்லா ஆண்டவன் வேண்டும்
ஆசுகள் களைந்திட ஆண்டவன் வேண்டும்
ஆனந்தம் கிடைத்திட அருளது வேண்டும்

இன்ப வாழ்க்கை இனித்திட வேண்டும்
இனிய வார்த்தை இசைத்திட வேண்டும்
இதயத்தில் காதல் கனிந்திட வேண்டும்
இளமையில் கல்வி கற்றிட வேண்டும்

ஈகை செய்திடும் நினைவுகள் வேண்டும்
ஈழத்தில் இருள் நீங்கிட வேண்டும்
ஈசனைத் துதித்திட எழுந்திட வேண்டும்
ஈசலின் வாழ்வை எண்ணிட வேண்டும்

உழைத்து என்றும் உயர்ந்திட வேண்டும்
உண்மை எதிலும் உரைத்திட வேண்டும்
உன்னில் உனக்கு நம்பிக்கை வேண்டும்
உரமான இதயமாய் உதயம் வேண்டும்

ஊனம் இல்லாத உடல்கள் வேண்டும்
ஊன்று கோலாக உதவி வேண்டும்
ஊருடன் உன்னை ஊன்றிட வேண்டும்
ஊகித்து உண்மை உணர்ந்திட வேண்டும்

எழுவகைப் பிறப்பை நினைத்திட வேண்டும்
என்றும் சிறப்பை நினைத்திட வேண்டும்
எளிமை வாழ்வில் நனைந்திட வேண்டும்
எல்லா மக்களும் நலம்பெற வேண்டும்

ஏடெடுத்து உலகை அறிந்திட வேண்டும்
ஏரெடுத்த உழவனைப் போற்றிட வேண்டும்
ஏழ்மை நிலைகள் அழிந்திட வேண்டும்
ஏற்றம் எவர்க்கும் அமைந்திட வேண்டும்

ஐயம் இல்லாத அறிவுகள் வேண்டும்
ஐந்து பாதகங்கள் அழிந்திட வேண்டும்
ஐம்புலன் உணர்வை அடக்கிட வேண்டும்
ஐசுவர்யம் அனைவர்க்கும் அமைந்திட வேண்டும்

ஒற்றுமை உலகில் ஓங்கிட வேண்டும்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பிட வேண்டும்
ஒட்டிய துன்பங்கள் வடிந்திட வேண்டும்
ஒன்றே இறைவன் வணங்கிட வேண்டும்

ஓலமிடும் உள்ளங்கள் ஒளிபெற வேண்டும்
ஓம் என்ற மந்திரத்தை ஒலித்திட வேண்டும்
ஓங்கிய யுத்தங்கள் ஒழிந்திட வேண்டும்
ஓசோன் படைகள் அடைத்திட வேண்டும்

ஔவியம் பேசாது வாழ்ந்திட வேண்டும்
ஔவை போல் அறிவு பெற்றிட வேண்டும்
ஔடதம் உண்ணாது வாழ்ந்திட வேண்டும்
அஃம் சுருங்காது வாழ்ந்திட வேண்டும்

ஜெ.மதனரூபி
தரம் – 10A

# தாய் அன்பின் மகத்துவம்

அன்பு என்பது தெய்வீகமானது; புனிதமானது; மகத்தானது; அன்பு இன்றேல் இவ்வுலகமில்லை. அன்பே சிவம் என்கிறது திருமந்திரம். சிவன் அன்பு மயமானவர். அதனால் தான உலகை அன்புமயமாகப் படைத்தான். "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இத்தகைய அன்புக்குப் பாத்திரமானவள் "அம்மா" என்றே கூறலாம். அன்னை என்பவள் தெய்வத்திற்குச் சமமானவள் எனவே அன்பும் அம்மாவும் ஒன்று.

இறைவனுக்கு உயர்திணை, அ..றிணை என்ற பாகுபாடில்லை. அவர் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவர். வேடனின் அம்புபட்டு தாய்ப்பன்றி இறந்துவிடுகிறது. பசியால் வருந்திய குட்டிகளின் மேற்கொண்ட அன்பினால் இறைவன் தாய்ப்பன்றி வடிவில் வந்து குட்டிகளுக்குப் பாலூட்டுகிறார். இத்தகைய அன்பு வாய்ந்த இறைவனைத் தாயாக வழிபடும் மரபு எமது சமயத்தில் மட்டுமே உண்டு. இறைவன் எல்லோருக்கும் நேரடியாகக் காட்சிகொடுக்க முடியாது என்பதால் தான் தாயைப் படைத்தான். அம்மா என்பவள் அன்பின் உறைவிடம், பாசத்தின் இருப்பிடம், கருணையின் இல்லம், பொறுமையின் சிகரம்.

எம்மைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டி, சீராட்டி வளர்க்கிறாள். எம் இன்பத்தில் மகிழ்ந்து துன்பத்தில் கரைந்து எம்மைக் காக்கிறாள். ஒரு தாய் எல்லாப் பிள்ளைகள் மீதும் ஒரே மாதிரி அன்பு பாராட்டுவாள். அவர்களுக்கு நல்லபிள்ளை, கெட்டபிள்ளை, ஏழை,பணக்காரன் என்ற பாகுபாடில்லை எல்லாப் பிள்ளைகளும் சமமே. தாய்மை என்பது இறைவனால் அருளப் பெற்ற அரும்பெரும் கொடையாகும். வீட்டையும், சமூகத்தையும் நாட்டையும், ஏன் மனிதஇனத்தையும் தாங்கும் தூண் தாயாவாள்.

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பது இதனையே உணர்த்துகிறது. இந்தப் பிரபஞ்சத்தில் முக்கியமான பாத்திரத்தை பாகத்தை ஏற்றிருப்பவர்கள் தாய்மார்களே.

இவர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். தமது அன்பின்மூலம் நல்ல பிரஜைகளை உருவாக்குபவர்கள் மனைவிக்குப் பயந்த ஒருவன் அவள் சொற்படி தன் தாயின் இதயத்தை எடுத்துவரப் புறப்படுகிறான். தாயிடம் சென்ற அவன் அவளது இதயம் வேண்டுமெனக் கேட்கிறான். அவளோ சிறிதும் தயக்கமின்றி எடுத்துக்கொள்ளச் சொல்கிறாள். தாயின் நெஞ்சைப் பிளந்து இதயத்தை எடுத்துச் செல்கிறான். வேகமாகச் செல்லும்போது வழியில் ஒரு மரவேர் தடக்கிக் கீழே விழுகிறான். அப்போதும் தாயின் இதயத்தைக் கைவிடவில்லை. அவன் கையிலிருந்த தாயின்இதயம் "மகனே வலிக்கிறதா? பார்த்து நடக்கக் கூடாதா? " என்று அன்புடன் கேட்கின்றது. அம்மாவின் அன்பிற்கு இதனைவிடச் சான்று உண்டோ?

நாம் வேதனைப்படும் போதெல்லாம் எம்வாயில் இருந்து புறப்படும் வார்த்தை 'அம்மா' தர்மம் கேட்போர் கூட 'அம்மா' என்றே விழிக்கிறார்கள். அம்மா என்ற இனியமொழி எமது தாய்மொழியில் தான் காணப்படுகின்றது. உலகைப் படைத்த சிவனுக்கு ஒரு இராத்திரி ஆனால் அன்னைக்கோ ஒன்பது இராத்திரிகள் பூசை செய்து வழிபடுகின்றோம். அம்மா அன்பு நிறைந்தவள் என்பதால் தான் நாட்டைத் தாய் நாடென்றும் மொழியைத் தாய்மொழி என்றும் கூறுகின்றோம். நாம் எத்தனை துன்பம் செய்த போதிலும் அன்புடனும் பொறுமையுடனும் சகித்துக் கொள்வதால்தான் உலகினைப் பூமித்தாய் என்கிறோம். எனவே இத்தெய்வீகமான அன்பு நிறைந்திருப்பதால் குழந்தை பிறந்தவுடன் உச்சரிக்கும் முதல் வார்த்தை அம்மா ஆகின்றது. அதனால் அன்னை முன்னறி தெய்வம் ஆகின்றாள். தெய்வத்தன்மை பொருந்திய அன்பும் அதன் சொருபமான அம்மாவும் ஒன்றேயாகும். "அன்பு தான் அம்மா அம்மா தான் அன்பு"

நன்றி

ஆக்கம் :-
பொ.தீபகா
தரம் - 9

# கணனி வைரஸ்

வைரஸ் என்பது கணனியில் மனிதனால் ஏற்படுத்தப்படும் ஒரு மோசடியாகும். அதாவது ஒரு பகுதிக் கணனி நிகழ்ச்சி நிரல் ஆகும். இதில் முக்கியமாக நோக்கத்தக்கது மோசடி வேறு தவறு வேறு. தவறுகள் எவ்வாறு ஏற்படலாம்:

* கணனியைப் பயன்படுத்துவோர் அதனைச் சரிவர அறிந்து கொள்ளாது இயக்கினால் ஏற்படலாம்.
* கணனிக்குக் கொடுக்கப்பட்ட சங்கேதங்களில் தவறு இருக்குமானால்
* நிகழ்ச்சி நிரலில் தவறு இருந்தால் ஏற்படலாம்.

கணனியில் கோளாறு இருப்பதை அது கொடுக்கும் முடிவுத் தகவல்களைக் கொண்டே கண்டுபிடிக்க முடியும். ஏனெனில் மின்னணு இயந்திரங்களில் கோளாறு முன்னறிவிப்பு இன்றியே வெளிப்படும். கணனி ஒருபோதும் தவறுகளுக்கு உள்ளாவதில்லை. நாம் தான் தவறுகளை உருவாக்குகிறோம். நாம் எழுதும் நிகழ்ச்சி நிரலில் தவறு ஏற்பட அதிகம் வாய்ப்பு உண்டு. நிகழ்ச்சி நிரல் எழுதுபவர்களின் பரவலான கருத்துப்படி மிகச்சிறிய நிகழ்ச்சிதவிர ஏனையவற்றைத் தயாரிக்கும்போது குறைந்தது ஒரு தவறாவது நிச்சயம் நிகழும். அவ்வாறு தவறு ஏற்பட்டாலும் நிச்சயம் கணனி அதைக் கண்டுபிடித்துவிடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அத்தவறினை நாம் திருத்த வேண்டும். கணனி திருத்தமாட்டாது. மோசடி என்பது கணனியில் இருந்த நினைவுப்பகுதி. 'புளோபி டிஸ்க்' கடுமையான பகுதி. 'டிஸ்கற் போன்றவற்றில் இருந்த தகவல்களை நன்கு அறிந்து அதில் ஊடுருவி அதனை மாற்றியமைத்து அல்லது அழித்து வேறு நிகழ்ச்சியைக் கொடுப்பதன் மூலம் கணனியை தவறான நிலைக்கு உட்படுத்தும் செயற்பாடாகும். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் கணனியில் ஒரு நிகழ்ச்சிநிரலானது இந்த மூன்று பகுதிகளிலுமே சேகரித்து வைக்கப்படுகின்றது.

எனினும் ஒரு நிகழ்ச்சி நிரலானது பொதுவாகப் பிரதான நினைவகத்தில் தான் சேகரித்து வைக்கப்படுகின்றது என்றவொரு கருத்து நிலவுகின்றது. நவீனயுகத்தில் மக்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் பிரச்சினைகளை நோக்க உதவும் ஒரு நட்பு இயந்திரமாக உதவும். கணனியானது மனிதனைப் போலவே இதுவும் ஒரு நோய்க்கு ஆளாகின்றது. ஆச்சரியம் என்னவெனில் கணனியைக் கண்டுபிடித்த மனிதனே அதற்குரிய நோயையும் உருவாக்கி இருக்கின்றான். இந்தநோய் தான் கணனி வைரஸ். இவற்றில் சில ஒரு குறிப்பிட்ட திகதி, நேரத்திற்கு மாத்திரம் காத்திருக்கும். மற்றையவை அடையாளம் காணும்வரை தங்கியிருக்கும்.

இவ்வைரஸ் விரைவாகப் பரவி தகவல்கூறுகளையும் நிகழ்ச்சி நிரல்களையும் அழித்துவிடுகின்றது. ஆனால் கணனியை ஒன்றும் செய்வதில்லை. வியூடேற்றா, ரெலிரெக்ஸ்ற் மெடின் பிறேம் என்றெல்லாம் பலதரப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒரே கணனியுடன் பல கணனிகள் தொடர்பு கொண்டுள்ளதால் இந்த வைரஸ் தொற்றிப் பரவிவிடுகின்றது. கணனி வைரசானது சிலவரிகள் கொண்ட அணைத் தொடராக ஒரு நிகழ்ச்சி நிரலின் தொடக்கத்திலோ அல்லது முடிவிலோ தொற்றிக் கொண்டிருக்கலாம். இது கணனியினுள் நினைவுப்பகுதியைச் சென்றவுடன் இந்த அணைகள் அல்லது நிகழ்ச்சி நிரல்களையே திரையில் காண்பிக்கும். அதேவேளை மற்றவற்றினை அழித்துவிடும். இதுவரை 25ற்கும் மேற்பட்ட வைரஸ்கள் இனம் காணப்படுகின்றன. வைரஸ் தொற்றலைத் தடுப்பதற்கு சில கணனி நிறுவனங்கள் வைரஸிற்கு எதிரான நிகழ்ச்சிநிரல்களைத் தயாரித்து அனுப்புகின்றன. இதனைக் கணனித் தொற்றலினைத் தடுக்கும் தடுப்பூசி என்றே கூறலாம். ஏனெனில் இன்று கணனியை வைரஸ் தொற்றலிலிருந்து முழுமையாகப் பாதுகாக்க எந்த வழியும் இல்லை என்பதுதான் உண்மையானநிலை.

ஆக்கம் :-
மா.கிறிஸ்ரிகொன்சலஸ்
தரம் 9

# My Mother

My Mother is tall.
She is very kind to me.
She is very Pretty.
She helps me in my work.
My Mother tells me stories.
My Mother can sing very well.
She lovers me and I love her too.

**S.Mithuna**
**Grade 3**

# MY FATHER

My father is a farmer.
He is very handsome.
He is thirty years old.
My father takes me to School.
He loves me very much.
I love my Father deeply.

**Grade 1**
**S.Vithusan**

# நான் போற்றும் பெரியார்

நான் போற்றும் பெரியார், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். ஆறுமுகநாவலரின் மாணவர் பரம்பரையில் வந்தவர் அவர். சைவத்திற்கும் தமிழிற்கும் இப்பெரியார் ஆற்றிய தொண்டுகள் ஈழத்தவராகிய எம்மால் என்றும் நன்றியுடன் நினைவிற் கொள்ள வேண்டியவை.

பண்டிதமணி 1899ஆம் ஆண்டு ஆனிச்சதய நாளில் (15.06.1899) சின்னத்தம்பி என்பாரின் புதல்வராய்த் தோன்றினார். அவர் பிறந்த ஊர் தென்மராட்சியைச் சேர்ந்த தனங்களப்பு . கிறிஸ்தவ பாடசாலை ஒன்றிலே ஐந்தாம் வகுப்புவரை கற்றபின் அவரின் முதற்கட்டக் கல்வி முற்றுப்பெற்றது. பத்தொன்பது வயதுவரை கல்வியில் நாட்டம் கொள்ளவில்லை.

பண்டிதமணியின் நல்விதியும் சைவத்தமிழராகிய நமது நற்பேறும் அவரின் இரண்டாவது கட்டக் கல்விக்கு வாய்ப்பளித்தன. வண்ணார்பண்ணையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் காவிய வகுப்பு 1917ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொடக்கியவர் பாடசாலை முகாமையாளரான ஸ்ரீமத் த.கைலாசபிள்ளை. இவர் நாவலரின் தமையனாரின் மகன். இவரிடமும் பேரறிஞரான சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளையிடமும் 1982ஆம் ஆண்டுவரை பண்டிதமணி தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு பண்டிதர் பரீட்சையிலும் தேறினார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று ஆசிரியரானார்.

பண்டிதமணியின் அறிவாற்றல்களைப் புகழ்ந்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் தமது சைவாசிரிய கலாசாலையில் அவரை விரிவுரையாளராய் நியமித்தனர். திருநெல்வேலியில் இருந்த இக்கலாசாலையிலே ஆயிரக்கணக்கான தமிழாசிரியர்களையும், தமிழ் அறிஞர்களையும், சைவமரபு உணர்ந்தோர்களையும் உருவாக்கிய பெருமை அவருக்குண்டு.

ஆரம்பகாலத்தில் பண்டிதமணி சிறந்த இலக்கிய பேச்சாளராய் விளங்கினார். பின்பு சைவசமய உண்மைகளை அறிவதிலும் ஆராய்வதிலும் அவரின் மனம் பெரிதும் ஈடுபட்டது. இலக்கியம் தொடர்பாகவும், சைவசமயம் தொடர்பாகவும் அவர் எழுதிய கட்டுரைகள் மிகப்பல. அவை நூல்களாய் வெளிவந்துள்ளன. இலக்கியவழி, சைவநற்சிந்தனை, பாரத நவமணிகள், சிந்தனைக் களஞ்சியம், சமயக்கட்டுரைகள் என்பன அவரின் நூல்களிற் சில.

நாவலர் வளர்த்த சைவமரபுக்கு இன்று பண்டிதமணி காவலராய் விளங்கி வந்தார். அவரின் பெருமையைப் போற்றி 1973ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகம் அவருக்கு "இலக்கிய கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கியது. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பண்டிதமணிப்பட்டமும் அறிஞர் களால் வழங்கப்பட்டது.

பண்டிதமணி சைவத்தை உயிராகப் போற்றியவர். சைவ ஆசாரங்களைப் பேணி வாழ்விற் கடைப்பிடித்து வந்தவர்; சிறந்த அறிவாளி; சிந்தனையாளர்; தமது இறுதிக்காலம் வரை தம்மை நாடி வந்தவர்களுக்கு அறிவை வாரி வாரி வழங்கி வந்தார். மாணவியாகவும் சிறுமியாகவும் உள்ள எனக்கு பண்டிதமணியை நேரிற்காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவரின் நூல்களைப் படித்து விளங்கிக்கொள்ளக் கூடிய அறிவு இல்லை. எனினும் பெரியார் என்றவகையில் அவரில் எனக்குப் பெரும் மதிப்புண்டு. 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் திகதி பண்டிதமணி சிவனடி சேர்ந்தார்.

ஆக்கம் :-
வி.டள்சி
தரம் - 9

# இசையும் மனித வாழ்வும்

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் இசை உன்னத இடத்தை வகிக்கின்றது. எல்லா உயிரினங்களையும் இசைவிப்பதனால் இசை எனப்படுகிறது. மனிதன் பிறந்தநாள் முதல் இறந்தநாள் வரை தனது வாழ்நாள் முழுவதும் இசையுடன் தொடர்புடையவனாக வாழ்கிறான். குழந்தை அழும்பொழுது பெற்ற தாயானவள் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டுகிறாள். தாலாட்டும்போது "ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீயழுதாய்" என்று பாடுகிறாள். தாலாட்டு இசையைக் கேட்ட . குழந்தையின் அழுகை நின்று விடுகிறது. எனவே இசை குழந்தையின் அழுகையைப் போக்குகிறது.

சிறுவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும்போது எண்ணையும் எழுத்தையும் மட்டும் கற்பதால் ஏற்படும் மனச்சோர்வை நீக்க இசை உதவுகிறது. பாடசாலை விழாக்களின்போது இசை முன்னணி வகிக்கிறது. ஏதாவது எந்த விழாவானாலும் பாடசாலைக்கொடி ஏற்றும்போது பாடசாலைக் கீதம் இசைக்கப்படுகிறது. எனவே விழாக்கள் யாவும் இனிமையான இசையுடனே ஆரம்பிக்கின்றன. இது மட்டுமா உலக நாடுகள் யாவற்றிலும் தத்தமது நாட்டிற்குரிய தேசியகீதம் இசைத்தே வைபவங்கள் தொடங்கப்படுகின்றன. எனவே உலகத்தில் இசையின் முக்கியத்துவம் புலனாகின்றது.

உலகமக்கள் அனைவரினதும் பொதுவானசடங்குகள் சமயச்சடங்குகள் அனைத்திலும் இசையே முன்னணி வகிக்கிறது. உதாரணமாக இந்து சமயத்தவரது சடங்குகளான திருமண வைபவம், அபரக் கிரியையான மரணச்சடங்கு போன்றவற்றை எடுத்து நோக்கும்போது இசையே முன்னணி வகிக்கிறது. திருமண வைபவத்தில் மங்கள இசையான நாதஸ்வரஇசை முழங்கப்படுகிறது. ஊஞ்சல் பாடல், ஆரத்திப் பாடல், நலுங்குப் பாடல் போன்ற பாடல்கள் இசைக்கப்படுவது வழக்கம்.

மரணச் சடங்கின்போது தொன்று தொட்டு ஒப்பாரி பாடப்பட்டு வருகிறது. அபரக் கிரியையின் போது சுண்ணமிடிப்புப் பாடல் பாடப்பட்டு வருகிறது. தேவார திருமுறைகள், சிவபுராணம் போன்றவை பாடப்படுகின்றதும் வழக்கம். அது போன்றே ஏனைய சமயத்தவரது சடங்குகளிலும் இசை முன்னணி வகிக்கிறது.

கிராமியமக்களின் வாழ்க்கையில் இசையின் பிரயோகம் அளப்பரியதாய் உள்ளது. கிராமிய மக்கள் தொழில் செய்யும் போது களைப்புத் தெரியாது. தாம் செய்யும் தொழிலுக்குகேற்ப பாடல்களை ஆக்கித் தாமாகவே மெட்டமைத்துப் பாடுகிறார்கள். இசைக்கு அடி நாதமே நாட்டார் பாடல்கள் என நூல்கள் கூறுகின்றன.

மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது இயல்பு. இன்பமான வேளையில் இசை பாடியோ இசை பாடக் கேட்டோ மகிழ்வது போல, துன்பமான வேளையிலும் இசை பாடியோ இசை பாடக்கேட்டோ மகிழ்ச்சியை வரவழைக்கின்றனர். தாமாகப் பாட குரல் வளம் இல்லாதவர் இசைக் கச்சேரி வானொலி இசை போன்றவற்றைக் கேட்டு இன்புறுவர். மேற்குறித்த விடயங்களை நோக்கும்போது மக்கள் வாழ்க்கையில் இசை இன்றியமையாத இடத்தை வகிக்கிறது என்று கூறினால் மிகையாகாது.

பு.அனுஷியா
தரம் - 10B

# கரப்பந்தாட்ட அணி - ௨00௧
## (௧௯ வயதின் கீழ்)




சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் முதலாம் இடத்தையும் வலயமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்ற கரப்பந்தாட்ட அணியினர்.

இருப்பவர்கள்

(இ.வ) செல்வன். செ. ஞானரூபன், செல்வன். க. திலகராஜ், செல்வன். க. சசிகரன், செல்வன். இ. சதீஸ்கரன், செல்வன். ச. அசோதரன் செல்வன். செ. பிரகாஸ் (அணியின் உபதலைவர்) செல்வன். து. நித்தியதயாளன்

(வ.இ) திரு. நா. இராஜகுமாரன் (ஆசிரியர்) திருமதி. ந. சந்திரகுமார் (ஆசிரியை) திருமதி. கௌ. கணேசலிங்கம் (உபஅதிபர்) செல்வன். இ. கோபிநாத் (பயிற்றுனர்) திருமதி. ஆ. ஜெயவீரசிங்கம் (அதிபர்) செல்வன். ச. குகநாதன் (அணித்தலைவர்) செல்வி. சிறீவதனி ஆறுமுகராசா (பொறுப்பாசிரியர்) திருமதி. வி. பாஸ்கரன் (உடற்கல்வி ஆசிரியை) ஆகியோர் காணப்படுகின்றனர்.

# உடற்பயிற்சி அணியினர் - ௨00௨



- கோட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட உடற்பயிற்சி அணியினருடன் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுனர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

( இ.வ) திருமதி.வி.பாஸ்கரன் (உடற் கல்வி ஆசிரியர், செல்வி.ஆறுமுகராசா ஸ்ரீவதனி (அணித்தலைவர்) திருமதி.சு.ஜெயவீரசிங்கம் (அதிபர்), செல்வன்.இ.கோபிநாத் (பயிற்றுனர்) திரு.நா.இராஜகுமாரன் (ஆசிரியர்)

# எழுத்துக்களின் குணங்கள்

| | | |
|---|---|---|
| மயக்கும் எழுத்து | - | பூ |
| பறக்கும் எழுத்து | - | ஈ |
| பல் இழிக்கும் எழுத்து | - | ஹி |
| அழைக்கும் எழுத்து | - | வா |
| அனுப்பும் எழுத்து | - | போ |
| அலறும் எழுத்து | - | ஆ |
| அதிகார எழுத்து | - | ம் |
| குறிக்கும் எழுத்து | - | நீ |
| வெறுக்கும் எழுத்து | - | சீ |
| உமிழும் எழுத்து | - | தூ |
| கேட்கும் எழுத்து | - | தா |
| மாத எழுத்து | - | தை |
| கனி எழுத்து | - | மா |
| அழிக்கும் எழுத்து | - | தீ |
| அணைக்கும் எழுத்து | - | கை |

# நான்கின் பெருமை

| | | |
|---|---|---|
| நாற்பாதங்கள் | - | சரியை, கிரியை, யோகம், ஞானம் |
| நாற் பொருட்கள் | - | அறம், பொருள், இன்பம், வீடு |
| நாற்குணங்கள் | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| நாற்படைகள் | - | தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை, யானைப்படை |
| நால்வேதங்கள் | - | இருக்கு, யசுர், சாமம், அதர்வம் |
| நால் வருணர்கள் | - | பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் |
| நாற் குரவர்கள் | - | சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் |
| நாற்குமாரர்கள் | - | சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் |

வை.இந்துஷா
தரம் 8A

# MY Country

My Country is Sri lanka
It's in the Indian ocean
It's a tropical country
My country has many ancient places.
It's very Small and very beautiful
The Capital of Sri lanka is Sri Jaeyawer Danapura
Mahawali Gange is the longest river
Pidurutalagala mountain is the highest mountain in our Country
Sri lanka Exports tea. rupper, and coconuts
many tourists visit my country
I love my coutry tery much.

S.SUREKA
GRADE 6

# MY SCHOOL

1. The name of my School is Anaicoddai Balasubramanium vidyalayam
2. It is a type II School
There are classes from Grade one to Grade eleven
My School principals name is Mrs.S.Jeyaveerasinham
There are about Six hundred and forty students in our School
My School is a mixed School
There are twenty six teachers in my School
8. During the last eight years we have been the Champion of the P.T. Competition for under 19 boys in Valikamam zone
I like my School very much

P.THEEVAPPIRIYA
GRADE 7

# உடற்பயிற்சி அணியினர் 2001

கோட்டமட்டத்திலும் வலய மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்ற உடற்பயிற்சி அணியினருடன் எமது பாடசாலை அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், பயிற்றுனர் ஆகியோர் காணப்படுகின்றனர்.



## எமது பாடசாலையின் பான்ட் வாத்திய அணியினர் - 1998



# தாவர வேர்கள்

## (குழு நாடகம்)

பாத்திரங்கள் - மாமா - சங்கர்
மகன் - காந்தன்
அம்மா - பாமா

(வீட்டில் அம்மா, மகன் சாப்பாட்டின் பின் அமர்ந்து உரையாடுகின்றனர்)

அம்மா :- என்ன தம்பி, நம்ம முற்றத்தில் நிற்கிற வேப்பமரம் வயது 50 ஆயிட்டுதே. அதை இன்னும் விட்டு வைத்தால் வேர் மிதந்து சாய்ந்து விடுமே. அதை விற்று எடுத்தால் ஏதாவது ஒன்று வாங்கலாமே. அதை வாங்க மரக்காரர் வந்து நல்ல விலை கேட்கினம்.

மகன் :- என்னம்மா வேம்பின் வேர் மிதக்குமோ?

காந்தன் :- தண்ணீருக்குள்ளேயே வேம்பு நிற்குது என்றே நினைக்கிறாய்?

அம்மா :- என்னடா மோனே, நான் சொன்னது பிழையா? முற்றம் கூட்ட முடியாமல் வேம்பைச் சுற்றி மிதந்து தானே இருக்குது.

மகன் :- அம்மா எந்த மரத்துக்கும் வேர் மண்ணுக்குக் கீழே போய் தண்ணீரையும், பசளையையும் எடுத்துக் கொடுக்கிறதுடன் மண்ணையும் இறுகப் பிடித்து மரம் விழவிடாமல் வைத்திருக்கிறது. அதைவிட மரங்களில் வேறு சில சிறப்பான வேலைகளையும் வேர் செய்கின்றது.

அம்மா :- என்னடா தம்பி வேர் வேலை செய்கிறதா?

மகன் :- ஓம் அம்மா, வேர் செய்கிற வேலை தெரியுமோனை
(i) வேர்களது தாவரத்தை மண்ணுடன் நிலைநிறுத்துதல்
(ii) நீர் உறிஞ்சுதல்
(iii) கனியுப்பு அதாவது பசளை உறிஞ்சுதல்

அம்மா :- இவ்வளவு தானா மோனை வேலை.

மகன் :- இல்லை அம்மா. இன்னும் இருக்கிறது அம்மா எங்கட வேம்பில் மிதந்து காணப்படுகின்றதே என்று சொன்னால் அதுவும் ஒரு வேர்தான். அதற்குப் பெயர் உதைப்பு வேர் எனச் சொல்லுவாங்க. அது என்ன செய்யும் தெரியுமோ!

அம்மா :- எனக்கென்ன தெரியும். நான் என்ன உன்னைவிடக் கூடப் படித்தேனா? அதற்காகத் தானே உன்னைப் படிப்பிக்கிறன்.

மகன் :- அம்மா கேளனை. உதைப்பு வேர் என்ன வேலை செய்கிறது எண்டால் பாரிய விருட்சமாய் வளர்கிற மரங்கள் சரிந்து விழுந்து விடாமல் பாதுகாக்க உதைப்பு வேர் காணப்படுகிறது. அது மரத்தைச் சுற்றி வளர்ந்து காணப்படும்.

அம்மா :- ஓமடா தம்பி! அரசடியிலே அரசமரத்தின் வேரில் ஏறியிருந்து பாக்கியம் கடலை விற்கிறா. அதைவிட பஸ்ஸுக்கு நிற்கிறவர்களும் குந்தி இருக்கிறார்கள்.

(கேற் திறந்து சத்தம் கேட்கிறது மாமா வருகிறார்)

மாமா :- பாமா! பாமா! என கூவி அழைக்கிறார்

அம்மா :- என்ன அண்ணே! வாருங்கோ! வாருங்கோ!

மாமா :- என்ன ஆறுதலாக இருக்கிறீங்க, எந்தக் கோட்டையைப் பிடிக்கப் பிளான் (Plan) போடுகிறீங்கள்.

காந்தன் :- இல்லை மாமா, அம்மா வேப்பமரம் விக்கப் போறாவாம். அதை வேண்ட மரக்காரர் வந்தவங்களாம்.

மாமா :- மரம் தறித்தால் இந்த வீட்டிலே இருக்க முடியுமா என்று நினைத்துப் பார்த்தீங்களோ, இப்ப காண்டாவனம் நடக்குது. வேப்பமரமே இலை கருகுது அப்ப?

அம்மா :- நினைத்துப் பார்த்தனான் அண்ணை. வேர் மிதந்து மரம் விழப்போகிறதென்றால் காந்தன் ஏதோ சொல்லுகிறான்.

மாமா :- காந்தன் என்னடா சொல்லுகிறாய்?

காந்தன் :- வேரின்ர தொழிலைப்பற்றிச் சொல்ல அம்மா முழுசிறா, அவவுக்கு ஒரே வியப்பாக இருக்கிறதாம்.

சங்கர் :- என்னடா சொன்னனி வேரைப்பற்றி?

காந்தன் :- மரம் நீண்டநாள் நிலைத்து நிற்க உயிர்வாழ வேர் உதவுகிறது. மரம் விழாமல் பாது காக்கவும் உதவுகிறது.

சங்கர் :- விழாமல் இருக்க தாழையைப் போல மிண்டி வேர் இருக்கிறதோ?

காந்தன் :- என்ன மாமா, தெரியாத போல கேட்கிறீங்கள்?

சங்கர் :- நாங்கள் A/L இலே படித்தது எல்லாம் உங்களுக்கு கொஞ்சம், கொஞ்சம் புகுத்துகினம் போலே பாடத்திலே.

காந்தன் :- நீங்கள் A/L படித்ததோ, நான் 9ஆம் தரத்தில் படிக்கிறன்.

- ★ அரசு, இலுப்பை, வேம்பு, மா என்பவற்றிலே உதைப்பு வேர் மரம் விழாமல் பாதுகாக்கிறது.
- ★ தாழை, ரம்மை மரங்களை விழாமல் மிண்டி வேர் பாதுகாக்கிறது.
- ★ ஆலமரத்தை விழுது என்று சொல்லப்படும் தாங்கு வேர் தாங்குகிறது.
- ★ வெற்றிலை, மிளசிலே கொடி விழாமல் நிற்க பற்றும் வேர் காணப்படுகிறது.
- ★ பனங்கற்றாளை தான் சார்ந்திருக்கும் பனையையோ அல்லது இலுப்பையோ இறுகப் பற்றிக் கொள்ள தழுவும் வேர் காணப்படுகிறது.
- ★ அதைவிட பனங்கற்றாளை நீர், வளியை உறிஞ்ச உறிஞ்சும்(பருகும்) வேர் காணப்படுகிறது.

காந்தன் :- அம்மா குருவிச்சையைத் தெரியுமோனே

அம்மா :- ஓ! தெரியாதா? வீட்டுக்கு வீடு எல்லாற்றை மா-வேம்பிலை நிறைய நிற்கிறதே அது என்னடா செய்யிறது.

காந்தன் :- அம்மா, குருவிச்சை எங்களைப் போல வளருது வேம்பு, மாவிலே

அம்மா :- என்னடா, நீயும் மரமோ?

சங்கர் :- பெற்றோர் இல்லையென்றால் பிள்ளைகள் வளர முடியுமோ, படிக்க முடியுமோ காந்தன் உங்களில் தான் தங்கியிருக்கிறான் அது போலத்தான் குருவிச்சை மா-வேம்பை நம்பியிருக்கிறது.

அம்மா :- என்ர மேன் கெட்டிக்காரன் எண்டுதானே சொல்லுறாய் அண்ணே!

காந்தன் :- என்ன மாமா வேர் இருக்கிறதென்றா? கேட்கிறீர்கள் வேர் இல்லாமல் நீர் கனியுப்பைப் பெற முடியுமோ? அதற்கு குருவிச்சை மா வேம்புத் தண்டிலிருந்து நீர் கனியுப்பைப் பெறுவதற்காக குருவிச்சை வேம்பு! மா பொருள் துமிடத்திலே ஒரு முடிச்சு காணப் படுகிறது. அதுதான் குருவிச்சையின்ர வேர். அதைப்பருகு வேர் என்று சொல்லுவார்கள்.

காந்தன் :- வேறு மாமா, கடற்கரையிலே சேற்று நிலத்திலே வாழுமே ஒரு தாவரம் அதின்ரை பெயரை மறந்து விட்டேன். (என்று தலையைச் சொறிகிறான்)

சங்கர் :- ஓ அதுவா? அதின்ர பெயர் கண்டல்கண்ணா?

காந்தன் :- ஓ ஓவென்று துள்ளுகிறான் அதற்கு அவினீசியா என்று விஞ்ஞானப் பெயர் உண்டு. இப்பதான் ஞாபகம் வருகிறது. ரீச்சர் சொன்னவா சேர்ந்து நிற்கிறவை சுவாசிக்க மாட்டினமாம். அதுக்காக அத்தாவரத்திலே சுவாசிப்பதற்காக அதாவது மூச்சு விடுவதற் காகப் பயன்படுகிற வேர் மூச்சுவேர் அல்லது சுவாசவேர் என அழைக்கப்படும்.

அம்மா :- என்னடா நான் ஒன்று சொல்ல நீ ஏது ஏதோ சொல்லுகிறாய். மாமாவும், மருமகனும் களைத்துப் போனிங்க. தேனீரைக் குடியுங்கள்.

சங்கர் :- மாமா, வேம்பு விக்குறதா உத்தேசம் இருக்குதோ?

அம்மா :- இல்லை அண்ணா, வேம்பு நல்லாக நிற்குமெண்டால் வீட்டுக்கும் ஒரு ஆறுதல் தானே இல்லாவிட்டா உந்த பங்குனி வெயிலிலே வீட்டிலே இருக்க முடியுமா? வேம்பின்ர ஆறுதல் தானே நாங்கள் சுகமாக இருக்கக் காரணம்.

காந்தன் :- வெயிலுக்கு மட்டும்தானே வேம்பு பயன்படுகிறது.

சங்கர் :- இலை - பசளையாகவும், மருந்தாகவும் , பூ - வடகமாகவும், விதை - எண்ணெய் (கிருமிநாசினி) , பிண்ணாக்கு - பசளை கிருமி நாசினிகளாகவும் பலவித நாசினியாகவும் பயன்படுகிறது.

அம்மா :- ஓ, ஓ போனவருடம் சிவபாதம் வீடு கொத்து வேப்பங்கொட்டை 500க்கு வாங்கினதென்று தங்கம் சொன்னவா.

காந்தன் :- இப்பதான் அம்மாவுக்கு வேப்பமரத்தைப் பற்றி விளங்கியிருக்கு

சங்கர் :- உன்ரமேன் வலு விண்ணனாய் இருக்கிறான். படிச்சதையெல்லாம் ஞாபகம் வைத்திருக் கிறான். நான் பாஸ்கர் வீட்டைபோக வேணும். போகேக்கே ஒருக்கா இந்தப் பக்கம் வந்தனான் சரி வாறன்.

காந்தன் :- நன்றி! மாமா!

ஆக்கம்
க.உ.ஜித்தா
தரம் – 11

# தொடர்பாடற் பரிவர்த்தனையில் இணையம்

இருபத்தோராம் நூற்றாண்டான இன்றைய நவீனஉலகில் பயன்படும் தொடர்பாடல் சாதனங்களாக தொலை அச்சு (Telex) இன்ரகொம் (Inter com), E.mail, பியூரவைற், செய்மதி (Space vehicles) தொலைபேசி, செலூலர், கணனி (Computer) வலைப்பின்னல் (Internet), இலத்திரனியல் தொடர்பு (E.mail) என்பவை விளங்குகின்றன. இத்தொடர்பாடல் சாதனங்கள் மருத்துவத் துறைகள், கல்வித் துறைகள் போன்றவற்றில் மட்டுமன்றி சர்வதேச வர்த்தகத்திலும் முக்கிய பங்காற்றுகின்றன. சர்வதேச வர்த்தகம் விருத்தியடைவதில் தொடர்பாடல் சாதனங்கள் பெரும்பங்கை ஆற்றியுள்ளன. இன்றைய சர்வதேச வர்த்தகத்தில் பயன்படும் முக்கிய தொடர்பாடல் சாதனமாக இன்ரர்நெற் விளங்குகின்றது.

இன்ரநெற் (Internet) என்பது கணனிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு சர்வதேச ரீதியாக தகவல் பரிமாற்றம் செய்வதேயாகும். அதாவது தொடர்புபடுத்தப்பட்ட வலைப்பின்னல்களுக்கிடையி லானது. (Interconnected Network) இதிலிருந்தே (Internet) உருவாகியது. இன்ரநெற்றானது உலகம் முழுவதிலுமுள்ள கூட்டுத்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் என்பவற்றை அடக்கிய நான்கு இலட்சம் கணனிகளைப் பயன்படுத்துகின்ற வலைப்பின்னல் தொடர்பாடலாகும். இத்தொடர்பாடலில் 150க்கும் மேற்பட்ட நாடுகள் காணப்படுவதோடு ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்குச் சேவையை வழங்கி வருகிறது. 'உலகில் பரந்தவலை' (world wide web) என்பது இன்ரநெற்றில் காணப்படும் புதிய தொடர்பாடல் முறையாகும். இவ் இன்ரநெற் தோன்றக் காரணமாக Calculator என்ற சாதனமே மூலகாரணமாக அமைந்தது.

தொடர்பாடலில் மட்டுமன்றி, இன்ரநெற்றானது தகவல் சேவையிலும் பயன்படுகின்றது இவை Elecronic mail ஐ அடிப்படையாகக் கொண்ட சாதனமான தொடர்பாடலாகும். மின்னியல் தபால் முறையில் (Electronic mail) மூன்று வழிகளில் தகவல் பெறலாம் அவையாவன:-

1. மின்னியல் தகவல் சஞ்சிகை
2. மின்னியல் வெளியீடு
3. வலைப்பின்னல் வெளியீடு

ரெல்நெற் என்பது இன்ரநெற் தகவல் பரிமாற்றத்துடன் இணைந்தது. வானிலை அறிக்கையைப் பெறுதல், விசேடவகைத் தகவல்களைப் பெறுதல் என்பனவற்றுக்கு ரெல்நெற் உதவுகிறது.

இன்ரர் நெற்றானது மருத்துவத்துறையிலும் பயன்படுகிறது. அண்மையில் (21ம் நூற்றாண்டில்) சத்திரசிகிச்சை முறைக்கு இவ் Internet பயன்படுகிறது. ஒரு நாட்டிலுள்ள மருத்துவர் வெளிநாட்டிலுள்ள நோயாளிக்கு சத்திரசிகிச்சை முறையை செய்ய வேண்டுமாயின் தனது நாட்டிலுள்ள கணனியில் சத்திரசிகிச்சை முறை செய்ய வழி கூறுவார். தனது நாட்டிலிருந்தே உடற்பாகங்களை கிழித்தெடுப்பதை கணனியில் பார்வையிட்டு, முறைகளை விளக்கி அந்நாட்டு மருத்துவருக்கு அறிவிப்பார். சர்வதேச வர்த்தகத்தில் அதாவது சர்வதேச வர்த்தகம் உருவாகக் காரணமே தொடர்பாடற் சாதனங்களாகும். வியாபாரிகள் பண்டங்களின் விலை, தரம், உற்பத்தி பற்றி கணனியில் விளம்பரம் செய்வர். இதனைப் பார்வையிட்ட கொள்வனவாளரோ, தொழில் நிறுவனமோ, வியாபாரியினது தொடர்பை கணனி மூலம் பெற்று பண்டத்தினைப் பார்வையிடுவார். இவ்வாறு நாடுகளுக்கிடையில் நட்புறவு உருவாகக் காரணமாக இன்ரநெற் அமைகிறது. இன்ரநெற்றானது கல்வித்துறையிலும் பங்காற்றுகிறது.

இலங்கையில் 1989ம் ஆண்டு மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் மின்னியல் தபால்முறை முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று இலங்கையானது "இன்ரநெற்" மூலம் பல்வேறு நாடுகளுடன் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்கின்றன. இலங்கையில் தொடர்பு கொள்ள முடியுமாறு இப்பணியை ஆற்ற இலங்கை இன்ரநெற் சேவை (Lanka Internet Services Ltd) என்பது உருவாக்கப்பட்டுள்ளது. இன்று யப்பான், அமெரிக்கா என்பன கணனியை உருவாக்குவதில் முன்னிலையில் நிற்கின்றன. எதிர்காலத்தில் தொடர்பாடலில் குறிப்பாக Internet தொடர்பாடலில் பலவகை உருவாகும். இதனால் வணிக கல்வித்துறையில் பல தொழில் நுட்பங்கள் புகுத்தப்படும்.

க.சிந்துஜானி
தரம் – 11

# My SELF

1. My name is Kalaichelvan Satheeskumar
2. I live at Anaicoddai
3. I an nine years ald. I am in Grade 4A
4. I study at Anaicoddai Balasubramanium Vidyalayam
5. My Father is a business man
6. My Mother is a nouse wife
7. My favourite Subject is English
8. I like Music and dance too
9. I have two sisters
10. I go to School on foot

S.KALAICHELVAN
GRADE 4A

# THE TREES

There are different kinds of trees
Trees are very useful for us
The trees are our friends
They help us a lot
They provide us food
Don't destroy trees
Grow more trees

S.SUBANKAN
GRADE 2

# MY PET

1. My Pet is a Small cat
2. He is Four months old
3. He is black in colour
4. We call him blacky
5. He is very pretty and has blue eyes
6. He is very faithful and plays with me
7. It can run very fast

T.GUNAKEETHAN
GRADE 5A

# நிறை வாழ்வுக்கு வழி வகுக்கும் பொறுமை என்னும் பெருங்குணம்

மண்ணின் மனுக்குலம் மாண்போடும், மதிப்போடும் வாழ்வதற்குரிய நற்பண்புகளில் "பொறுமை" என்றும் பெருமை தரக்கூடியது. பொறுமையின் சிறப்பை பல நூல்களும் புராணங்களும், காப்பியங்களும் வரலாறுகளும் எடுத்தியம்புகின்றன.

"பொறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" எனக் கற்றிருந்தோர் ஏற்றும் கலித்தொகையின் கூற்றிலிருந்து பொறுமையின் பெருமையும் அதன் அவசியமும் புலனாகிறது. தன்னைத் தூற்றுவாரையும் கூடப் பொறுத்துப் போற்றி மன்னிப்பதே சிறந்ததென கலித்தொகை மட்டுமல்ல தொன்மையான தொல்காப்பியமும் செப்பிநிற்கிறது. அரம்போலும் கூர்மையரேனும் உயர்பண்புகளைக் கொண்டாரே மேலோர் என்பதனையும் மற்றையோர் ஓரறிவின்தான் புல்லையும் மரத்தையும் கிளையையும் போன்றவாறே என்பதனையும் ஆன்றோரால் உறவே அக்கிளைகள் பிறப்பே" என்னும் பொறுமையெனும் குணத்தை கொண்டவரே நிறைமாந்தர் எனப் பகர்ந்து நிற்கின்றது. தன்னை இழிவு செய்தாரையும், பழித்தாரையும் பொறுத்துக் கொள்வதனாலும் தன்னை தோண்டுபவனையும் தாங்கி நிற்கும் நிலம் போலவும், தன்னைக் குறிவைத்து வெட்டி விழும்வரை நிழலைக் கொடுக்கும் மரம் போலவும் பொறுப்பதே தலையாயது என்பதனை,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை" எனக் குறள் கூறுகிறது.

பொறுமை ஊற்றெடுக்க அன்பு சுரக்கும். இவைகளோடிசைந்து பணிவு பிறக்கும். பொறுமையும் அன்பும் பணிவும் ஒருவரை மேம்படுத்தும் ஏணி போன்றவை. " பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்பதற்கமைய பணிவு பண்பு எவ்விடத்தும் சிறந்த அணிகலனாய் ஏற்று நடக்கக் கூடியது. பெண்களுக்கு பெருமை தருவது பொறுமையே இதுவே சிறந்த அணிகலன்.

பஞ்சமா பாதங்களான கொலை, களவு, கள், காமம், சினம் என்பவை மனுக்குல நெறிக்கு ஒவ்வாதன. இவைகளை நீக்கி வாழுதல் அரிது. இவற்றைக் கைக்கொள்ளாது விடுதல் நன்மை பயக்கவல்லது.

இவ்வுணர்வுகளைக் கைவிட்டு பொறுமை பேணி, ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் விழுப்பம் தானே வரும், மனிதன் பிழைக்கும் குற்றம் சிறிது இல்லாது குணம் நிறைந்து வாழ்பவனையே உலகம் போற்றும். சுற்றமும் வலிந்து சேரும். இதையே வள்ளுவரும்

"குற்றமில்லாக் குடி செய்து வாழ்வானை
சுற்றமாய் சூழுமுலகு" எனக் கூறுகின்றார்.

குணம் என்ற குன்றேறி வாழ்வோர் - மன்னிக்கத் தெரிந்த உள்ளம் கொண்டோர். மனிதருள் மாணிக்கமாய் வையகத்தில் வளமோடு வாழ்வார் என்பதில் ஐயமில்லை. ஒருவருக்குப் பெருந்துன்பம் செய்பவருக்கு எண்ணியதை நிறைவேற்றி நினைத்ததை அடைந்த திருப்தி அதனால் கிடைக்கக் கூடிய சந்தோஷம், அந்தக்கணம் - அந்தநாள் - மட்டும் கிடைக்கும். ஆனால் பொறுத்துக் கொண்டார்க்கோ வாழ்வோடு இணைந்து இன்பமே கிடைக்கும். பெருமையும் கீர்த்தியும் கிடைக்கும். பொறுமையின் சிறப்பை "ஒறுத்தாருக்கு ஒரு நாளை இன்பம், பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்" என்று தெளிவாகத் தெரிகிறது. தெள்ளுதமிழ் "பொறுத்தார் புவியாள்வார், பொங்கினார் காடுறைவர்" என்று இன்னும் விரித்துரைப்பார்.

துரியோதனன் பாண்டவர்களுக்கு செய்த கொடுமை அளப்பரியது. கேடுகள் பலவும் செய்த வேளைகளில் எல்லாம் பொங்கி எழுந்த தம்பியரை "பொறுதி" எனப் பணிந்து தருமர் நின்றபோது

வியந்து "அரவுயர்த்தோன் கொடுமையிலும் முரசு பார்த்தோய் நின் அருளுக்கு அஞ்சினேன். என வெஞ்சினம் கொண்டு வெருண்டெழுந்து வீமன் அண்ணனுக்குப் பணிகின்றான்.

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனோடு இராமர் போர்புரிந்தபோது இராவணன் முடியும் கொடியும், படையும், செருக்கும் இழந்து நிற்கும்போது இராமர் "இன்று போய் நாளை வா" என்பதிலும் பொறுமை புலப்படுகிறது.

இயேசுவின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்ட யூதர்கள் பொறுத்திலர். தேவகுமாரனை சிறுமையாக்க எண்ணி முள்முடி சூட்டினர். கசையால் அடித்து வதைத்தனர். பாரமிகு சிலுவையைச் சுமக்கச் செய்தனர். இறுதியாக நெற்றியிலும், கையிலும் பொற்பாதங்களிலும், மார்பிலும் கூராணி கொண்டு அறைந்தனர். கல்லுளியில் குருதி கொட்டியபோது மறைஞானி அவ்வேளையிலும் பரிந்து வந்தாய் "இன்னதெனலறிகிறார் தாஞ்செய்வதிலர் பிழையை மன்னியுமென்றெழிற் கனிவாய் மலர்ந்தார் நம்மருள் வள்ளல்" கனிவோடும் கருணையோடும் வேண்டிக் கொண்ட மனுகுலத்தின் மாணிக்கத்தை இந்த மாநிலம் மறக்குமோ? பொறுமையின் திருவுருவை, திவ்வியனை தெய்வமாக உலகம் வழிபடுகிறது. இதை மேம்படுத்த "தன்னுயிர் போலவே தனக்கழி வெண்ணும் பிறனுயிர் தன்னையும் கணித்தல் மன்னுயிரெல்லாம் கடவுள் வடிவாம்" எனப் பாரதியும் வியந்துரைக்கின்றனர். பிறவுயிர்கள் மீது செலுத்தும் அன்பும், மற்றவர் செய்யும் துன்பத்தையும் பொறுப்பது சிறப்புத்தரும் என்பது புலனாகிறது.

எவ்வளவு துன்பத்தையும் செய்து அதில் நிறைவைக் காணும் விளைவு ஒருவனுக்கு கொடுக்கக் கூடிய அதியுச்ச தண்டனையாக அவன் சிந்தித்தது. நாளும் பொழுதும் வெட்கப்பட்டு தன் செயலுக்குத் தானே வருந்தும் படியாக அவனுக்கு நன்மை செய்து விடுவதே மேல் "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என வள்ளுவர் கூறுகின்றார். பொறுமைக்கு பூமியைச் சொல்வர். அத்தகைய பூமியை காட்டிலும் பொறுமையோடு வாழ்ந்து பெருமையோடு மறைந்த காந்தி அடிகள். ஏகாதிபத்திய வெறிகொண்ட அந்நியன் அவர்மீது திணித்த குற்றங்கள் கூறிவைத்த குறைகள் ஏராளம். ஏளனம் பேசி சிறைப்படுத்தியபோதும் நெஞ்சுக்கு சீறிப்பாயும் குண்டுகளை காட்டிப் பயமுட்டிய போதும் சினம் கொண்டாரில்லை அந்நியனுக்கு அடி பணிந்தாரில்லை. மாறாக அன்புக்கும், பண்புக்கும், ஒழுக்கத்துக்கும், நேர்மைக்கும், கை கொண்ட கொள்கைகள் போன்றவற்றுக்குப் பணிந்தாரே ஒழிய "ஆறுவது சினம்" என்பதற்கொப்ப சகித்துக்கொண்டார். பொறுத்துக்கொண்டார். வெறுத்து ஒதுங்கிய வெள்ளையனே மலைத்தான். மலையிலும் வைரநெஞ்சம் கண்டு கரமெட்டித் தொழுமளவுக்கு பொறுமை கைகொடுத்தது. அவரின் நிலை கண்டு வெள்ளையனே தடுமாறினான். அந்த அளவுக்கு அந்நியன் வர அவர் தோள்கள் தினவெடுக்கவில்லை. கை வாலாந்தவில்லை, படைக்கலங்களோடு சேனை திரட்டவில்லை, சத்தம் உறுதுணையாக இலட்சோப லட்சம் மக்கள் அவர் பின்னே திரண்டனர். நிராயுதபாணிகளாய் அவர்கள் நின்றதை கண்ட அந்நியன் அஞ்சினான். அடுத்ததாக சுடும் பலவினைகள் விளைத்தபோதும் அவரின் அன்புக்கும், பண்புக்கும், பணிவுக்கும், பொறுமைக்கும் ஈற்றில் அடி பணிந்தான். வெள்ளையனே வெட்கித் தலைகுனிந்தபடி செய்துவிட்ட அந்தப் பெருமகனார் கொலை வெறியால் சுட்டுக் கொல்லப்பட்டபோது இறக்கும் தறுவாயில் "செய்வதின்ன தென்று அறியாது செய்வதன் பிழையை பொறுப்பது கடனே" என மன்னித்தருளிய மகாத்மா இராம நாமம் பாடி உயிர் துறந்தபோது இந்தியா மட்டுமல்ல முழு உலகமே அழுதது. குணம் என்னும் குன்றேறி குவலயத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியாரே வாழ்வும் வரலாறும் ஏற்றிப் போற்றத்தக்கது. வழி கொள்ளத்தக்கது.
வைதாரையும், வாழவைக்கும் மனப்பாங்கும் மன்னித்து வாழும் பக்குவமும் பணிவும் உடைய பண்பாளர் வாழ்வில் உயர்வர் என்பது திண்ணம்.

ஆக்கம்
வ.விஜயலட்சுமி
தரம் 10A

# சமாதானம் மலரட்டும்

உலகில் இன்று ஆழ் கடலில் சூழ் புயலில் சிக்கிய தலைவன் அற்ற ஒரு கப்பலைப் போலக் கொந்தளிக்கும் கடலில் சீறியெழும் அலைகட்கு மத்தியில் தத்தளித்துப் போராடிக் கொண்டிருக்கிறது உலகம். இன்று அனுபவிப்பது மரண வேதனையா? பிரசவ வேதனையா? என்று தெரியவில்லை.கடந்த சிலவருடங்களாக நடந்து கொண்டிருக்கிற உலகப் போர்களால் உலகம் சின்னாபின்னமாக்கப்பட்டு சீரழிந்து பலவந்தம், பலாத்காரம், பொறாமை, பேராசை போன்ற இராட்சத அலைகளால் மோதப்பட்டு சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருக்கின்றது. உலக மக்கள் அனைவரும் ஒருங்கு சேரச் சமாதானத் தேவதையை உலகுக்கு கொண்டு வரத்தவம் செய்கின்றனர். உலகப் பிரதமர்கள், அரசியல் ஞானிகள், தேசாபிமானிகள், மதத் தலைவர்கள் அனைவரும் சமாதானத்தை நிலைநாட்ட மண்டையை உடைத்துக் கொண்டு உழைக்கின்றார்கள். சமாதானம் இல்லையேல் உலகம் ஒருநாளும் உய்யப் போவதில்லை.

சரித்திரம் தோன்றிய நாள் தொட்டு சண்டையும், யுத்தமும் இருந்து கொண்டேயிருக்கின்றன. யுத்தங்களால் இளைத்துக் களைத்துச் சளைத்துப் போய் இருக்கும் மக்களும் அழிந்து பாழ்பட்டு கட்டாந்தரைகளாக மாறியுள்ள விளைநிலபுலங்களும், உருமாறி அழிந்து சிதைந்து தரைமட்டமாய் தொழிற்சாலைகளும் முன்னைய நிலையை அடைந்து இயங்க உலக சமாதானம் வேண்டும். ஒரு நாட்டை மற்றைய நாடு உறிஞ்சி விழுங்கும் மனப்பான்மை நீங்கி அந்நாட்டின் பொருளாதாரத்தால், கல்வியால், கலாசாரத்தால் இயற்கைக் கொடைகளால் அந்நாடு மட்டுமன்றி ஏனைய நாடுகளும் பயன் பெற்று முன்னேற வேண்டும் என்ற மனப்பான்மை உலக சமாதானத்தால் அன்றி வேறொன்றாலும் உண்டாகாது. இப்படியாக ஒரு நாட்டின் இயற்கை செயற்கை சாதனங்கள் மற்றொரு நாட்டிற்கு உதவினால் அந்த இரு நாடுகள் மட்டுமல்ல முழு உலகமே முன்னேற வழியுண்டு என்பதை யார் மறுப்பர்? "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற அறிவுரைப்படி முழு உலக நாடுகளும் ஒன்று கூடிச் சமாதானப்படுமேயாகில் உலகம் விண்ணவர் வாழும் விண்ணுலகையும் மிஞ்சி விடாதா? சகோதர மனப்பான்மை, சகிப்புத்தன்மை, அகிம்சை, தியாகச் சிந்தனை என்பன பெருகி தனித்தனி நாட்டின் பொருட்கள், உற்பத்திகள், கல்வி, கலாசாரம், விஞ்ஞானம் போன்ற இயற்கை செயற்கை சிறப்பம்சங்கள் யாவும் ஏனைய நாடுகளுக்கும் பரப்புவதுமன்றி இது சொந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஏதுவாகும் அன்றோ? பலம் குன்றிய நாட்டை மிருக பலத்தால் அடக்கித் தன்வசமாக்கிக் கொள்ளப்பார்க்கும் இன்றைய நிலைமாறி அந்நாட்டின் பலவீனம் எதுவென அறிந்து இரக்க மனப்பான்மையுடன் அந்நாட்டைக் கைதூக்க உலக சமாதானம் இன்றி வேறெதுதான் வழி திறக்கப்போகும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனப்பான்மையுடன் சகோதர வாஞ்சையுடன் வாழ வழிவகுப்பது சமாதானமே ஆகும். உலக சமாதானத்தின் அத்தியாவசியத்தை உணர்ந்த பலர் அதனை நிலைநாட்ட பல முறைகளில் பாடுபடுகின்றனர். ஒரு முறை ஐரோப்பாவில் ஓயாத யுத்தங்கள் மூண்டு அல்லற்பட்டபோது "வீயன்னா"உடன்படிக்கை என்றோர் உடன்படிக்கை மூலம் உலக சமாதானத்திற்கு அடிகோலப்பட்டது. முதலாம் உலக மகாயுத்தத்தின் பின் யுத்தக் கொடுமைகளை நன்குணர்ந்த முன்னை நாள் அமெரிக்க ஜனாதிபதியாகிய 'வில்சன்' என்பவர் சர்வதேச சங்கமொன்றை நிறுவி உலக சமாதானத்திற்கு வழிகாட்டினார். ரஷ்யாவும் ஜப்பானும் இதில் கலந்து ஒத்துழையாமை காரணமாகச் சர்வதேச சங்கம் வீழ்ச்சியுற்றது. எல்லா நாட்டுப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு சங்கம் நிறுவி உலக விவகாரங்களையும் உலக பிரச்சினைகளையும் பட்சபாரமின்றி நடுநிலைமையுடன் கவனித்து வருமேயானால் உலக சமாதானம் உண்டாகி உலகம் உய்ய இடமுண்டு. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு வீடும் சமாதானத்தின் இருப்பிடங்களாகி அன்புடனும் சகோதர மனப்பான்மையுடனும் வசிக்கப் பழகவேண்டும். ஆனால் இதற்கு மாறாகத் தந்தையை எமனுக்கு ஒப்பிடும் மக்களும், மக்களைக் கெட்டவர்களாக மதிக்கும் தந்தைகளும், சகோதரனை வஞ்சித்துப் பழிவாங்க அஞ்சாது தருணம் பார்த்திருக்கும் சகோதரரும் சகோதரரின் வாழ்வில் வயிற்றெரிச்சல்
கொள்ளும் சகோதரிகளும் உள்ள இந்தக் காலத்திலே குடும்பத்திலே கிராமத்திலே நாட்டிலே சமா தானமற்ற இந்த கலியுக காலத்திலே உலக சமாதானத்தை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

மனிதனை மிருகமாக்கிப் படுகுழியில் தள்ளும் பலவந்தம், பலாத்காரம், பேராசை. அஹிம்சை, என்பன அகன்று ஒவ்வொரு மக்கள் மனதிலும் சகோதர மனப்பான்மை, பொறுமை தியாக சிந்தை, விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மை, பிறர் சினேகிதம் என்பன ததும்பி வழியச் செய்ய வேண்டும். அரசாங்கமும் மதத் தலைவர்களும் தத்தமது சமூகங்களை நன்னெறியில் இட்டுச் சென்று உலக சமாதானத்திற்கு வழி செய்யவேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் வீட்டிலே சண்டையின்றி, தொல்லையின்றி, அன்னியோன்னியமாக வாழ்வதுடன் தங்கள் பிள்ளைகளையும் சமாதானப் பிரியர்களாக்க முயற்சிக்க வேண்டும். பாடசாலையில் ஆசிரியர்கள், பிள்ளைகளின் துர்க்குணங்களைக் களைந்து நற்குணம் பெருக்கி அவர்களை அன்பும் கருணையும் நிறைந்த உத்தம பிரஜைகளாக்க வேண்டும். அப்படியாயின் இவர்கள் உலக சமாதானத்திற்கு அடிகோலக் கூடியதாக இருக்கும்.

இன்னும் விஞ்ஞான ரீதியில் கண்டுபிடிக்கப்பட்ட அணுகுண்டுகளை கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ரொக்கட்டுக்கள் நவீன ஆயுதங்கள் போன்றவற்றின் வல்லமையைப் பரீட்சிக்க வல்லரசு தங்கள் காலத்தையும் பலத்தையும் செலவிடாமல் முழுவுலகம் உய்ய சமாதானத்தை நிலைநாட்ட சர்வதேச சங்கம் ஐக்கிய சங்கம் என்பன போன்ற சங்கங்களை உருவாக்க வேண்டும். நாடுகளின் பொருளாதாரம் கல்வி கலாசாரம், விஞ்ஞான சிந்தனை போன்ற நுட்பங்களையெல்லாம் அழிவுக் கருவிகளைப் படைப்பதில் அழிவு செய்யாது எல்லோரும் ஒரே குலமக்களேயென்னும் மனப்பான்மையுடன் உலக மக்களின் சௌகரியங்களை வாழ்க்கைகளை வளம்படுத்தி மனங்களைப் பண்படுத்தி மக்களைச் சந்தோஷமாக வாழப் பண்ணுவதற்கான வழி எல்லா நாடுகளும் தம் நேரத்தையும் பணத்தையும், செலவு செய்யுமாயின் உலக சாமாதானம் உலகைத் தேவலோகமாக மாற்றும் என்பது உண்மையிலும் உண்மை..

செ.விஜிதா
தரம் 10A

# அறிவொளி தருவன நூல்களே

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்ற வள்ளுவர் வாய்மொழிப் பொருளை உலகம் ஒருமுகமாக ஒப்புக் கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது. அவ்வாய்மொழி ஊனக் கண்ணிலும் ஞானக் கண்ணே சிறந்தது என்ற கருத்தினைத் தெளிவுறக் காட்டுகிறது. ஊனக் கண்ணின் காட்சிக்கு ஓரெல்லை உண்டு. அவ்வெல்லைக்கு அப்பாற் பட்ட எதனையும் அது காணல் அரிது. அன்றியும் அது நோயாலும் மூப்பாலும் கூர்மை குன்றிக் காட்சிப் பண்பையிழத்தல் கூடும். ஆயின் அறிவுக் கண்ணோ எதனாலுந் தடைப்படாது கண்காணாத் தேயங்களில் நிகழ்வனவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்வனவற்றையும் காணும் ஆற்றல் பெற்றது. அது நோயாலோ மூப்பாலோ ஒளியிழப்பதில்லை. அதனாலேயே கல்வி கற்று அறிவு படைத்தோர் "கண்ணுடையர்" எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். கல்லார் அறிவிலராய் ஊனக் கண்ணாலும் பயன் கொள்ள முடியாமையால் "முகத்திரண்டு புண்ணுடையர்"என இழிக்கப்படுகின்றார்கள் இக்குறளொன்றே அறிவு வளர்ச்சிக்கு உபகாரப்படுங் கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக்காட்டப் போதியதாகும்.

இத்தகைய கல்வியைப் பெற்றுப் பயன் கொள்வதற்கு இன்றுள்ள உலகிற் பல பல சாதனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நூல்கள், வானொலி, பேசும் படக்காட்சி, தொலைக்காட்சி, சித்திரம், பிரயாணம் என்பன குறிப்பிடத்தக்கன. எனினும் கல்வியென்னுந் தீபம் உலகில் ஏற்றப்பட்ட அன்று தொட்டு இன்றுவரை அதனையணைய விடாது நெய்யிட்டு ஒளிகாணச் செய்த பெருமை நூல்களுக்கே யுண்டு. மற்றைய சாதனங்கள் கல்வியறிவு வளர்ந்தபோது கண்டுபிடிக்கப்பட்டவை. எனவே கல்வியைப் பரப்பற்கமைந்த கருவிகளனைத்தினுக்கும் தாயாக விளங்குவது நூலாகும். அன்றியும் வானொலி, பேசும் படக்காட்சி போன்றன ஓரளவு வாழ்க்கை வசதி படைத்தவர்களாலேயே பயன்படுத்தப்படுவன. பாமரர்களின் கைக்கெட்டாதன. அவை கல்வித் துறைகளனைத்தையும் அறிவிக்கக்கூடியனவல்ல, கரையில்லார் கல்வியின் ஒவ்வொரு சிறுபகுதியையே அறிவிக்கக் கூடியன. ஆனால் நூல்கள் பாமர மக்களாலும் பயன்கொள்ளத்தக்க வகையில் உள்ளன. கல்வித்துறைகளனைத்தையும் திறம்பட அறிவிக்கவல்லன. எனவே, கல்விப் பெருஞ் செல்வத்தை உலகுக்கு வரையாது வழங்கும் வள்ளண்மை நூல்களுக்கன்றி பிறிதெதற்குமில்லை.

இன்றுள்ள நிலையில் உலகில் உள்ள நூல்களனைத்தையும் ஒன்று விடாது எரியூட்டியோ கடலிலிட்டோ அழித்துவிட்டால் என்ன நிகழும் என்பதைக் கற்பனைக் கண்கொண்டு கூடக் காண விரும்பாத அளவுக்கு அவை மக்கள் வாழ்வோடு இணைந்து விட்டன. நூல்களால் மக்கள் காலங்காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்று வந்தமையே அப்பிணைப்புக்குக் காரணமாகும். அந்நற்பயன்களை மனிதனாலே தேடற்பாலனவாய பெரும் பொருள்கள் என ஆன்றோர் கூறுவார். அவை அறம்,பொருள், இன்பம், வீடு என நால்வகைப்படும். அவற்றையே புருடார்த்தங்கள் எனவும் அழைப்பர். மனிதன் முழுமையான வாழ்வு வாழ்வதற்கு அவை இன்றியமையாதனவாகையால் அவ்வாறு புகழ்ந்துரைக்கப் பட்டன. தனிமனித வாழ்வுக்குஞ் சமூக வாழ்வுக்குமாக தீயன நீங்கி, நல்லன கொள்ளும் அறங்கள் பலவும் மனிதனுள்ளத்தில் வளர்தல் வேண்டும். இந்த அறிவுணர்வே உலக நல்வாழ்வு முளை கொள்ளுமிடம் அறவுணர்வு மிக்கவன் அறவழி நடந்து தீவினைவிட்டு பொருளீட்ட விளைவான். அவ்வித பொருளை நுகர்தலே மேலான இன்பம். இன்பத்தின் நிலையாமையையுணர்ந்து உலகப்பற்றை நீக்கி தவஞ்செய்து விடுதலையடைய முயலுதலே வீடு எனப்படும். இத்தகைய நெறிமுறை நல்வாழ்வினைப் பரும்பொருளாகக் கண்டுணர்தற்கேற்ற வாழ்க்கைச் சட்டகம் எனவும் கருதப்படும். நாற்பொருள்களில் ஒவ்வொன்றினையும் விரிவாகவும் மனங்கொள்ளத்தக்க வகையிலும் பலபல முறையினால் நூல்கள் அறிவுறுத்துகின்றன. "அறம் பொருள் இன்பம் வீட்டைதல் நூற்பயனே" என்ற சூத்திரம் நூல்களின் பயன்களைக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். எனவே, இக வாழ்வுக்கும் பர வாழ்வுக்குந் துணைபுரியும் வகையில் மனிதனின் பூரணவாழ்வுக்கு வழிகாட்டியாயமைவதே நூல்களின் முதற்பயனும் பெரும்பயனுமாம்.

வேதங்களும் வேத காலத்து மகரிஷிகள் கண்ட ஆழ்ந்தகன்ற தத்துவ தரிசனங்களுள் செவிவழியாகக் கேட்கப்படும் மனதிற் பதிக்கப்பட்டும் பின்னர் ஏடுகளிற் பிற்காலத்தில் நூல்களாக்கப்பட்டும் காக்கப்பட்டு வந்துள்ளன. காலத்துக்குக் காலம் உலகிலே தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவக்கோட்பாடுகள்,அறிவியல் முடிவுகள், ஆய்வுகள் என்பவற்றை இன்றும் நாம் நூல்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. உலகப் பேரிலக்கியங்கள் யாவும் நூல் வடிவிலமைந்து, காலவெள்ளத்தைக் கடந்து மக்களின் மனவுணர்வை வளர்க்க காரணமாகின்றது. இதனால் அவை காலத்துக்குக் காலம் மலர்ந்த அறிவுத்திறனைச் சிதைவும் அழிவும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து வைக்கும் களஞ்சியங்கள், வேண்டியவர்கள் வேண்டியபோது வேண்டியவற்றைப் பெற்றுத் துய்ப்பதற்கேற்ற வகையில், பூட்டுந் திறவு கோலுமின்றி, அடையாத நெடுங்கதவோடு விளங்கும் களஞ்சியங்கள்.

நூல்கள் நல்ல நண்பர்களிலும் பார்க்க ஒருவனுக்கு உறுதுணையாக அமையவல்லன. ஒருவன் நெறியில்லா நெறிச் சென்றவழி, இடித்துரைத்து நன்னெறி காட்டவல்ல நண்பர்கள் கிடைக்கப் பெறுதல் அரிது. அவர்கள் பல நற்பண்புகள் உடையோராய் அமைதல் அதனிலும் அரிது. அந்நற்பண்பு களோடு பல துறைகள் பற்றி தம் எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிமாறி வளர்ச்சிக்குத் துணைபுரியக் கூடிய நண்பர்களைப் பெறுதல் அரிதினுமரிது. அத்தகைய நண்பர்கள் வாய்க்கப் பெற்றாலும் அவர்கள் இடத்தாலுங் காலத்தாலும் தடைப்பட்டுக் கிடைத்தற்கரியராவார். அத்தகைய நண்பர்களின் உதவிகளனைத்தையும் நல்ல நூல்கள் செய்கின்றன. அவை அறநெறி இதுவெனக் காட்டி இடித்துரைக்குந்தகையன. அவை பண்பாடுள்ள சான்றோர்களால் ஆக்கப்பட்டமையால் 'குன்றர் கூறல்' மிகைப்படக்கூறல் முதலிய பத்துக் குற்றங்களுமின்றி, சுருங்கக்கூறல், விளங்கவைத்தல் முதலிய பத்தழகும் பெற்றுப் பொலிவன. ஒருவனது பலதுறைகள் பற்றிய கருத்துக்களுக்குள் சிந்தனைகளுக்கும் உரமளத்து, அவனை வளர்த்துவிடும் சிறப்புடையன. அன்றியும் அவை காலத்தாலோ இடத்தாலோ தடைப்படுவதில்லை. பலபல காலத்திலே பலபல இடங்களிலே எழுந்த நூல்களாயினும் அவை ஒருவன் விரும்பியபோது அவனிடம் பழகும் இயல்பின.

"நவில் தோறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்ற வள்ளுவர் வாய்மொழியை ஊன்றியுணரும் போது இவ்வுண்மை புலனாகும்.

ஓய்வு நேரத்தை இன்பமாகவும், பயன்படத்தக்க முறையிலுங் கழிப்பதற்கு நூல்கள் போற் சிறந்தன பிறிதில்லை. ஓய்வுநேர உபயோகத்திற்காக படக்காட்சி போன்ற பலபல அறிவியல்ச் சாதனங்களும் சூதாட்டம் போன்ற பலபல தீயவழிகளுங் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. முன்னைய குற்றமற்றனவாயினும் பொருட் செலவிற்பாற்படுவன. பின்னைய தீமை நிறைந்தனவாய் பண்பையும் பணத்தையும் அழித்துவிடுவன. ஆயின் நூல்களோ தீங்கற்றனவாய்ச் சுகஞ்செய்கின்றன. பொழுது போக்கிற்காக நூல்களை வாசித்தலால் நாளடைவில் வாசிக்கும் பழக்கமுங் கற்கும் ஆர்வமும் பிறக் கின்றன. இப்பழக்கமும் ஆர்வமும் முதிர்ச்சியடையும் போது பொழுது போக்கிற்குரிய நூல்களையன்றி அறிவுப்பயத்தற்கேற்ற நூல்களையும் படிக்கும் பண்பு பிறக்கின்றது. இப்பண்பு அவனிற் பதிந்து வாழ்வினைச் செம்மைப்படுத்துகின்றது.

மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாத கல்வியென்னுஞ் செழுஞ்சுடரை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவச்செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூல்கள் மதிக்கப்படுகின்றன. அவை மனிதன் பூரணவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன. அறிவென்னும் பெருநிதியத்தை விரும் பியவர்கள் விரும்பிய வேளையில் விரும்பிய அளவு பெற்று அனுபவித்து இன்புறுவதற்கமைந்த களஞ்சியங்களாய் அவை விளங்குகின்றன. நல்ல நண்பர்களிலும் பார்க்கப் பேருதவி புரிகின்றன. அவப்பொழுதையுந் தவப்பொழுதாய்க் கழித்தற்கேற்ற அரமருந்தன்ன கருவிகளாய் மிளிர்கின்றன. சுருங்கக் கூறின் இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையாகப் போற்றிப் பயன் கொள்ளப்பட வேண்டியனவாம்.

பொ.கார்த்தீபன்
தரம் – 10A

## ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்களும் பாடசாலை மாணவ தலைவர்களும் 2002



## பாடசாலை வலைபந்தாட்ட அணியினர் 2002




15 வயதின் கீழ் பெண்கள் இருப்பவர்கள்: திருமதி.பி.விக்கினேஸ்வரன், திருமதி.சு.ஜெயவீரசிங்கம்(அதிபர்), திருமதி.ஜீ.மகிழ்ராஜதுரை, செல்வி.க.சசிகலா(அணித்தலைவி)
நிற்போர் : பொ.தீபகா, இ.கிரிஜா, செ.வினோதினி, ச.றேணுகா, ச.கிருஸ்ணவேணி, கு.சுதாஜினி



# MY BIRTHDAY PARTY

My birthday was celebrated on the 21st of May. I was thirteen years on that day. I had a small party. I went to temple in the morning. My birthday cake was a teddy bear. My grandma gave me a gold bangle. I got a few other presents. My mother placed thirteen candles, on the birthday cake and lighted them. Then we all sang the birthday Song and clapped hands. I put out the candle lights and cut the cake. My brother took Some photos. My birthday party ended at about 4.30. p.m. It was avary happy day for me.

**T.MALARVILY**
**GRADE 8A**

# THE IMPORTANCE OF ENGLISH

There are many languages in the world but English is the only leading international language.

English is the language spoken throughout the world. It is language of Trade and Commerce, diplomacy and advance scientific knoeledge.

Most of the countries in the world English is taught either as a first or second language. In Srilanka English is taught a second language.

Almost all students in Srilanka need a good knowledge of English to learn Science, arts and Commerce. If we have a good knowledge of Inglish we have a good knowledge of English we can get any type of Employment ant where in the world. There are a number of books written in the English language. There fore to read and understand them we need a good and better knowledge of Englisg.

English is foreign lauguage but is no doubt that it remains with us ever since the British set foot, there fore a knowledge of English is of immense benefit to the people in Srilanka.

English is an official language in Srilanka as such the Srilankans are eager to learn English of we don't have a good knowledge of English we are shut from that fount of knowledge because all new discoveries of science medicine engineering, economics and other social sciences and arts are written and publeshed in the English Lauguage.

Hence if one wants to keep in touch with what is going on in different part's of the world, one must have a good knowledge of English in Srilanka Englesh is absolutely necessary.

If we want ourselves to the understood wherever we go we must nave a knowledge of English.

English has more words in it than any other lauguage.

**SINTHUJANI**
**GRADE 11**

# Mother Theresa

Mother Theresa was internationally respected for her work to relieve the sufferings of the poor. The sick and dying. She began her work of helping the desperately poor of India by bringing dying persons from the streets into a home where they could die in peace and dignity. She also established an orphanage. Through her untiting efforts she succeeded in forming a congregation of sisters whose work has now spread to five continents.

Mother Theresa was born in skipje, Albania on August 27, 1910 and was named Agnes Gonxha Bejaxhini. She left her home at the age of 18 to join the Institute of the Blessed virgin mary in Dublin. She entered the order of the sisters of our lady of Loreto when she was 18 years old. She was sent to culcutta by the sisters of Loreto and she become a Geography teacher in the order's school in calcutta. whill travelling on a train on september 10, 1946, she heard the cries of some sick and helpless people, which inspired her to help the poor. This experience she described as a "call with in a call" to help the desperately poor of India.


In early 1948, the year she became an Indian citizen, she asked permission to leave her convent and sister Agnes became Theresa she moved into the city's slums and started nursing to help the hundreds of destitutes in calcutta. She donned a blue - trimmed white saree which became the uniform of her missionaries of charity now number nearly 3, 000 sisters of various nationalities who work on five continents. They are helhed by about 400 brothers and thousands of lay volunteers who run 380 hospices, leper colonies and orphanages including 160 in India.

Mother Theresa won many awards for her dedicated work in serving the poorest of the poor. She was awarded the first john XXIII peace prize in 1968 by pope john paul. She was honoured with the jawahralal Nehru prize for International understanding in 1979 India's highest civilian decoration a year later.

Mother Theresa died in 1998 at the age 87. She ended her life in calcutta, the city that had inspired her as an 18 year old to establish her missionaries of charity order. Although mother Theresa is no more, the good work she began lives on, as the order's homes which first started in India have spread to 87 countries. "Adrop of deliverance in an ocean of suffering" is the single phrase she often used to describe her life's work.

T.SHAKILA
GRADE - 10A

# THE OUTER PLANETS




above:- the outer plants and the time they take to cirele the sun

Beyond theEarth and mars are the five outer planets in the solar system. These are jupiter, saturn, uranas, Neptune and pluto.

our own earth takes a year to go once right round the sun the outer planets all take much longer. This is because they are so much further away from . The Jupiter and other planets have a much greater distance to travel. pluto, which is the furrest away of all the outer planets that takes 248 years to go round the sun.

only jupiter and saturn were known in older days. the other three outer planets were discovered later. Auto was only discovered just over 30 years age.

All of the outer planets are 30 for away from the sun that there are very, very cold. The sunlight which reaches them is so weak that it is difficult even to see them.

There is no air around these planets. No man or animal could live on them. No plants could grow. They are just solid rock at the centre covered by a huge stick coat of ice. jupiter, which is the largest planet in all the solar system, *has an ice coating* 16,000 miles thick! This is over twice the distance from one side of the earth to the other through the earth's centre.

Over 350 years ago at one night an Italion scientist called Galileo was looking at jupiter through his telescope. you can imagine how excited he must have been to see four moons round it. He watched these for several nights, and found they went round jupiter just like our own moon goes round the earth. But we know now that there are eleven moons going round jupiter. Galileo saw only the four bissest.

All of the outer planets, except pluto, have moons going round them like jupiter. saturn has nine, uranus has five and Neptune has two.

The most interesting of the outer planets to look at through a telescope is saturn. you can see in the drawing what it loors like it is surrounded by three beautiful rings: there is no other planet yet discovered which has these rings. rings They are made up of millions of small bits of rock and dust moving together round saturn. scientists think that they might have once been another moon of saturn that broke up into ting pieces.

**J.MATHANARUBY**
**GRADE - 10A**

# மீளுமா பள்ளிக்காலம்

துள்ளித் திரிந்த காலம் - கதை
சொல்லித் திரிந்த காலம்
சொர்க்கம் தெரிந்த காலம் - மனம்
துக்கம் மறந்த காலம்

வெள்ளை உடை அணிந்த காலம்
வேற்றுமைகள் தணிந்த காலம்
வீறு நடை போட்ட காலம்
வெற்றி பெறத் துணிந்த காலம்

புத்திமதி கிடைத்த காலம் - பல
புத்தகங்கள் படித்த காலம்
புத்துணர்ச்சி பிடித்த காலம் - உயர்
புள்ளி பெறத் துடித்த காலம்

சோதனைகள் பல சந்தித்த காலம் - பெரும்
சாதனைகள் செய்ய சிந்தித்த காலம்
சேர்ந்து பழகித் தித்தித்த காலம் - மனம்
சோர்ந்த பின் பிறரை நிந்தித்த காலம்

பிறர் பொறுப்பில் வளர்ந்த காலம் - பெரும்
பொறுப்புக்களில் இருந்து தளர்ந்த காலம்
பலரின் ஆசிகள் தளிர்ந்த காலம் - நெஞ்சில்
பல்வகை ஆசைகள் மிளிர்ந்த காலம்

வரையறைகள் இருந்த காலம் - ஆனால்
வானம் வரையிலும் பறந்த காலம்
வஞ்சகங்கள் நெஞ்சில் துறந்த காலம் - அது
வையகத்தில் மிகவும் சிறந்த காலம்

கற்கக் கற்கக் கனிந்த காலம் - ஆசான்
காட்டிய வழியில் நடந்த காலம்
தலை நிமிர்ந்து நின்ற காலம் - அது
தரணியில் உயர்வான சந்தோச காலம்

பரீட்சை முடிந்ததும் முடிவுறும் காலம் - நம்
பாட்டாளிகளைப் பிரிந்திடும் காலம்
முடிந்து விட்டது நம் பரீட்சைக்காலம் - இனி
மீண்டும் வந்திடுமா எம் பள்ளிக்காலம்

ஆக்கம்
செல்வநாயகி செல்வரத்தினம்
(பழைய மாணவி)

# வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 1998

வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.வி.இராசையா அவர்கள் மங்கள விளக்கு ஏற்றுகிறார். திருமதி. ஜெ.இருதயநாதன் (பிரதிக்கல்விப்பணிப்பாளர் நிர்வாகம்), திருமதி ஆ.ஜெயவீரசிங்கம் (எமது பாடசாலை அதிபர்), திருமதி வி.பாஸ்கரன் (உடற்கல்வி ஆசிரியை) ஆகியோர் காணப்படுகின்றனர்.



## பாடசாலை சாரணர் குழு



இப்படத்தில் அதிபர் கு.ஜெயவீரசிங்கம் பொறுப்பாசிரியர் திருமதி.ந.சந்திரகுமார், சாரணிய குழுவிலுள்ள மாணவர்களும் காணப்படுகின்றனர்.

## கரப்பந்தாட்ட அணி–1996

(இ.வ.) :– செல்வன் சி.சுரேந்திரன் ( பயிற்றுனர்) செல்வன் கு. கோபாலசிங்கம், செல்வன் க. ஜெயசுதன் செல்வன் ந. ராஜ்குமார், செல்வன் இ.கோபிநாத் (அணித் தலைவர்) திருமதி ஆ.ஜெயவீரசிங்கம் (அதிபர்) செல்வன் அ.கலையரசன் (உபதலைவர்) செல்வன் ஜெ. ஜெகதீஸ்வரன், செல்வன் ப. நரேஸ்ராஜ் செல்வன் உமாகாந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



# பாடசாலை வலைப்பந்தாட்ட அணியினர் 2002

## 17 வயதின் கீழ் பெண்கள்




**இருப்பவர்கள் (இ.வ)**

திருமதி ந.சந்திரகுமார் (பொறுப்பாசிரியர்), திருமதி சூ.ஜெயவீரசிங்கம் (அதிபர்), திருமதி வி.பாஸ்கரன்(உடற்கல்வி ஆசிரியர்), செல்வி க.உஜித்தா (அணித்தலைவர்)

**நிற்பவர்கள் (வ.இ)**

செல்வி செ.செல்வமதி, செல்வி இ.சசிரேகா, செல்வி க.சிந்துஜானி (அணி உபதலைவர்), செல்வி.வ.சசிகலா, செல்வி இ.வினிதா, செல்வி ஜெ. ஜெயந்தி

# ஆரம்பக்கல்வி

வீட்டிலே பெற்றோரின் அன்பு அரவணைப்புடனும் வீட்டுச் சூழல் உறவுகளுடனும் வளர்ந்த குழந்தைகள் முன்பள்ளி சென்று சமூகத் தொடர்புகளைப் பெற்று ஐந்துவயது பூர்த்தியானதும் வித்தைகள் பல கற்றுப் பல்வகைத் தேர்ச்சி பெறுவதற்கு வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி நிலைக்கு அனுமதி பெற்றுக்கொள்கிறார்கள். ஆரம்பக்கல்வி என்பது தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கின்ற கல்வி ஆகும். 1999 தேசிய மட்ட புதிய கல்விச்சீர்திருத்தங்கள் - மறுசீரமைப்பின் கீழ் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப் புலம் பாடவிதான விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதிகருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முதன்மை நிலை 1 - தரங்கள் 1உம் 2உம்
முதன்மை நிலை 2 - தரங்கள் 3உம் 4உம்
முதன்மை நிலை 3 - தரம் 5

புதிய கல்விச்சீர்திருத்த முறையில் பிள்ளையின் கற்குந்திறன் இடர்ப்பாடுகள் முதலியவற்றை உடனுக்குடன் இனங்கண்டுகொள்வதற்கும் உரிய பின்னூட்டலை வழங்குவதற்கும் முறை சாராத கணிப்பீட்டு முறைமை அதாவது பாடசாலைசார் கணிப்பீட்டுமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யாவருக்கும் கல்வி என்ற இலக்கோடு ஒவ்வொரு முதன்மை நிலையின் இறுதியிலும் பிள்ளைகளின் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் எய்தப்பட்டமை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் மாணவர் எய்தவேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகள் பற்றிய நடைமுறைகளை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மேற்கொள்கிறார்கள். ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பீடுசெய்து தீர்மானம் எடுக்கும் முறைமையை விடுத்து குறித்தவொரு நோக்குடன் அடைவைக் கணிப்பீடு செய்கிறார்கள்.

புதிய கல்விச சீர்திருத்தங்களின் மூலம் தேசிய ஒற்றுமை, ஐக்கியம், சமாதானம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் எமது பிள்ளைகள் வளர்த்தெடுக்கப்படுவதற்கு இக்கல்விஅமைப்பு வள மூட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய குறிக்கோள்களை அடைவதற்கு அத்தியாவசியமான அடிப்படைத் தகைமைகள் ஐந்து தொகுதிகளாக்கப்பட்டுள்ளன. அவையாவன :-

1. தொடர்பாடல் பற்றிய தகைமைகள்
2. சூழல் தொடர்பான தகைமைகள்
3. ஒழுக்காறு சமயம் என்பன தொடர்பான தகைமைகள்
4. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் தகைமையும் விளையாட்டுத் தகைமையும்
5. கற்கக் கற்றல் தொடர்பான தகைமை என்பவை.

இவ் ஆரம்பக்கல்வி குழந்தைச் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அடித்தளம் போன்றது. ஆரம்பக்கல்வியில் மாணவர்கள் திறனைப் பெறுவதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோரின் பங்களிப்பு மிக மிக அவசியமானதாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க ஆரம்பக்கல்வியை ஆசிரியரின் வழிப்படுத்தலுக்கிணங்கி குருபக்தியோடு மாணவர்கள் கற்றுக்கொள்வார்கள் எனில் கல்லில் பதித்த எழுத்துக்கள்போல் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும். ஆசிரியர்கள் கற்பிப்பவற்றை நன்கு செவிமடுத்துக் கிரகித்துக் கொள்ளவும் தெளிவான உச்சரிப்புடன் பேசவும், நன்கு வாசிக்கவும் அச்சடித்த எழுத்தைப்போன்று எழுதவும் மொழித் திறனைப் பெற்றும் எண்களை வாசிக்கவும் கணிதச் செய்கைகளில் திறன் பெறவும் ஆரம்பக் கல்வியே துணைபுரிகின்றது என்பதனை வலியுறுத்திக் கூறுகின்றேன்.

ஆசிரியர்
செல்வி.பொ.விக்கினேஸ்வரி

# கணனியும் அதன் பயன்பாடும்

இன்றைய நவீன உலகில் கணனி பற்றித் தெரிந்திருக்காதவர்கள் இல்லையென்ற நிலை உருவாகின்ற பொழுதிலும் அதைப் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும், அறிந்திராதோர் பலர் உள்ள என்பது வெளிப்படையாகவுள்ளது.

இன்று கணனிச் சந்தையில் போட்டிபோட்டுக் கொண்டிருக்கும் முன்னணிக் கணனித் தயாரிப்புக்களில் இரண்டு தன்மைகளை எடுத்துநோக்க வேண்டியுள்ளது. ஒன்று Computer Hard ware மற்றது Computer Soff ware. ஒரு நல்ல மனிதனுடைய தன்மைகளைக் கருத்தில் கொள்ளும்பொழுது அவனுடைய உடலமைப்பையும் உளத்திறனையும் (அறிவு) எடுத்துக் கொள்வதைப்போல் கணனியிலும் அதன் Hardware features (திண்கணிமத்தின் தன்மைகள்) யும் Soft ware features (மென் கணிமம்) யும் கருத்தில் கொள்ளவேண்டும். காலத்திற்குக் காலம் கணனியின் தேவைகள் பெருகிவரும் இக்கால கட்டத்தில் இவ்விரண்டு தன்மைகளும் மிகவும் வளர்ச்சியுற்று வருகின்றன.

ஒரு மனிதனிடமுள்ள அறிவு எவ்வளவு மேலோங்கியுள்ளதோ அவ்வளவிற்கு மிகவும் பயன் பாடுள்ளவனாகின்றான். அதேபோல ஒரு கணனியிலுள்ள (பதியப்பட்டுள்ள) Software எவ்வளவு சிறந்ததாகவுள்ளதோ அவ்வளவிற்கு அக்கணனியின் பயன்பாடும் சிறந்ததாகவுள்ளது. இங்கு Software ஆனது கணனியைச் செயற்படுத்துவதற்கான / நெறிப்படுத்துவதற்கான / ஒரு வேலையைச் செய்வதற்கான Programes (செயற்றிட்டஒழுங்கு) ஆகும். இவை கணனியிலுள்ள Secondary Storage Unit எனப்படும். காந்தப் பூச்சுத் தட்டுக்களில் (Magnetic Disks) நிரந்தரமாக்கப்பட்டிருக்கும். தேவை யேற்படும்பொழுது கணனியின் நினைவகம் (main memory) எனும் பகுதிக்கு Magnet Disk இலுள்ள Programes பெற்றுக்கொள்ளப்படும். இவையே Electronic Signals ஆக மாற்றப்பட்டுக் கணனியை செயற்பட வைக்கின்றன. Main memory யிலுள்ள இந்த கணனிக்கு Power Supply இல்லாது போனதும் அவை அழிந்துவிடும். பின்பு கணனியை இயக்கும்போது இவற்றை Disk இல் இருந்து Main memory க்குப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் ஒரு பாவனையாளர் கணனியைப் பயன்படுத்தும் பொழுது அவரால் எழுதப்படும் Programes / அவர் செய்துமுடிக்க வேண்டிய வேலைக்கான Data (தரவுகள்) இவை யாவும் கணனிக்கு வழங்கப்படும்பொழுது தற்காலிகமாக Main memoryஇல் பதியப்படுகின்றன. இவை நீண்ட காலப் பயன்பாட்டிற்காக சேமித்து வைப்பதற்காக Magnetic Disk இலும் பதியப்படுகின்றன. இவ்வாறு பதியப்படும் Programes or Data Magnetic Disk இலுள்ள files என்று அழைக்கப்படும். இவற்றை மீண்டும் பயன்படுத்தும் பொழுது அடையாளம் காண்பதற்காகப் பொருத்தமான பெயர்களை (file names) வழங்கியே Magnetic Disk இல் பதியப்படும்.

ஒருவர் தனது வேலையொன்றைச் செய்து முடிக்கும் நோக்குடன் அது சம்பந்தமான அறிவை ஒரு புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதைப் போன்ற கணனியிலும் ஒரு பிரயோகத்துக்குத் தேவையான Programe ஐ Magnetic Disk இல் இருந்து Main memory யிற்கு பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக கணனியின் Magnetic Disk இலுள்ள எல்லா Programes ஐயும் Soft ware என்று அழைக்கப்படுகின்றது.

இந்த வகையில் கணனியின் Software ஐ பின்வரும் பிரிவுகளாக எடுத்து நோக்கலாம்.

(i) System Soft ware (ii) Application Soft ware.

System Soft ware எனப்படுவது கணனியைச் செயற்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான Programes ஆகும். Application Soft ware எனப்படுவது கணனியில் ஒரு பிரயோகத்தைப் பெறுவதற்கு உபயோகிக்கப்படும் Programes ஆகும்.

உதாரணமாக Word processing applications, Spreas sheet applications Database management Systems போன்றவற்றைக் கணனியினூடாக நிறைவேற்றுவதற்கு அதற்குரிய பொருத்தமான Soft ware ஐ Magnetic Disk இல் இருந்து Main memory இற்கு Load பண்ணி எமது வேலையைத் தொடரவேண்டும்.

இந்த வகையில் சிறந்ததொரு கணனியென்று நாம் கருதும்பொழுது அக்கணனியின் Hard Ware, Soft ware போன்றவற்றின் தன்மைகள் சிறந்ததாக இருக்க வேண்டும். மேலும் கணனி பற்றிய அறிவை நாம் பெறும்பொழுது, இந்த இரண்டு தன்மைகளையும் கற்கவேண்டும். கணனி பயன்படுத்தப் படும்போது ஒருவர் தனது குறிப்பிட்ட ஒரு பயன்பாட்டை (Application) மாத்திரம் செயற்படுத்துவதற்காக இருந்தால் அந்தப் பயன்பாட்டிற்குரிய Soft ware ஐ எப்படிக் கணனியில் main memory யிற்கு Magnetic Disk இல் இருந்து மாற்றுவது, அதில் எவ்வாறு தனது பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற விடயங்களைக் கற்றாலே போதுமானது.

ஆசிரியை
திருமதி ஜெ.மகேந்திரன்
(B.Com)

# தத்துவ முத்துக்களும் பொன்மொழிகளும்

1) அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்

- பாரதி -

2) பாராட்டுங்கள்

தங்களின் வேலையை தங்களின் அக்கறையை மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்று மனிதர்கள் விரும்புகின்றனர். எனவே சிக்கனம் இல்லாமல் மனமுவந்து பாராட்டுங்கள். பாராட்டுபவர்கள் தங்களின் பரந்த மனதை வெளிப்படுத்த முடிகிறது. பாராட்டுப் பெறுபவர்கள் இன்னும் ஊக்கத்துடன் செயற்படத் தூண்டுகோலாக இருக்கிறது. எனவே பாராட்டுங்கள்

-லோரைன்-

3) ஓர் ஆசிரியருக்கு

சிங்கத்தின் நெஞ்சுறுதியும், நீர்யானை போன்று கடின உடலும் வேட்டை நாயின் சக்தியும், ஒரு கழுதையின் பொறுமையும், ஒரு யானையின் நுண்ணறிவும், ஒரு எறும்பின் சுறுசுறுப்பும், ஒரு பூனையின் சமயோசிதமும் மிகமிகத் தேவை.

- எக்கர் டிரிட் ஜோன்ஸ் -

4) ஆயிரம் மதகுருமார்களை விட ஒரு நல்ல ஆசிரியர்கள் தான் சமூகத்துக்குப் பயன் உள்ளவர்.

- இங்கர்சால் -

5) அகிலத்தின் அணையாத விளக்காகிய அறிவுச்சுடரே மக்களுக்கு உண்மையான அணிகலன்

- சோக்கிரட்டீஸ் -

6) ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 2000 பக்கம் வாசிக்க வேண்டும். அப்படிப்பட்ட மக்களைக் கொண்ட நாடு தான் உண்மையாகவே கற்றறிந்ததொரு நாடு.

- ஐ. நா. -

7) கல்வியின் பெருமை கற்றதில் அல்ல. கற்றதை செயலில் காட்டுவதில் தான் தங்கியுள்ளது

8) யோசிப்பதென்பது வெளி உந்துதல்களுக்கு ஏற்ப பேச்சில்லாத வார்த்தைகளை அமைப்பது

9) அறியாமல் இருப்பது தவறன்று அறிய முயலாமல் இருப்பதே தவறு.

10) மனிதப் பிறவியின் ஒரே நோக்கம் கற்றுக் கொள்வதும் அதை உணர்ந்து கொள்வதும் தான்.

11) ஒரு மனிதனை அவன் சொல்லும் பதில்களால் அல்ல கேட்கும் கேள்விகளால் எடை போடலாம்.

12) வாழும் கலைதான் அறிவு: அறிவின் விஞ்ஞானமே தத்துவம்.

13) விலை மதிக்க முடியாதது தேவைப்படும் நேரத்தில் செய்யும் உதவி.

14) காலங்கள் உனக்காகக் காத்திராது : காலடிச் சுவடுகள் கூட வராது.

15) இயற்கை எனும் நூல் கணிதத்தால் வடிவமைக்கப்பட்டது.

ஆசிரியை
திருமதி.த.பாஸ்கரன்

# தாய்மையும் குழந்தையின் கல்வி வளர்ச்சியும்

ஒரு குழந்தையின் எதிர்காலத்தைத் திட்டமிடுவதில் பெரும்பங்கு வகிப்பவள் தாயாவாள். தாயானவள் "தாய்மை" உணர்வுடையவராக இருக்கவேண்டும். தன் கருவறையில் குழந்தை உற்பத்தியாகும் பொழுதே ஒரு கற்றறிவுள்ள தாயால் கல்விக்கான அத்திவாரம் இடப்படுகிறது. கருவுற்ற காலத்தை நன்கு பயனுள்ளதாகக் கொள்ளவேண்டும். குழந்தைக்கு கருவறையில் வைத்தே கல்வி என்னும் ஞானம் ஊட்டப்படவேண்டும். அதுவே குழந்தையின் பிற்கால வாழ்க்கையை ஒளி உள்ளதாக அமைப்பதற்கு உதவுகின்றது. இந்நிலையை அதிக தாய்மார்கள் உணர்வதில்லை.

இக்காலத்தில் சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் கருவுற்று இருக்கும் தாய்மார்களுக்கு நல்ல நூல்களை வாசிக்கத் தூண்ட வேண்டும். தாயானவள் நல்ல கருத்துக்களைக் கற்றுத் தெளிய வேண்டும். பின்தங்கிய கிராமப்புறங்களில் வாழும் தாய்மார்கள் இவ்விடயத்தில் சிறிதும் அக்கறை கொள்வதில்லை. நல்ல பேச்சுக்களைக் கேட்க வேண்டும். நல்லவர்களுடன் பழக வேண்டும். நல்ல பணிவு பொறுமையைக் கடைப்பிடித்து நல்ல சிந்தனைக்கருத்துக்களைக் கொள்ளவேண்டும். தன் கருவின் கல்வி வளர்ச்சிக்கு ஊட்டமாகக் கொள்ளவேண்டும். இக்காலம் குழந்தையின் எதிர்கால வாழ்வின் அடி அத்திவாரமாக அமைகின்ற ஒரு பொற்காலமாகும். இக்காலத்தை தாயானவள் கல்வி நூல்களை வாசித்து பொன் எனப் போற்றிப் பேண வேண்டும்.

கிராமத்தாய்மார் முன்பள்ளிக் கல்வியிலும் அவ்வளவு அக்கறை செலுத்துவதில்லை. இதனை நன்கு உணர்ந்து முன்பள்ளிப் பருவக்கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும். ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளிப் பருவக்கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது. குழந்தை பாடசாலைக் கல்விக்கு வருவதற்கு முன்பாக அக்குழந்தையின் மனப்பாங்கு, திறன், அறிவு, சீராக்கம் பெறும்காலம் இக்காலமாகும். முன்பள்ளிப் பருவத்திலேயே பாடசாலை முன் அனுமதி நடத்தைக்கோலம் சீர்செய்யப்படுகின்றது.

தரம் ஒன்றுக்கு குழந்தை முறையான கல்விப்புலத்தில் நுழைவதற்கு முன்பாக இக்கல்வி திட்டமிட்டு அளிக்கப்படவேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட முன்பள்ளியில் திட்டமிட்டு அளிக்கப்படும் கல்வியே குழந்தையின் ஆரம்பக் கல்விக்கு உறுதுணையாக அமைகின்றது. தாயானவள் முன்பள்ளியின் செயற்பாட்டை உணர்ந்து அதற்கேற்ற விதத்தில் குழந்தையின் வீட்டுச்சூழலை மாற்றிக் கொள்ள வேண்டும். வீட்டுச்சூழல் முன்பள்ளியில் கற்ற கல்வியை முன்னேற்றுவதாய் அமையவேண்டும்.

இக்காலத்தில் தாயானவள் பிள்ளையின் மொழி விருத்தியை ஏற்படுத்தும் காலமாகும். இப்பருவத்தில் குழந்தைக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலைகளைச் செய்து முடிக்கும் எண்ணக்கரு இலக்கங்கள். பாவனை சித்திரம், இசை ஆகியன வளர்ச்சியடைய வழிசமைக்க வேண்டும்.

இப்பருவத்திலே தாயானவள் குழந்தை அபிவிருத்தி சம்பந்தமான உரையாடலைச் செய்ய வேண்டும் பயமும் கவலையும் நீங்குதல், விரலை வாய்க்குள் வைத்திருத்தலைத் தவிர்த்தல், மலசலம் கழிக்கும் பயிற்சி, மலசலம் கழித்த பின் சவர்க்காரம் போட்டு கை கழுவுதல், உடற்சுத்தம், உடைச்சுத்தம், தொடர் பாடற்றிறன் விருத்தி ஆகியன ஏற்படுத்த வேண்டும்.

முன்பள்ளிச் செயற்பாட்டுடன் ஆரம்பக்கல்வியின் செயற்பாடும் தாய்மாரைப் பொறுத்தமட்டில் அவசியமாகின்றது. தரம் 1 கற்கும் மாணவனைப் பொறுத்த மட்டில் போதாது. அப்பிள்ளையின்

பாடசாலை செல்லும் தகுதியை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேணடும். பிள்ளை பாடசாலை சென்று கல்வி கற்றுவர வீட்டுச்சூழலால் ஊக்குவிக்கப்பட வேண்டும். குழந்தை பாடசாலை, வீடு ஆகிய இரண்டு சூழலாலும், கவர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரு வீட்டுத் தாய்க்கு ஆரம்பக்கல்வியின் பெறுமானம் நன்குணர்த்தப்பட வேண்டும்.தாய்மை நன்கு கனிந்த உள்ளம் உடையதாக இருக்கவேண்டும்.

தாய்மை பிள்ளையின் உள்ளத்தை வெல்லவேண்டும். உளப்பாங்கிற்கேற்ப பிள்ளையை கடிந்து நோக்காது ஊக்குவிக்கும் மனப்பாங்குடன் செயற்பட வேண்டும். அழகியல் செயற்பாட்டால் பிள்ளையின் மனதை வளம்படுத்த வேண்டும்.

எமது பாடசாலை போன்ற கிராமப்புறங்களில் உள்ள சூழலில் தந்தை குழந்தையின் கல்வியைப் பற்றி கூடுதலான அக்கறை காட்டாத நிலையே காணப்படுகிறது. தந்தைமார் கல்விப் பெறுமானம் பற்றி உணர்ந்துகொள்வதில்லை. தாம் உழைக்கும் வருமானத்தில் கூடிய பங்கை கல்விக்குச் செலவு செய்யத் தவறிவிடுகின்றனர். சில குடும்பங்களில் கணவரைப் போலவே தாயானவளும் கல்வியின் பெறுமானத்தை அறியாதவளாய் கணவனுடன் சேர்ந்து குழந்தைக்கு கல்வியை அளிக்கத் தவறி விடுகின்றாள்.

ஒவ்வொரு பெற்றோரையும் பாடசாலைக்கு அழைத்து அவர்களது போக்கை இனங்கண்டு குழந்தையின் கல்வி வளர்ச்சிக்கு வழி பிறக்கச் செய்யவேண்டும். குழந்தையின் கல்வி மேம்பாட்டிற்கு அக்குழந்தை களினூடாக உழைத்தலே நாம் செய்யும் பெரும் பயனாகும்.

"இன்றைய குழந்தைகளே நாளைய வருங்கால சந்ததியின் முதலீடுகள்"
என்பதை உணர்ந்து பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு தாய்மார்கள் "தாய்மை" உள்ளம் கொண்டு செயற்படுவோம். பிள்ளையை சிலையாகப் பாவனை செய்யாது உயிரோட்டமுள்ள உயிரியாக செயற்பட அரும்பாடுபடுவோம். பிள்ளையின் மனக்கிளர்ச்சிகளை வெளிக்கொணரச் செய்து சிந்தனையைத் தூண்டி புதுப்பாதையில் செல்ல வழிகாட்டுவோம்.

திருமதி. அம்பிகை சிவஞானம்
PRI, TRD, B.A.Dip in Edu

# பாடசாலைகளில் சீர்மியத்தை ஒழுங்கமைத்தல்

இன்றைய நமது சூழலில் மக்கள் பல வகையான நெருக்கடிகளுக்குள்ளாகிறார்கள். போர் நிலை நீடித்து வருவதாலும் நவீன வாழ்க்கை வசதிகளுக்கேற்ப போக்குவரத்து வசதிகள் அதிகரிப்பதாலும் பலர் இறக்கின்றனர். பலர் காயமடைகின்றனர். மேலும் பலர் தம் உடைகளையும் வீடுகளையும் இழந்து போகின்றனர். குடும்பங்கள் குழம்பிப் போகின்றன. சமூகத்தின் வாழ்வு முழுவதுமே அலைந்து குலைந்து போகின்றது. இயல்பான வாழ்க்கை அமைதி அற்றுப் போகிறது.

இதனாற் பஞ்சமும் நோயும் பெருக்கமடைகின்றன. சுற்றாடற் சீர்கேட்டினால் நேரும் தொற்று நோய்களும் நம்மை வருத்துகின்றன. போர்ச்சூழல் நீடித்து வருவதனாலும் அல்லது போர்ச் சூழல் முடிந்து சமாதானம் ஏற்பட்டதாலும் அதன் தாக்கவிளைவுகள் 10 வருடங்கள் சென்றாலும் பசுமை மாறாத நிலையில் மக்கள் மனதில் புரையோடிக் கொண்டிருக்கும். இதனால் ஏற்படும் அவலங்களைப் பணங்கொடுத்து புனர்வாழ்வு செய்ய முடியும் என்ற நிலையை அரசாங்கம் எதிர்பார்த்தல் கூடாது. வருங்கால சந்ததியினரின் பிஞ்சு உள்ளங்கள் மாறாத மனவரவை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் அவர்களையும் அவர்கள் பெற்றோர், உற்றார், உறவினர் அயலவர், சமூகத்தவர் மனங்களிலும் பரபரப்பு, பதகளிப்பு, அச்சம், தவிப்பு போன்றவை உளப்பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்வாறான நிலையில் மக்களின் மனநலத்தைப் பேணும் முயற்சிகள் இன்றியமையாதன.

வடக்கு கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக மீன் பிடிப்பவர்கள், கமக்காரர்கள், நாளாந்தக் கூலிகள் என்போர் தமது வருவாயினை முற்றாக இழந்து விட்டனர். இதனை விட மூலதனப் பற்றாக்குறையாலும் பெரிய தொழில் நிறுவனம் அழிவுற்றமையினாலும் , தச்சுவேலை, மேசன்வேலை, இயந்திர வாகனங்களைத் திருத்தும் வேலை, உலோகங்களை ஒட்டும் பூச்சு வேலை போன்றவை அளப்பரிய பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றன.

பாரிய தொழிற்சாலைகள், சீமெந்துத் தொழிற்சாலைகள், அஸ்பெஸ்டஸ் தொழிற்சாலைகள் போன்றவற்றின் செயலிழப்பு பயிர்செய்யக் கூடிய நிலங்களில் மக்கள் இடம்பெயர்தல் கடலோரப் பகுதி மக்கள் குடிபெயர்ந்தமை, தடைசெய்யப்பட்ட கடல்நிலப் பாதுகாப்பு வலயங்கள், பசளை, எரிபொருள், மின்சாரத் தேவைகள் பூர்த்தியாக்காத நிலைமைகள் கூட வாய்ப்பான தொழில்களின் வருவாயில் கூட இழப்பினைத் தோற்றுவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணிகளால் உருவாகும் பொருளாதாரச் சீரழிவும் அதன் நேரடி விளைவான வறுமையும் எமது மக்களில் கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார், சிறார்கள் என்பவரின் போசாக்கின்மையை தோற்றுவித்துள்ளன. தத்தம் தொழில்களில் உற்சாகமாக ஈடுபட்டு உழைத்த பலர் வேலையின்மை யினால் வீணாய் அங்கலாய்த்துத் தங்கள் நாட்களைச் சும்மா கழிக்க நிர்ப்பந்திக்கப்படும்பொழுது விரக்தியும் வெறுப்பும் உண்டாவது இயற்கை. இதனுடன் வருமானமின்மையும் பொருளாதாரக் கஷ்டங்களும் அவர்களின் நிலையைக் கூடுதலாக மோசமாக்கும். இவ்வாறான பல நீண்டகால நெருக்கீடுகள் காலக் கிரமத்திலே உறவுகளிலே பலவிதமான அபிப்பிராயங்களையும் உரசல்களையும் உருவாக்கிக் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள் போன்ற குடும்ப சமூக தொடர்புகள் பிரச்சினைகள் ஏற்படுத்தியுள்ளன.

இதனாற் பள்ளிசெல்லும் மாணவர் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் முழுமனதுடன் தொழிற்படமுடியாத நிலையுடன் காணப்படுகின்றனர். இவர்கள் கல்விக்குத் தேவையான உபகரணங் களைக் கொண்டு வராமையும் கல்வி கற்றலில் ஆர்வத்துடனும் செயலாற்ற முடியாமையும் சகமாணவர்களை ஊறு விளைவித்தும், ஒதுக்கியும் ஆசிரியர் ஏதேனும் கேட்டவுடன் பயப்படுதல், அஞ்சி ஒதுங்கும் சுபாவம் காணப்படுதல், இலகுவில் அழுகுதல், தொட்டாற் சுருங்கித் தன்மை பெற்றோர், ஆசிரியர், குடும்பத்தவர், சகமாணவர் முதலியோர்களுடன் உறவுகளில் குறைபாடுகளில் சந்தேகிக்கும் தன்மை கலகலப்பற்ற நிலை, வகுப்புகளில் ஆசிரியரில்லாத வேளையில் எல்லை மீறிய கோபம் காட்டுதல், சகமாணவர்கள் மீது சீறி எதிர்க்கும் தன்மை, அடித்துத் துன்புறுத்தல், களவெடுத்தல், வகுப்பில் இருக்காது சென்று விடுதல், பாடசாலைக்குப் பிந்திவருதல், பாடசாலை வேலைகளை ஒழுங்காகச் செய்யாதிருத்தல், அழுக்கான ஆடை அணிந்திருத்தல், பாடசாலையில் நாட்டமின்மை போன்ற அறிகுறிகள் ஒரு பிள்ளையின் உணர்ச்சிக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களின் சான்றுகள் ஆகும்.

இதைவிட எமதுநாட்டிலே பிறிதொரு பிரச்சினையும் காணப்படுகின்றது. மாணவர்கள் தமக்குரிய பாடங்களையும் கற்கைநெறிகளையும் தெரிவுசெய்யும்போது அவர்களின் தனித்துவங்களைப் பற்றி பகுத்தாராயாது பெற்றோரும் மூத்தோரும் தமது விருப்பங்களையும் தெரிவுகளையும் பிள்ளைகள் மீது சுமத்தும்போது நிலமை மேலும் சிக்கலடைகிறது. இதைவிட தனியாள் வேறுபாடுகள் நிராகரிக் கப்படும்போது நிறைவுபெறாத ஆளுமை உருவாக்கம் நிகழ்வதால் ஒவ்வொரு மாணவரிடத்தும் மலர வேண்டிய புத்தாக்கங்களும் புதிய கண்டுபிடிப்புக்களும் ஏற்படாமல் போய்விடுகின்றன. தத்துவம் மிக்க கலைஞர்களையோ, விஞ்ஞானிகளையோ, சிந்தனையாளர்களையோ, ஆற்றுகைத் திறனுள்ள வர்களையோ உருவாக்க முடியாமற் போய்விடும்.

இன்று விஞ்ஞானத் தொழினுட்ப முன்னேற்றம், சனத்தொகைப் பெருக்கம், நகரங்களுக்கு இடம்பெயர்தல், சனத்தொகைத் தொடர்பு விரிவாக்கம் மாற்றமடையும் கலாச்சாரம், காலாவதியாகும் அறிவுத்திறன், வாழ்க்கை முறை சிக்கலடைந்து வருவதுடன் கணனி, இன்ரநெற் தகவற் தொழினுட்பம், ஆங்கிலத்தின் அவசியத் தன்மை, அறிவுகள் தொடர முடியாமல் இருந்ததினால் கல்வியில் பின்தங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதைவிட இன்று தொழிற்றுறைகள் பல்கிப் பெருகி ஒவ்வொரு ஏற்ற தொழிலின்றி வருந்துவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

தகவற் காலத்திற்கேற்ப தற்போது நடைபெற்று வருவதும் துரிதமானதும் சிக்கலானதுமான சமூக பொருளாதார அமைப்பினுள்ளும் அறிவுசார் முதலீட்டினுள்ளும் பெரும்பாலும் ஈடுகொடுக்க பல்வகையான கஷ்டங்களுக்கு ஆளாகின்ற முக்கிய பிரிவினராக அமைவது சிறுவர்களாவர். ஆன படியால் பாடசாலை முறைமைக்குள் சகல பாடசாலைகளிலும் மாணவ சீர்மியச் சேவையொன்றை ஆரம்பிப்பதன் தேவை எழுந்துள்ளது. அதற்காக நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் 2002இலிருந்து இச்சேவைத் திட்டத்தை ஆரம்பிக்கக் கல்விஅமைச்சு சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

## ஒரு பாடசாலையில் அமுல் நடாத்தப்பட்ட சீர்மிய நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள்

(i) பல்வேறு வகையான உடல்/உள்ளம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பாடசாலைச் சிறுவர் தடைகளை எதிர்த்து உரிய கல்விச்செயற்பாட்டில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கும், எதிர்பார்ப்ப தற்கும் குறிக்கோளை அடைவதற்கும் வாய்ப்பை வழங்குதல்.

(ii) சமூகத்தோடிணைந்த பூரண ஆளுமைப் பண்பு கொண்ட ஒருவரை பாடசாலையிலிருந்து சமூகத்திற்கு பிரவேசித்தல்.

(iii) மாணவர்களின் பலத்தையும், பலவீனத்தையும் இனங்கண்டு சுயஅபிவிருத்தி காண வாய்ப்பை வழங்குதல்.

(iv) மாணவர் எதிர்காலத் தொழில் பற்றிய சரியான எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு வாய்ப்பளித்தல்.

சீர்மியத்தை நாடும் நபரை சீர்மிய நாடி எனவும் சீர்மியம் கூறுபவரை சீர்மியர் எனவும் அழைக்கப்படுவர்.

## சீர்மியத் தகைமைகள்

(i) 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆசிரிய சேவை அனுபவம் பெற்றிருத்தல்

(ii) சேவை விருப்பும் அர்ப்பணிப்பும் உடையவராக இருத்தல்

(iii) மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருத்தல்

(iv) மாணவர்களுடன் சினேகமாகவும், அன்பாகவும், புரிந்துணர்வுடனும், சமதன்மையுடனும் செயற்படக் கூடியவராக இருத்தல்.

## கடமையின் தன்மைகள்

(i) 300 மாணவர்களுக்கு ஒரு சீர்மியரை நியமித்தல்

(ii) 20 மணித்தியால கற்பித்தல் நடவடிக்கையிலிருந்து விடுபட்டு பூரணமாக சீர்மிய நடவடிக்கைகளில் ஈடுபடல்.

(iii) சீர்மியம் செய்யும் ஆசிரியர் பாடசாலையின் மேலதிக ஆசிரியர் எனக் கணக்கிடப்படமாட்டார்.

(iv) இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய சகல சிறப்புரிமைகளையும் பெறுவதற்கு உரித்துடையவர்.

(v) சீரமியச் சேவையில் அவர் காட்டிய திறமைகள் பங்குபற்றும் மணித்தியாலங்கள் பதவியுயர்விற்காக கணக்கிடப்படுகிறது.

## சீரமிய ஆசிரியரின் கட்டுப்பாடுகள்

(i) சீரமிய ஆசிரியரை சீரமிய நாடியான மாணவன் தேவையான சந்தர்ப்பங்களில் சந்தித்து சீரமியம் கொள்வதற்கு நடவடிக்கைத் திட்டமிடல்.

(ii) சீரமிய ஆசிரியர் சீரமிய நாடியான மாணவனுக்கு கல்வி, குடும்பம், எதிர்காலத் தொழில்துறை ஆகியவற்றிற்குரிய சீரமியம் வழங்குவது ஆசிரியரது கட்டுப்பாடுகளாகும்.

(iii) பாடசாலையில் அமுல் நடாத்தவேண்டிய சீரமியத் திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளல்

(iv) மாணவர்களுக்கான வசதிசெய்து கொடுத்து சமயத் தலையீடுகள் மூலம் அவர்களை வழி நடாத்துதல்.

(v) வேலைத்திட்டம் பற்றி அதிபர் மூலமாக ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோருக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.

## சீரமியச் செயற்பாட்டின் தேவைகள்

(i) சீரமியச் செயற்பாட்டின் போது இரகசியங்களைப் பேணல்

(ii) நடைமுறைப்படுத்தப்படும் கோவைகளின் இரகசியத் தன்மைகளைப் பேணிப் பாதுகாத்தல்.

(iii) மாணவர்களுடன் செயற்படுத்தும்போது அவர்களின் உளப் பாதுகாப்புக்குட்படாதவகையில் திட்டமிடல்.

(iv) சீரமியம் செயற்படும் இடம் 20 x 10 அடிகொண்ட அறையும் பாதுகாப்பான கதவுடனும் 3 கதிரை, கபினெட் ஆகியன கொண்டு இருப்பது அவசியம்.

## பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டம்

(i) கல்விக் கோட்ட மட்டத்தில் 3 மாதத்திற்கு ஒரு தடவை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சீரமியப் பாடப் பொறுப்பு ஆசிரியர்களின் கூட்டமொன்றை நடாத்தி நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொள்ள வேண்டும்.

(ii) 4 மாதங்களுக்கொரு முறை மாகாணக் கல்விக் காரியாலயத்தின் மூலம் மேலுள்ள நிகழ்ச்சி நிரல் பற்றிய முன்னேற்ற ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

(iii) 6 மாதங்களுக்கொரு முறை கல்வி அமைச்சு மட்டத்தில் அல்லது மாகாணங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான மதிப்பீடு நடைபெறுதல் வேண்டும்.

## மேற்பார்வைச் செயற்பாடு

கீழ் குறிப்பிட்ட முறைகளில் அமுல் நடாத்துதல்

(i) பாடசாலையின் உள்ளக மேற்பார்வை

(ii) கோட்டமட்ட மற்றும் வலய மட்ட மேற்பார்வை

(iii) மாகாணமட்ட மேற்பார்வை

எல்லா மேற்பார்வை செயற்பாடுகளின் போதும் சீரமிய நிகழ்ச்சியின் அபிவிருத்திக்கான நடவடிக் கைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதோடு மாணவரின் தனிப்பட்ட சுபாவங்களுக்கு பாதிப்புகள் ஏற்படாது செயற்பட வேண்டும்.

★ சீரமிய வேலைகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற ஆசிரியரின் தொழில் அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கைகள் கல்வி அமைச்சால் தயாரிக்கப்படல்.

★ வெற்றிகரமான சீரமியக் கலாச்சார முறையொன்றைப் பாடசாலையில் கட்டியெழுப்பி மாணவபரம் பரையினரின் எதிர்கால நலனுக்காக செயற்படுவதற்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர் அனைவரும் வழங்கும் ஒத்துழைப்பு மிகப் பெரிதாகக் கொள்ளப்படும்.

செல்வி த.கனகசபை
(விஞ்ஞான ஆசிரியை) M.ed.

# வீட்டு வைத்தியம்

**பல்வலி** :- அறுகம்புல்லை வாயில் போட்டு மென்று பல்லிலுள்ள வலிப்பக்கம் ஒதுக்கி வைக்க வேண்டும். சிறிது வைக்க வேண்டும் சிறிது நேரத்தில் பல்வலி சுகமடையும்.

அறுகம்புல்லுக்குப் பதிலாக கொய்யா மரத்தின் குருத்தை பாவிக்கலாம்.

வட்டுக்கத்தரிக் கொட்டையை நெருப்புள்ள சட்டியில் போட்டு அதனுள் வேப்பெண்ணையை ஊற்றி ஒரு ஓட்டைச் சட்டியால் மூடவும் அதன் புகையை வாயில் எடுத்து சிறிது நேரத்தின் பின் வாயை தண்ணீரால் கொப்பளிக்கவும் அப்பொழுது சிறிய புளுக்கள் இறந்திருப்பதைக் காணலாம்.

**வயிற்று வலி** :- மாதுளம் பழச்சாற்றுடன் உப்பு, மிளகுப் பொடி ஆகியவற்றை கலந்து உண்ண வேண்டும்.

வெள்ளை முள்ளங்கிச் சாற்றில் ஒரு அவுண்ஸ் குடித்தால் வயிற்று வலி நீங்கும்.

**நெஞ்சு வலி** :- வில்பம் பட்டை சிறிதளவு எடுத்து நீர் விட்டுக்காய்ச்சி, காலை, மாலை குடித்தல் வேண்டும்.

**ஆஸ்மா** :- மாங்காய் வித்து காயவைத்து அதை பொடியாக்கி தேன் சேர்த்து இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் ஆஸ்மா குணமடையும்.

**நீரிழிவு** :- வெந்தயமும், கீரையும் சாப்பிட்டு வருதல் நன்று வெந்தயத்தை அரைத்து தயிரில் கலந்து சாப்பிடுவது நன்று.

பேரீச்சம்பழம் சாப்பிடுவது நன்று

நெல்லிக்காய் சாற்றுடன் தேனைக் கரைத்து காலை மாலை சாப்பிடுவது நன்று.

**பருக்கைப்புண்** :- கடுக்காய்த்தூளை தேங்காய் எண்ணையில் கலந்து புண் உள்ள இடத்தில் பூசினால் கடுக்காய்ப் புண் குணமடையும்.

குப்பைமேனியையும் மஞ்சளையும் அரைத்து புண் உள்ள இடத்தில் பூசினால் புண் குணமடையும்.

| | | |
|---|---|---|
| **இருமல்** | :- | திப்பலியை தேனுடன் கலந்து உண்டால் இருமல் குணமடையும்<br><br>பலாச்சுளையை தேன் கலந்து உண்டால் இருமல் குணமடையும்.<br><br>சுண்டன் கத்தரி வேரை வெள்ளாட்டுப்பால் காய்ச்சி குடித்தால் குணமடையும். |
| **தலைப்பேன்** | :- | துளசி இலையை அரைத்து இரவில் தலையில் பூசிக்கொண்டு படுத்தால் தலைப்பேன் அற்றுப்போய்விடும். |
| **படைத்தேமல்** | :- | துளசிச்சாறு, எலுமிச்சம் சாறு, கற்பூரம் ஆகியவற்றை சமஅளவு சேர்த்து தடவிக்குழித்து வந்தால் படைததேமல், சொறி என்பன குணமடையும். |
| **படர்தேமரல்** | :- | 1. சோறு நுறை பூசுதல்<br>2.. வண்டுக்கொள்ளி தாவர இலையும், தேசிக்காயும் கலந்து பூசினால் படர்தேமல் குணமடையும். |
| **மூக்கடைப்பு** | :- | தேசியிலை, விக்ஸ் இலை போன்ற இலைகளை எடுத்து அவித்து ஆவி பிடித்தால் மூக்கடைப்பு குணமடையும். |
| **கால்ப்புண்** | :- | முருங்கை இலையும், மிழகும் இடித்து கட்டினால் கால்ப்புண் குணமடையும்.<br><br>ஒதியம் பட்டையும், மிழகும் இடித்துக் கட்டுதல் வேண்டும்.<br><br>மரதோண்டியும் கற்பூரமும் சேர்த்து இடித்துக் கட்டினால் கால்ப்புண் குணமடையும். |
| **மண்டை உடைந்த சிறியகாயம்** | :- | கோப்பித்தூளும் சுண்ணாம்பும் சேர்த்துக் கட்டினால் காயம் மாறும். |
| **காது வலி** | :- | பனங்கத்தாளை சுட்டு இளம் சூடுடன் மூன்று துளி பிளிந்து காதினுள் இட்டால் காது வலி குணமடையும்.<br><br>உள்ளி ஒன்றைச் சுட்டு காதினுள் வைத்தாலும் காது குணமடையும். |

திருமதி.ஜ்.மகிழ்ராஜதுரை
(மனைப்பொருளியல் ஆசிரியர்)

# மனித உரிமைகள் வரலாறும் வளர்ச்சியும்

மனிதனொருவன் தனது மனிதப் பிறபபினாலே பெற்றுக்கொண்ட அனைத்து உரிமைகளும் மனித உரிமைகள் எனப்படும். இந்த பிறப்பினாலே உரிமை கொண்டுள்ள மனித உரிமைகளை, அந்த உரிமைகளை அனபவிக்கின்ற இன்னொருவனால் மீறப்படுகின்றமை அன்றாடம் காணக்கிடைக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். நீண்டகால வரலாற்றைக் காணக்கிடைக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ள சமயங்களாலும், அறவழிகளாலும் தற்போது சட்டங்களாலும்கூட நன்கு போதிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை வேண்டுமென்றே தமது சுயநலனுக்காக மீறுகின்ற ஒரு சமுதாயத்தில், தமக்குள்ள உரிமைகள் யாவை? யாரேனும் அவற்றை மீறினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்பவற்றை ஒவ்வொரு மனிதனும் தெரிந்து கொள்வது மிக அவசியம்.

## வரலாறும் வளர்ச்சியும்

மனித உரிமைகள் என்று காணப்படாதபோதிலும் புராதன காலத்திலிருந்தே சிற்சில ஒழுக்கங்கள், நம்பிக்கைகள், பூஜைகள் என்பவற்றில் மனித உரிமைகள் பொதிந்திருந்ததைக் காணலாம். அதே போன்று சகல சமயக் கொள்கைகளினதும் அடிப்படை மனித உரிமைகளே என்பதை சர்வ மதங்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்தால் புலப்படும்.

மனித உரிமைகளுக்கான எழுத்து ரீதியான வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஆரம்பமாகிறது. இதற்கு 1215ம் ஆண்டு இங்கிலாந்தில் கையொப்பமிடப்பட்ட மெக்ன கார்டா ஒப்பந்தம் முதலாவது எழுத்து மூலச் சான்றாகும் இது அந்நாட்டை ஆட்சிசெய்த 'ஜோண்' மன்னரின் வரிவிதிப்பு முறையால் பாதிக்கப்பட்ட பிரஜைகள் அவருக்கெதிராக கிளர்ந்தெழுந்ததன் பின்னர் 63 பிரிவுகளை உள்ளடக்கியதாக இந்த மெக்ன கார்டா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

பதிவு செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான வரலாறு என்ற ரீதியில் கி.பி 1679ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட "ஹெபியஸ் - கோர்பஸ்" என்ற சட்டத்தைக் கூறலாம் இச் சட்டம் மனித உரிமைகளைப் பாதுகாக்க கொண்டுவரப்பட்ட மிக முக்கியமான ஒரு சட்டமாகக் கருதப்படுகிறது. இதன்மூலம் யாரேனும் ஒருவர் சட்டத்திற்கு முன்னே கொண்டு வரப்படாமல் கைது செய்வதைத் தடை செய்துள்ளது.

## 1215 – 1948 வரை மனித உரிமைகளின் வளர்ச்சி

கி.பி 1688ல் அங்கீகரிக்கப் பட்ட உரிமைகள் தொடர்பான சட்டவரைபு அல்லது பிரித்தானிய உரிமைச் சாசனம் எழுதப்பட்டது இதுவும் மனிதனின் சுதந்திரம், உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய போராட்டத்தின் மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டத்தின் மூலம் இங்கிலாந்து அரசர்களின் பிடிவாத ஆட்சி வரையறைக்குட்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1815ம் ஆண்டு காலப்பகுதியில் அடிமைத் தனத்தை 8 நாடுகள் நிராகரித்தன. 1848ல் ஐரோப்பிய புரட்சியின் பின்னர் பல ஐரோப்பிய நாடுகள் தத்தம் யாப்புகளுக்கு, மக்கள் சுதந்திரம், சிவில் உரிமைகள் மனித உரிமைகள் தொடர்பான பிரகடனங்களை உள்ளடக்கின ஆயினும் அந்த உரிமைகள் தொடர்பான அரசாங்கத்தின் தலையீட்டைக் குறைப்பதே அவற்றின் நோக்கமாகும்.

கி.பி 1911ல் சீனப்புரட்சி வெடித்தது. இதுவும் அந்நாட்டு மக்களால் தமது உரிமைகளை வென்றெடுக்க மேற்கொள்ளப்பட்ட ஒரு போராட்டமாகும். 1917ல் கைத்தொழில் புரட்சியினால் தொழிலாளர்கள் மிக மோசமாகச் சுரண்டப்பட்டார்கள். இக்காலத்தில் மனித உரிமைகளும் புதிய கொள்கைகளும் உருவாகத் தொடங்கின. இந்தக் கொள்கையின் வளர்ச்சியில் கால்மார்க்ஸின் பங்களிப்பு கூடிய செல்வாக்கைச் செலுத்தியது.

1919ல் 'வர்சாய்' ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களின் சேவை வாழ்க்கைத்தரம் என்பவற்றின் மேம்பாட்டிற்குத் துணை புரியும் நோக்கோடு, சர்வதேச செயற்பாட்டு முறையொன்றைச் செயற்படுத்தவும், ஆட்சியாளர்களுக்கு வழிகாட்ட சர்வதேச தொழிலாளர் தரத்தை உயர்த்துவதற்காகவும் சர்வதேச தொழிலாளர் ஒன்றியம் உதயமானது. அதன்பின் 1926ல் சர்வதேச ரீதியான அடிமை வர்த்தகத்தைத் தடைசெய்ய நாடுகள் சட்டங்களை இயற்றின.

1930ன் அரைப்பகுதியில் மனிதர்களுக்னெ உள்ள அரசியல், குடியியல், பொருளாதார, சமூக, கலாச்சார, மனிதாபிமான உரிமைகள் பற்றிய உணர்வு உலகம் முழுவதும் வியாபிக்கலாயிற்று.

1914ல் உலக மகாயுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட இழப்புக்களைக் கண்டு, மீண்டும் அவ்வாறான ஒரு யுத்தம் ஏற்படாதிருக்க 1919ம் ஆண்டு சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. எனினும் 1924ம் ஆண்டு இது நிறைவுற்றது. 1939ம் ஆண்டு 2ம் உலகப்போர் ஆரம்பமானது. இதன் விளைவாக 1939ம் ஆண்டு 2ம் உலகப்போர் ஆரம்பமானது. இதன் விளைவாக 1945ல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதில் 1948-12-10ல் மனித உரிமைகள் பிரகடனம் ஒப்பந்தம் செய்யதார்கள். இத்தினமே இன்றும் உலகம் முழுவதும் உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் 30 பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இந்த மனித உரிமைகள் பிரகடனமானது மனித குடும்பத்தினைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தினையும், அவர்கள் யாவரதும் சமமான, பாராதீனப்படுத்தப்பட முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றிற்கு அடிப்படையாகவுள்ளது என்பதை வலியுறுத்துகின்றது. அத்துடன் மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும், மனுக்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ளன. பேச்சுச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் விடதலை ஆகியனவற்றை மனிதன் பூரணமாகத் துய்க்கத்தக்க ஒரு உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாக இதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக மனிதனுக்குரிய அடிப்படை உரிமைகள் வளர்ச்சியடைந்து செல்லச் செல்ல அவை மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களும் எமது நாட்டிலே அதிகரித்துச் செல்கின்றன. எனினும் நாம் இவ்வாறான மனித உரிமைகளைப் பற்றி அறிந்த வைத்திருப்பதன் மூலம் அவை மீறப்படும் சந்தர்ப்பங்களில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென இலங்கையிலும் மனித உரிமைகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது 1996ம் ஆண்டின் 21ம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டமூலம் அமைக்கப்பட்ட ஒன்று. இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகங்கள் மாகாண மட்டங்களில் காணப்படுவதால் இதன்மூலம் மிக இலகுவாக உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் மனித உரிமைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் முடியும். இவ் அலுவலகங்கள் கொழும்பு பதுளை. கண்டி, அம்பாறை, மாத்தறை, வவுனியா, அநுராதபுரம், கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், புத்தளம், மன்னார் ஆகிய 13 இடங்களில் தற்போது காணப்படுகிறது.

உங்களுடைய அடிப்படை உரிமைகள் அரச நிறுவனங்கள் எவற்றினாலேனும் மீறபபட்டால் அல்லது மீறப்பட முயன்றால் நீங்கள் உங்களுக்கு அருகிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் அதுபற்றி முறையிட்டால், அவர்கள் உங்களுடைய உரிமைகள் மீறப்பட்டது உண்மை என அறியும் பட்சத்தில் அதற்குரிய நட்ட ஈட்டையும் நடைபெற முயலும்போது அதை தடுத்து நிறுத்தியும் உங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள உதவுவார்கள்.

இந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஒரு உயர்நீதி மன்றத்திற்கு சமமான தகுதிகளைக் கொண்டுள்ளது. இதற்கு எந்த ஒரு அரச அதிகாரியையும் அழைப்பானை விடுத்து அவர்களை விசாரணை செய்வதற்கும் அனுமதியுண்டு.

இவ்வாறு பல தகுதிகளையுடைய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளைப் பற்றி நன்கு அறிந்திருப்பின் நாம் அவற்றின் உதவியுடன் எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

"உனது கைத்தடியை வீசும் எல்லை மற்றவரின் மூக்கு
நுனிக்கருகில் முடிவடைகிறது"

சு.கனகநாயகம்
விரிவுரையாளர் பலாலி
ஆசிரிய கலாசாலை

1997ம் ஆண்டு பரிசளிப்பு தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தற்போது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றும் திரு சிவராஜா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுகிறார்.



## தமிழ்த்தின விழா - 1999

1999 தமிழ்த்தின விழாவில் நடைபெற்ற "காவடி" நடனத்தின் ஒரு காட்சி கோட்டமட்டத்தில் முதலாம் இடத்தையும் வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் எமது மாணவர்கள் பெற்றனர்.



# பழைய மாணவர் சங்க
# உறுப்பினர்கள் 2002



# ஆசிரியசேவையும் – சமூகமும்

பாடசாலை ஒருமுன்மாதிரி சமூகம் என்கிறார் ஜோன்டுயி என்ற கல்வியியலாளர். சமூகம் தான் எதிர்பார்க்கும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கத் தகுதி பெற்ற உறுப்பினர்களை உருவாக்கிக் கையளிக்கும் பொறுப்பை பாடசாலையிடம் எதிர்பார்க்கின்றது சமுதாய வளங்களைப் பயன்படுத்திக் கற்கும்திறன், சமூகப் பிரச்சனைகளை எதிர்நோக்கம் வினைத்திறன் பாடசாலையினால் வழங்கப்படவேண்டும் .ஒரு நற்பிரையை உருவாக்கும் பொறுப்பை பாடசாலையிடமே சமூகம் கையளித்துள்ளது. இப்பொறுப்பை நிறைவேற்றுபவர் பாடசாலையில் உள்ள ஆசிரயர்களேயாகும். ஆசிரியர் என்பவர் யார்? இருளை நீக்கி மெய்யறிவைப்புகட்டுபவன். குற்றங்கள் நீங்கியவன் என்ற பொருளும் உடையது. சமூகத்தில் கலந்திருக்கும் இருளைப்போக்கி சமூகம் ஒளிபெற பல விளக்குகளை உருவாக்க பலன் என சமூகம் எதிர்பார்க்கின்றது .இன்றைய பாடசாலை சமூகம் என்பது விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப விருத்தியால் குடும்பத்திலிருந்து சர்வதேசம் வரை தொடர்புடையதாகவும் வளர்ந்து வருகின்றது.

இத்தகைய சமூகத்தில் இருந்து ஆசிரியர் உருவாவதால் சமூகத்தின் உறுப்பினர் என்றரீதியில் சில எதிர்பார்ப்புக்களைக்கொண்டதாக சமூகம் அமைந்துள்ளது. விஞ்ஞான வளர்ச்சி சமூக பொருளாதார மாற்றங்களால் இன்றைய சமூகம் சிக்கலார்ந்த தன்மையாக மாறியுள்ளது. இந்நிலைகளை சீர் செய்யக்கூடிய ஆற்றலுள்ள இளையதலைமுறையை உருவசாக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பு சமூகத்திடம் உள்ளது.

ஆசிரியர் சேவையில் பலவேறு தரப்பட்ட வகையினர் காணப்படுகின்றனர் ஏறத்தாள 9வகையினர் உள்ளனர். பயிலுனர் ஆசிரியர், பட்டதாரிபயிலுனர் ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் மாணவ ஆசிரியர், தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் பயிற்றப்பட்ட ஆசிரியர்,உதவி ஆசிரியர் என்பவர்களை தவிர நிரந்தர நியமனமின்றி பகுதி நேரமாகக் கற்பிப்பர் இன்றைய பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் இன்னெருசாரார்
வேதனமின்றி அல்லது மிக்க்குறைந்த தொகையுடன் தற்காலிகமாக அதிபர்கள் நியமித்துள்ள தொண்டர் ஆசிரியரும் உள்ளனர்.

இப்படியான பலரும் பலதரப்பில் இருப்பதால் ஆசிரியத் தொழில் வாண்மை சாந்ததா? அல்லது தொழில் சார்சேவையா? என்ற கேள்விகளும் விழுகின்றன. ஆசிரியத் தொழிலை சீவனோபாயத் தொழிலாகக் கொள்ளும் தவறான மனப்பாங்கு வேகமாக வளர்ச்சியடைந்துவிட்டது. இவையெல்லாம் ஆசிரிய சேவையை சமூகமதிப்பைக் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச் சென்றுவிட்டது. எனவே ஆசிரிய சேவைக்குப் கணிப்பைப்பெற்றுக் கொடுக்கம் முயற்சிகளை எமது நாட்டின் கல்விவழங்குநர்கள் முன்னெடுத்து சென்றனர்.

1981ல் வெள்ளையறிக்கையில் ஆசிரியர் சேவையின் தரத்தை அதிகரிக்கச் சில பிரேரனைகள முன்வைத்தது.

1. ஆசிரிய சேவைக்கான தகுதியை அதிகரிப்பது
2. ஆசிரிய கல்விப்பாட நெறியைச் செம்மைப்படுத்தல்
3. சம்பளம், பதவியுயர்வு தொடர்பான சேவைகளை நிறைவு செய்வது.

மேற்குறிப்பிட்ட அம்சங்கள் ஒழுங்கற்ற இடமாற்றம் என்பனவற்றால் சுயதிருப்தி இன்மை அர்ப்பணப்புடன் கருமமாற்ற முடியாத நிலைகள் உருவாகின்ற என் வெள்ளையறிக்கை வலியுறுத்தியள்ளது. இதனைத்தொடர்ந்து தேசிய கல்விசேவை ஆணைக்குழு, இளைஞர்சேவை ஆணைக்குழு என்பனவும் ஆசிரியர் சேவையின் முக்கியத்துவம் கடமை, பொறுப்பு என்பவற்றை மேலும் பயனுறுதியுள்ள தாக்கவேண்டும் என்பல சிபார்சுகளை முன்வைத்தன.
இன்றை ஆசிரியரிடமிருந்தும் சமூகம் அதை எதிர்பார்க்கின்றது.

இன்று நாட்டின் அசாதாரண சூழ்நிலையும் பணம் சம்பாதித்தலில் ஆண், பொண் இருபாலாரும் ஈடுபடுதலும் பெற்றோர் வெளிநாட்டில் இருப்பதும் குடும்பச் சீரழிவுகளும், போதைவஸ்து,

நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் பிள்ளைகளுக்கு மன அழுத்தம், அச்சநோய், பதட்டம், போன்ற நோய்களையும் ஏற்படுத்துகின்றன. அன்பு, பாதுகாப்பு அரவணைப்புஇன்மையால் பிள்ளைகள் விரக்தி அடைவது ஆசிரியரின் பணியை இன்று மேலும் சிக்கலாகியுள்ளது. இச்சிக்கலான நிலைக்கு ஒரு கலங்கரை விளக்கமாக ஆசிரியர் ஒளி கொடுக்க வேண்டிய தேவையும் அதிகரித்து வருகின்றது.

ஆசிரியர் சமூகம் சார்ந்த பொதுவியங்களிலும் பங்குபற்ற வேண்டும் சன சமூகநிலையங்கள் ப் கோவில்கள், மன்றங்கள், விழாக்கள் புதிய ஆக்கம், ஆராய்ச்சிகள் செய்வதிலும் ஈடுபடுவ த சமூகம் விரும்புகின்றது; எதிர்பார்க்கின்றது. ஆசிரியர்கள் தங்கள் கல்வித்தரத்தை காலத்திற்கேற்ற மாதிரி உயர்த்த வேண்டும். ஆசிரியரும் ஒரு மாணவரே அவர் தொழிலில் இருக்கும் வரை கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். தான் கற்ற கால அறிவு காலாவதியாகிவிட்டால் அவர் புதிய அறிவைத் தேடிப்பெறவேண்டும்.

உ + ம் :- பர்மா - மியன்மார் எனமாற்றப்பட்டு வருடங்கள் பல ஆகிவிட்டது. ஆனால் சமூகக்கல்வி ஆசிரியர் பர்மா என்று சொன்னால் அவர் புதியதை அறியவில்லை என. சமூகம் கருத இடமளிக்கக் கூடாது. புதிய விடயங்களைத் தேடி அறிந்து மாணவர்களும் தேடி அறிவதற்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பை ஆசிரியருக்கே சமூகம் அளித்துள்ளது.

1997ல் கொண்டுவரப்பட்ட புதிய கல்விச்சீர்திருத்தமும் ஆசிரிய சேவையை மேம்படுத்தவும் கோளமயமாயமாதலுக்கு ஏற்ப சமூகத்தைமாற்றியமைப்பதற்கும் பல திட்டங்களை வகுத்துள்ளது. NATE தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபை ஆசிரியர்கல்வியை உயர்த்துவதற்கு எல்லா நிறுவனங்களையும் உள்ளடக்கிய தேசிய கல்வி முறை ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன் படி ஆசிரியர்சேவையைத் தொழிற்றகைமை பெற்ற முழுமையான பட்டதாரி சேவையொன்றை விருத்தி செய்தல். கல்வியாளர்களின் தொழிற்றகைமைகளை உயர்த்துதலும் முக்கியகுறிக்கோளாகும். சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப ஆசிரியசேவையை தரமுள்ளதாகவும், பயிற்சி பெறவும் 10,000 பேருக்காக பயிற்சி அளித்து தாமுயர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றது.

ஆசிரியர் செயல்திறன் மதிப்பீடு மூலம் ஆசரியசேவையில் தரத்தை உயர்த்தவும், கடமைகளைச் செய்வதற்கும், பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் வினைத்திறனை மேம்படுத்தவும் முன்மாதிரியாக நடந்து கொள்ளவும் ஊக்குவிப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை தொகுத்து நோக்கியதில் இருந்து இச்சேவை புனிதமானது. அர்பணிப்புடன் செய்ய வேண்டிய தொழில் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது இத் தொழில் கோவைகளுடன் (File) ஈடுபடும் தொழில் அல்ல மென்மையான பிஞ்சு உள்ளங்களுடன் செயற்படுகிறோம் அழகிய மொட்டுக்களை இளமையிலேயே கருகலைக்காமல் மலர்ந்து எல்லா இடங்களிலும் மணம் பரப்பக்கூடியவர்களாகவும், கடமை கண்ணியம், கட்டுப்பாடு உள்ளவர்களாகவும் மாற்றி அமைப்பது ஒவ்வொரு ஆசிரியரின் தலையாய கடனாகும் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.

THE MISTAKE OF A DOCTOR IS BURIED IN THE GRAVE
THE MISTAKE OF A LAWYER IS IN THE FILES
THE MISTAKE OF AN ENGINEER IS CEMENTED WITH THE BRICIDS
THE MISTAKE OF A TEACHER IS REFLECTED IN THE NATION

திருமதி. பாலாம்பிகை சுப்பிரமணியம்
ஆசிரிய ஆலோசகர்
யாழ் வலயம்.

# இலத்திரனியல் வர்த்தகம்
# Electronic Commerce

## 1.0 அறிமுகம்

இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகமானது, 1970களின் ஆரம்பத்தில் இலத்திரனியல் நிதி மாற்றம் போன்ற புத்தாக்கங்களுடன் ஆரம்பமானது எனலாம். எவ்வாறாயினும், இந்தப் பிரயோகமானது பெரிய கூட்டுத்தாபனங்களுக்கும் ஒரு சில சிறிய தொழில் நிறுவனங்களுக்கும் மட்டும் வரையறுக்கப்பட்டதாக ஆரம்பத்தில் காணப்பட்டது. இலத்திரனியல் தரவு பரிமாற்றம் வந்த பின்னர் இலத்திரனியல் வர்த்தகமானது நிதி மாற்றங்களிலிருந்து ஏனைய வகையான பரிமாற்ற முறைவழியாக்கத்துக்கு விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன் நிதி நிறுவனங்களுக்கு மேலதிகமாக. உற்பத்தியாளர்கள், சில்லறை வியாபாரிகள். சேவை வழங்குநர்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றன பங்கு பற்றும் அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இணையமானது வர்த்தக மயமாக்கப்பட்டதன் பின்னர் பல மில்லியன் கணக்கான மக்கள் பங்குபற்றும் வாய்ப்புகிடைத்தமையால் இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்கள் விரைவாக விரிவடைந்து வருகின்றன.

## 2.0 இலத்திரனியல் வர்த்தகத்தினை வரையறுத்தல்
## Defining Electronic Commerce

இலத்தரனியல் வர்த்தகம் அல்லது மின்னணு வர்த்தகம் என்பது இணையத்தினை உள்ளடக்கிய கணனி வலையமைப்புக்கள் மூலமாக பொருட்கள், சேவைகள், தகவல்கள் என்பவற்றினை வாங்குவதையும் விற்பனை செய்வதையும் விபரிக்கின்ற ஒரு வளர்ந்து வரும் எண்ணக்கருவாகும். எவ்வாறாயினும், இலத்தரனியல் வர்த்தகத்திற்கு பல்வேறு நோக்கில் பல வேறுபட்ட வரைவிலக்கணங்களினைக் கொடுக்க முடியும்.

ஒரு தொடர்பாடல் நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொலைபேசி இணைப்புக்கள், கணனி வலையமைப்புக்கள், அல்லது ஏதாவது ஊடகம் மூலமாக தகவல், பொருட்கள் அல்லது சேவைகள், அல்லது கொடுப்பனவுகள் ஆகியவற்றினை வழங்குவதனைக் கருதுகின்றது.

ஒரு தொழில் செய்முறை நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொழில் நிறுவன நடவடிக்கைகளினதும் வேலைபாய்ச்சல்களினதும் தன்னியக்கவாக்கம் நோக்கிய தொழில்நுட்பத்தின் பிரயோகமாகும்.

ஒரு சேவை நோக்கிலிருந்து பார்க்கும்போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது பொருள் தரத்தினை முன்னேற்றி, சேவை வழங்கலின் வேகத்தினை அதிகரித்து, நிறுவனங்கள் வாடிக்கையாளர்கள் முகாமைத்துவம் போன்றவற்றின் சேவைச் செலவினை குறைக்கின்ற ஒரு கருவியாகும்.

ஒரு தொடரறா நோக்கிலிருந்து பார்க்கும்போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது இணையம் மற்றும் ஏனைய தொடரறா சேவைகள் மூலமாக பொருட்கள், தகவல்களினை வாங்குவதற்கும் விற்பதற்குமான செயல் வல்லமையினை வழங்குகின்றது எனலாம்.

மேலே கூறப்பட்ட அனைத்து வரைவிலக்கணங்களும் பெறுமதியானவை. இலத்திரனியல் வர்த்தகமானது வேறுபட்ட வலையமைப்புக்கள் மூலமாக வியாபார நடவடிக்கைகளினை நிறைவேற்றுகின்ற பெரும் முன்னேற்றங்களினை ஏற்படுத்தி வருகின்றது எனலாம். இத்தகைய முன்னேற்றங்களினால் சிறந்த தரம், உயர்வான வாடிக்கையாளர் திருப்தி, சிறந்த நிறுவனத் தீர்மானம் எடுத்தல் போன்ற சிறந்த செயற்றிறனுக்கு இட்டுச் செல்வதுடன் உயர்வான பொருளாதார

வினைத்திறன், உயர் வேகம், துரிதத் தன்மை, அல்லது நிகழ்நேர பரிமாற்றம் போன்ற மிக விரைவான பரிமாற்றத்துக்கும் வழிகோலுகின்றது. இலத்திரனியல் வர்த்தகத்தினை இன்னொரு வழியில் பின்வரும் இரண்டு கூறுகளாக பிரித்து நோக்கலாம்.

* நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை.
* இலத்திரனியல் சந்தைகள்.

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது இரண்டு அல்லது இரண்டுக் மேற்பட்ட நிறுவனங்களுக்கிடையேயான தகவல் பாய்ச்சலுடன் தொடர்புபட்டதாகும். இதன் பிரதான நோக்கம் இலத்திரனியல் தரவு பரிமாற்றத்தினைப் பயன்படுத்தி கட்டளைகள், சிட்டைகள், பணக் கொடுப்பனவுகள் போன்ற வினைத்திறனான பரிமாற்று முறைவழியாக்கத்தினை மேற்கொள்ளவதாகும். சகல தொடர்புகளும் முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும். இங்கு பேரம்பேசுதல் என்பது இருக்காது மாறாக நிறைவேற்றுகை காணப்படும்.

இலத்திரனியல் சந்தைகள் (Electronic marlets) என்பது வாங்குபவர்களும் விற்பனையாளருக்கும் ஒரு கட்டளையில் உடன்பட்டு நிறைவேற்றுகையானது தொடரறாஅல்லது பின்தொடர் மூலமாக முடிக்கப்படுகின்றது. நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகள் வியாபாரத்துக்கு வியாபாரமாக (Business to Business - B2B) பயன்படுத்தும்போது இலத்திரனியல் சந்தையானது வியாபாரத்துக்கு வியாபாரமாகவும் வாடிக்கையாளருக்கு வியாபாரமாகவும் (Business to Customer - B2C) தொழிற்படும் இரண்டு இயல்புகளையும் கொண்டிருக்கின்றது.

## 2.1. நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகளின் நோக்கம் Scope of interorganizational information systems

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை என்பது பல தொழில் பங்காளர்கள் சூழ்ந்து கொள்கின்ற ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு முறைமையாகும். ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது ஒரு நிறுவனம் மற்றும் இதனுடைய வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரினைக் கொண்டிருக்கும். நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை மூலமாக வழங்குனர்களும் விற்பனையாளர்களும் தங்களுடைய நாளாந்த தொழில் நடவடிக்கைகளினை ஒழுங்குபடுத்துகின்றனர். தகவலானது முன்னதாகவே ஒழுங்கமைக்கப்பட்ட வடிவங்களினைப் பயன்படுத்தி தொடர்பாடல் வலையமைப்புக்கள் மூலமாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. ஆகவே, தொலைபேசி அழைப்புக்கள், காகித ஆவணங்கள், அல்லது தொழில் தொடர்புகள் என்பன தேவையில்லாது போகின்றது. நிறுவனங்களுக்கிடையேயான தகவல்முறைமையானது உரிமையுடைய தொடர்பாடல் இணைப்புக்களினைல் பிரதானமாகப்பயன்படுத்தி வழங்குகின்றது. தற்போது சில நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் இணையத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றன.

### நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் :-

- நாளாந்த வியாபார பரிமாற்றங்களினது செலவினைக் குறைக்கின்றது.
- பிழைகளினை குறைத்து தகவல் பாய்ச்சலின் தரத்தினை முன்னேற்றுகின்றது.
- காகித நிரற்படுத்தலுடன் தொடர்புபட்ட காகிதம், வினைத்திறனற்ற தன்மை, மற்றும் செலவீனம் போன்றவற்றினை நீக்குகின்றது.
- பாவனையாளர்களுக்கான வியாபார செய்முறையினை இலகுவாக்குகின்றது.

## 2.2 நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளின் வகைகள்
## Types of interorganizational systems

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளினை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் சில இலத்திரனியல் வர்த்தகத்துடன் தொடர்பற்ற செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளில் மிகவும் பிரதானமான ஐந்து வகைகள் காணப்படுகின்றன.

- இலத்திரனியல் தரவு பரிமாற்றம்.
- இலத்திரனியல் நிதிமாற்றம்.
- இலத்திரனியல் வடிவங்கள்
- ஒருங்கிணை செய்தியிடல்
- பகிர்ந்தளிக்கப்பட்ட தரவுத்தளங்கள்.

## 2.3 இலத்திரனியல் சந்தைகள்
## Electronic Markets

இலத்திரனியல் சந்தைகள் வியாபாரத்தினை நடாத்துவதற்கான ஒரு வாகனமாக நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளுடன் இணைந்து விரைவாக வளர்ந்து வருகின்றது. ஒரு சந்தை என்பது தகவல், பொருட்கள், சேவைகள், கொடுப்பனவுகள் போன்றவற்றினைப் பரிமாற்ற ஒருங்கிணைந்ததும் உறவு முறைசார்ந்ததுமான ஒரு வலையமைப்பாகும். சந்தைக்கான இடமானது இலத்திரனியல் வடிவில் இருக்கும் போது விற்பனை நிலையமானது ஒரு பௌதீக கட்டிடத்தினைக் கொண்டிருக்கமாட்டாது. ஆனால் ஒரு வலையமைப்பு வழியிலான இடமாக இருப்பதுடன் இங்கு வியாபார பரிமாற்றங்கள் நிகழும்.

இலத்திரனியல் சந்தையானது வாங்குனர்களும் விற்பனையாளர்களும் சந்திக்கும் இடமாகும். சந்தையானது வங்கிகளுக்கிடையேயான பணத்தினை மாற்றீடு செய்வது உட்பட எல்லா அவசியமான பரிமாற்றங்களினையும் கையாள்கின்றது. இலத்திரனியல் சந்தையில் பரிமாற்றங்களினைக் கையாள்பவர்கள், வாங்குனர்கள், தரகர்கள், விற்பனையாளர்கள் போன்ற முதன்மையான பங்குபற்றுநர்கள் இருப்பதுடன் அவர்கள் வேறுபட்ட இடங்களிலிருந்து ஒருவரை மற்றவர்கள் மிக அரிதாகவே தெரிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இடைப்பிணைப்பு வழிகளானது குழுவினர்களுக்கிடையே வேறுபடுவதுடன் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மற்றும் குழுக்களுக்கிடையே மாறுபாடுடையதாகவும் காணப்படுகின்றன.

## 3.0 நிறுவனங்களுக்கான நன்மைகள்
## Benefits to Organizations

இலத்திரனியல் வர்த்தகமானது தேசிய சந்தைகளிலிருந்து சர்வதேச சந்தைகளுக்கு சந்தைப்பரப்பினை விரிவுபடுத்தியுள்ளது. மிகக் குறைந்தளவான மூலதனச் செலவுகளுடன் ஒரு கம்பனி இலகுவாகவும் விரைவாகவும் கூடுதலான வாடிக்கையாளர்கள், சிறந்த வழங்குனர்கள், மிகவும் பொருத்தமான தொழில் பங்காளர்கள் ஆகியோரை உலகளாவிய ரீதியில் கொண்டிருக்கும்.

- இலத்திரனியல் வர்த்தகமானது காகித அடிப்படையிலான தகவல்களினை உருவாக்குதல், நிரற்படுத்துதல், பகிர்ந்தளித்தல், களஞ்சியப்படுத்தல், மீட்டுப்பார்த்தல் போன்றவற்றுக்கான செலவினைக் குறைக்கின்றது. உதாரணமாக, ஒரு இலத்திரனியல் கொள்வனவு செய்முறை முறைமையினை அறிமுகப்படுத்துவதன் மூலமாக கம்பனிகள் கொள்வனவு நிர்வாகச் செலவினை கணிசமானளவு குறைத்துக்கொள்ள முடியும்.

♦ இலத்திரனியல் வர்தகமானது இழுவகை வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் வசதியின் மூலமாக **(Pull- type supply chain management)** குறைக்கப்பட்ட இருப்புக்களுக்கும் மேந்தலைகளுக்கும் அனுமதியளிக்கின்றது. ஒரு இழுவகை முறையில் செய்முறையானது வாடிக்கையாளர்களின் கட்டளையிலிருந்து ஆரம்பித்து உடனடிநேர செய்முறையினைப் பயன்படுத்துகின்றது. இது பொருள் வாடிக்கையாளர் மயமாக்கும் குறைந்தளவான இருப்புச் செலவுகளுக்கும் வழிவகுக்கின்றது.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது மூலதனச் செலவுகளுக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளினைப் பெறுவதற்கும் இடையிலான நேரத்தினைக் குறைக்கின்றது.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது வியாபார செய்முறை மீளப்பொறியமைத்தல் முயற்சிக்கு ஆதரவளிக்கின்றது. செய்முறைகள் மாற்றப்படும்போது விற்பனையாளர்கள் அறிவுசார் தொழிலாளர்கள். நிர்வாகிகள் ஆகியோரின் உற்பத்தித் திறனானது நூறுவீதம் அல்லது அதற்கு மேலாக அதிகரிக்கப்பட முடியும்.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது தொலைத்தொடர்பு செலவினை மிகக் குறைவாக வைத்துள்ளது. இணையமாகது பெறுமதிச் சேர்க்கை வலையமைப்புக்களினை விட மிகவும் மலிவானதாகக் காணப்படுகின்றது.

## 3.1 நுகர்வோர்களுக்கான தன்மைகள்

## Benefits to Consumers

♦ இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் கூடுதலான தெரிவுகளினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. அவர்கள் பல விற்பனையாளர்களிடமிருந்தும் பொருட்களிலிருந்தும் தெரிவுசெய்ய முடியும்.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் குறைந்த செலவில் பொருட்கள், சேவைகளினை வாடிக்கையாளர்களிற்கு வழங்குகின்றது. அத்துடன், விரைவாக பல இடங்களில் தொடர்புகொண்டு ஒப்பீடுகளினையும் மேற்கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.

♦ சில சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் வர்த்தகமானது பொருட்கள், சேவைகளினை விரைவாக வழங்குகின்றது.

♦ இலத்திரனியல் வர்த்தகத்தில் வாடிக்கையாளர்கள் தங்களிடத்திலிருந்து எந்த நேரத்திலும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு கட்டளையிட முடியும்.

♦ வாடிக்கையாளர்கள் பொருத்தமானதும் விபரமானதுமான தகவலினைச் சில விநாடிகளில் பெறமுடியும். பல நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது ஒரு வாடிக்கையாளர் மற்ற வாடிக்கையாளருடன் இலத்திரனியல் சமூகத்தில் ஒருவரோடு மற்றவர் கருத்துக்களினைப் பரிமாற்றிக்கொள்வதற்கும் தமது அனுபவங்களினை ஒப்பீட செய்வதற்கும் வசதியளிக்கின்றது.

## 3.2 சமூகத்துக்கான நன்மைகள்

## Benefits to Society

♦ இலத்திரனியல் வர்த்தகமானது பல தனிப்பட்டவர்களினை வீட்டிலிருந்தபடியே வேலைசெய்ய வசதியளிப்பதினால் மிகக் குறைவான பயணங்களுக்கு அனுமதிக்கின்றது. இதனால் வீதிகளில் வாகன நெரிசல் குறைவாகக் காணப்படுவதுடன் காற்று மாசடைவதும் மிகக் குறைவாகக் காணப்படும்.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது சில வியாபாரிகளுக்கு தமது பொருட்களினை மிகக் குறைந்தவிலையில் விற்பனை செய்வதற்கு அனுமதியளிப்பதனால், குறைவான பணவலுவுடைய மக்கள் கூடுதலாக இப் பொருட்களினை வாங்கித் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது மூன்றாம் உலக நாடுகளிலும் கிராமப் பகுதிகளிலும் இருக்கும் மக்கள் பொருட்கள் சேவைகளினை அனுபவிப்பதற்கு வசதியளிக்கின்றது. உயர்தகமை பற்றி கற்பதற்கும், கல்லூரி பட்டங்களினை பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களினை இலத்திரனியல் வர்த்தகம் வழங்குகின்றது.

♦ இலத்திரனியல் வர்த்தகமானது பொதுச் சேவைகள் வழங்கலுக்கான வசதியினை கொடுக்கின்றது இது செலவினைக் குறைத்து தரத்தினை அதிகரிக்கும்.

## 3.0 இலத்திரனியல் வர்த்தகத்தின் வகைகள்
## Types of Electronic Commerce

இலத்திரனியல் வர்த்தகத்தில் பல சாத்தியமான பிரயோகங்கள் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கிடையேயும், வியாபாரிகளுக்கிடையேயும் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்களின் தனிப்பட்ட பொதுவான வகைகளாக மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவை நிறுவனங்களுக்கிடையேயானவை. இதனை நிறுவனத்துக்கு நிறுவனம் எனவும், நிறுவனத்துக்குள்ளேயானவை, நிறுவனத்திலிருந்து நுகர்வோர்களுக்குரியவை எனவும் வரையறுக்கலாம்.

### நிறுவனங்களுக்கிடையிலான இலத்திரனியல் வர்த்தகம்
### Inter organizational Electronic Commerce

இந்தப் பார்வையில் இலத்திரனியல் வர்த்தகமானது பின்வரும் வியாபார பிரயோகங்களுக்கு வசதியளிக்கின்றது.

♦ **வழங்குனர் முகாமைத்துவம் :-**

இலத்திரனியல் பிரயோகமான கம்பனிக்கு வழங்குனர்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கொள்வனவு கட்டளைகள், நிரற்படுத்தல் செலவு, சுழற்சி நேரங்கள் போன்றவற்றினைக் குறைப்பதற்கும் வசதியளிக்கின்றது.

♦ **இருப்பு முகாமைத்துவம் :-**

இலத்திரனியல் பிரயோகமான கட்டளை சுழற்சியினைச் சுருக்குகின்றது. ஒரு நிறுவனத்தின் பங்காளர்களில் பலர் இலத்திரனியல் மூலமாக இணைந்திருப்பதால் தொலைநகல் அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட தகவலானது உடனடியாக மாற்றீடு செய்யப்படுகின்றது. இது இருப்பு மட்டங்களினை குறைப்பதற்கும், இருப்பு சுழற்சியினை முன்னேற்றுவதற்கும். இருப்பின்மையினை நீக்குவதற்கும் உதவுகின்றது.

## 5.0 முடிவுரை

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வர்த்தகம் பெற்றுக் கொண்ட நன்மைகள் அளப்பரியனவாகும். இலத்திரனியல் வர்த்தகமானது 21ம் நூற்றாண்டில் நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளை விரைவாகவும் அதிகமாகவும் வளர்க்க உதவும் என்பதில் சந்தேகமில்லை. நவீன அடிப்படையிலான வர்த்தகம் சர்வதேச வர்த்தகத்தில் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தி வருவதனால் உலக மக்கள் இலத்திரனியல் வர்த்தகத்தின் மீது அதிக நாட்டத்தை செலுத்துவதாக கூற முடியும்.

திரு.க.தேவராஜா
தலைவர்,
வணிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# மனப்பாங்குகள் (Attitudes)

(1) கல்விக் கூடங்களில் நடைபெறும் பகிடி வதையை ஆதரிக்கிறீரா?
(2) வீதிப் போக்குவரத்து விதிகள் அமுல் செய்யப்பட வேண்டும் என்று கருதுகிறீரா?
(3) கணித பாடத்தைப் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?

இக்கேள்விகளுக்கிடையில் பொதுவான தன்மையுள்ளது. இக்கேள்விகளின் சிறப்பியல்பு என்னவெனில் அவை உங்கள் மனப்பாங்குகள் பற்றி அறியவிளைகிறது. அதாவது ந்ங்கள் எவ்வாறு மனிதர்களை பொருட்களை கருத்துக்களை மதிப்பிடுகிறீர்கள் என்பதை அறிய விளைகிறது.

### *மனப்பாங்கின் வரைவிலக்கணம்.*

ஒரு பொருள்பற்றி ஒரு ஆளைப்பற்றி அல்லது கருத்துப்பற்றி ஒரு குறிப்பிட்ட வழியில் சிந்திக்கவும், உணரவும், செயற்படவும் நம்மிடமுள்ள ஆயத்தநிலையே மனப்பாங்கு என் உளவியலாளர் வரையறுக்கிறார்கள்.

அதாவது மனப்பாங்கானது சிந்தனையையும் உணர்வையும் செயற்படும் தன்மையையும் உடையது. உதாரணமாகப் பகிடிவதை என்பது ஒருவருக்கு உடல். உள்ளம் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் செயல் என்பது ஒருவரின் சிந்தனையாக இருக்கலாம். ஒருவர் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதைக் காணும் பொழுது துயரம் என்ற உணர்வு அவருக்கு ஏற்படலாம் இதனால் பகிடிவதையைத் தடுத்து நிறுத்தும் செயலிலும் அவர் ஈடுபடலாம்.

மனப்பாங்கானது பல நடத்தைகளுக்கு காரணமாக அமைவதால் நேரான மனப்பாங்கை வளர்ப்பதன் மூலம் ஒருவரிடம் சிறந்த நடத்தையை உருவாக்கலாம் ஒருவரின் மனப்பாங்கானது ஒருவரது ஆளுமையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதாக சமூக கற்றல் கொள்கை கூறுகிறது.

### *கிரன்வோலின் மனப்பாங்கை விருத்தியுறச் செய்யும் படிமுறைகள்*

கிரன்வோல் என்பவர் மனப்பாங்கு விருத்தியை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளார்; அவையாவன

i கிரகித்தல்
ii துலங்கல்
iii மதித்தல்
iv ஒழுங்கமைத்தல்.
v கருத்திற்கேற்ப செயற்படல்.

இவை மிகவும் எளிய நிலையில் இருந்து உயர்ந்த தரம் வரை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன மனப்பாங்கு ஏற்படும் வழிகள்

ஒருவருக்கு மனப்பாங்கானது மூன்று வழிகளில் பெறப்படலாம் என டார்ல்பெம் (Daryl Bem) என்ற உளவியலாளர் கண்டு பிடித்துள்ளார்

(1) மனவெழுச்சி அடிப்படை மனப்பாங்கு.

(2) சமூக அடிப்படை மனப்பாங்கு.

(3) அறிவு அடிப்படை மனப்பாங்கு.

### (1) மனவெழுச்சி அடிப்படை மனப்பாங்கு

மனவெழுச்சியை ஒரு கருத்துத் மனப்பாங்கானது மனவெழுச்சியை ஒரு கருத்துத் தொடர்பாக அல்லது பொருள் தொடர்பாக நிபந்தனைப்படுத்துவதால். பெறப்படுகின்றது. இது உளவியலாளர் பல்லோவின் (Pavlov) நிபந்தனைப் பாட்டுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

### *கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பிரயோகம்*

மனவெழுச்சி சார்ந்த மனப்பாங்கு உருவாக்கத்தை பாடசாலையில் சிறந்த முறையில் உருவாக்கலாம். பிள்ளையின் மனப்பாங்குகள் பல ஆரம்ப முன்னிலைப் பாடசாலையிலும் ஆரம்பப் பாடசாலையிலும் உருவாகின்றன.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நேரான மனவெழுச்சிகளுடன் நேரான மனப்பாங்குகளை நிபந்தனைப்படுத்துவதன் மூலம் சிறந்த மாணவரை உருவாகின்றன.

உ + ம் :- I

கதை கேட்பதில் சிறுவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி
கதைகளில் ஒழுக்க நெறிகள் விழுமியங்களைப்
புகுத்துவதன் மூலம் சிறுவர்களிடம் நேரான
மனப்பாங்கை வளர்க்கலாம்.

உ + ம் :- II

விளையாட்டுகளில் ஆரம்பக்கல்வி மாணவருக்கு
மிகவும் நாட்டம். விளையாட்டு முறை மூலம்
கணிதம் கற்பித்தல் மூலம் கணிதம் பற்றிய
சிறந்த மனப்பாங்கை மாணவரிடம்
உருவாக்கலாம்.
இவ்வாறே மாணவர் விரும்பும் இசை.
நடனம், நாடகம் என்பவற்றின் ஊடாக
சிறந்த மனப்பாங்கை உருவாக்கலாம்.

### (2) சமூக அடிப்படை மனப்பாங்கு

சமூகத்திலுள்ள மனிதர்களுடன் ஏற்படும் இடைத்தாக்கத்தின் மூலம் மனப்பாங்கு உருவாதல் சமூக அடிப்படை மனப்பாங்கு எனப்படும். ஒருவரின் மனப்பாங்கில் சமூகத்தின் பங்கு மிகவும். செல்வாக்குச் செலுத்துகிறது. பெற்றோர். பாடசாலை சகபாடிகள், மதத்தாபனங்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் என்பன அவற்றில் முக்கியம்வாய்ந்து காணப்படுகின்றன.

### மனப்பாங்கில் பெற்றோரின் செல்வாக்கு

பிள்ளைகள் பெற்றோரிடம் இருந்து பல மனப்பாங்குகளைப் பெறுகிறார்கள். பெற்றோர் கல்வியில் நேரான மனப்பாங்குகளைக் கொண்டிருப்பது பிள்ளையின் கற்றலுக்கு ஊக்கம் கொடுப்பதாக அமைகிறது. பெற்றோர் கல்வியில் பெரிய பயன் இல்லை என்ற எதிரான மனப்பாங்கைக் கொண்டிருக்கும் பொழுது பிள்ளைகளும் அம் மனப்பாங்கைப் பெற்று கல்வியில் பின்னடைவு அடைகிறார்கள்

உளவியலாளர் பண்டூரா (Bandura) அவர்கள் பிள்ளைகள் மற்றவர்களை அவதானிப்பதன் மூலம் பலவற்றைக் கற்கிறது எனக் கூறுகிறார். இக்கொள்கைக்கு அமைய பெற்றோரை அவதானித்து அவர்களை மாதிரியாகக் (Model) கொண்டு மனப்பாங்குகளை பிள்ளைகள் பெறுகிறார்கள்.

ஜெனிங்ஸ் என்ற உளவியலாளர் பாடசாலையில் உள்ள உயர்வகுப்பு மாணவர்கள் ஆதரிக்கும் அரசியல் கட்சிகள் பற்றி ஆய்வு செய்த பொழுது முடிவில் 80மூ ஆன மாணவர்கள் பெற்றோர் ஆதரிக்கும் அரசியல் கட்சியையே ஆதரிப்பது தெரியவந்துள்ளது. இது பிள்ளையின் மனப்பாங்கில் பெற்றோரின் செல்வாக்கை எடுத்துக் காட்டுகிறது.

எனவே குடும்பத்தில் நிலவும் நெருக்கமான. வலுவான சமூகத் தொடர்புகளும் அவற்றின் மூலம் குழந்தைகள் பெறும் அனுபவங்களும் பிள்ளையின் நல்ல மனப்பாங்கை வளர்க்க உதவுகிறது.

## மனப்பாங்கில் பாடசாலையின் செல்வாக்கு

இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்தில் கற்றல் கற்பித்தல் மூலம் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர வேண்டும் என்று கொள்கையளவில் கூறப்பட்டாலும் நடைமுறையில் வகுப்பறையில் மாற்றமேற்படுகிறதா?

பரீட்சையை மையமாகக் கொண்டு ஆசிரியர் இன்று கூடிய அளவில் அறிவைத் (தகவலை) திணிப்பதிலும் குறைந்த அளவில் மனப்பாங்கில் மாற்றத்தையும் ஏற்படுத்துகிறார்கள் மேலும் மாணவன் கற்கும் பாடப்பரப்புகளில் சிறந்த மனப்பாங்குகளை வளர்ப்பதற்கான பகுதிகள் மிகக் குறைவாக அமைந்திருப்பதும் சுட்டிக்காட்ட வேண்டிய தொன்றாகும். வெறும் புராணங்களையும், வரலாறுகளையும் கூறும் கல்வியாக அமையாது ஒழுக்கக கல்வியையும் சிறந்த மனப்பாங்குகளையும் உருவாக்கும் கல்வியாக பாடங்களின் பாடப்பரப்புகள் மாற்றியமைக்கப்பட்டு செளுமைப்படுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் தமது தொழில் பற்றியும் கற்றல் கற்பித்தல் பற்றியும் சிறந்த மனப்பாங்கு உடையவராக இருக்கவேண்டும் வேறு தொழில்கிடைக்காததால் இத்தொழிலில் உள்ளோம் போன்ற எண்ணங்களைக் கொண்ட ஆசிரியர்களால் சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியாது உதாரணமாக அண்மையில் கல்விக் கல்லூரிகளில் மூன்று வருடங்கள் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களில் முந்நூறு (300) ஆசிரியர்கள் தமது நியமனங்களை ஏற்காது வேறு தொழில் தேடிச் சென்ற செய்தியைக் கூறலாம் இவர்கள் ஆசிரியர் தொழில் சார்ந்த சிறந்த அறிவையும் திறனையும் பெற்று பரீட்சையில் சித்தியடைந்திருந்த பொழுதும் அத்தொழில் சார்ந்த நேரான மனப்பாங்கைப் பெறாது கல்வியில் வீண் விரயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அமெரிக்காவில் அண்மையில் ஆசிரியர் மனப்பாங்கு தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வின் முடிவின்படி பிள்ளைகள் கற்றலில் உயர்வு அல்லது தாழ்வைப் பெறுவது ஆசிரியரின் மனப்பாங்கே காரணமாக அமைகிறது என நிறுவப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்கள் ஆசிரியர்களைப் பற்றிக் கொண்டுள்ள மனப் பாங்குகளைக் கொண்டே வகுப்பறைக் கருமங்கள் நடைபெறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன மாணவர்கள் ஆசிரியரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்கும் சமயங்களில் வகுப்பறைச் செயற்பாடு மிகுந்த பயனுடையதாக அமைந்திருக்கும்.

## மனித விழுமியங்களைப் பேணும் மனப்பாங்கு

விழுமியங்கள் என்பவை உயர்வானதாகவும் மேன்மையானதாகவும் மேலான பெறுமதி உடையனவயாகவும் போற்றப்படுபவை என்பது பொருளாகும். மனிதத்தை வளர்க்கும் விழுமியங்கள் மனித விழுமியங்கள் எனப்படும். இவை மனிதர்களை மனிதர்களோ என்று அடையாளம் காட்டுபவை. அன்பு, இரக்கம், கருணை, கருசனை, தியாகம், மரியாதை, தர்மம் போன்றவை மனித விழுமியங்கள் ஆகும். இவை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியாதவை. அளவிடுவதற்கு அப்பாற்பட்டவை.

மாணவர்களின் மனிதவிழுமியப்பண்புகளை விருத்திசெய்வது ஆசியர்களின் கடமையாகும். மனித விழுமியப் பண்புகள் போற்றப்படாமையே இன்று ஒழுக்கம் குன்றிய சமுதாயம் வளர்ந்து வருவதற்கு அமைகிறது.

ஆசிரியர்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளில் மனித விழுமியத்தைப் பேணும் மனபாங்குபளை மாணவர்களிடம் கட்டியெழுப்ப வேணடும். அறிவுரை, போதனை என்பவற்றின் மூலம் ஒருவரின் உள்ளத்தின் அதி அகத்தை வளர்ப்பதன் மூலம் மனச்சாட்சியுள்ள மனிதரை உருவாக்கலாம் என்று உளவியலாளர் சிக்மன் பிரைட் (Sigmand Freud) கூறியுள்ளார். ஆசிரியர்கள் பாடசாலைக் காலைக் கூட்டங்களில் பாடவேளை முடிவுகளில் மனித விழுமியங்களின் சிறப்புக்களை மாணவருக்கு எடுத்துக் கூறுவது சிறந்த செயற்பாடாக கருதப்படுகிறது.

### (3) அறிவு அடிப்படை மனப்பாங்கு

ஒருவரிடம் இருக்கும் நம்பிக்கைகளையும் மனப்பாங்குகளையும் பயன்படுத்தி ஒரு பொருள் பற்றி அல்லது கருத்துப்பற்றி காரணம் காணல் மூலம் புதிய மனப்பாங்கைப் பெறுதல் அறிவு அடிப்படை மனப்பாங்கு இங்கு ஒருவர் ஒன்றைப் பகுத்தறிந்து சுயமாக ஒரு மனப்பாங்கை கட்டியெழுப்புதல் நடைபெறுகின்றது

ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு திறன் என்பவற்றை அளப்பதுபோல மனப்பாங்குகளையும் அளப்பதற்குப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மனப்பாங்கை அளப்பதற்கான முறைகள் பல இருந்ததாலும் பாடசாலையில் இலகுவாகக் கையாளக்கூடிய இருமுறைகள் தரப்படுகின்றன.

(1) திறந்த முடிவுள்ள வினாக்கள்
(Open ended Questions)

(2) நிலையான துலங்கள் வினாக்கள்
(Fixed Responce Questions)

### *திறந்த முடிவுள்ள வினாக்கள்*

இங்கு நேரடியாக ஒரு குறித்த விடயம் பற்றி அபிப்பிராயம் கேக்கப்படுகிறது. இதற்கு பதிலளிப்பவர் எப்படியும் துலங்கலாம்.

உ-ம் ஓங்கி வளர்ந்த மரங்கள் வெட்டப்படுவதைக் காணும் பொழுது உங்கள் உள்ளத்தில தோன்றும் விடயங்கள் எவை?

### *நிலையான துலங்கள் வினாக்கள்*

இங்கு வினாவுக்கு ஒருவர் தரும் பலவித விடைகளை ஆராய்வதில் ஏற்படும் சிரமத்தைக் குறைப்பதற்கு ஒவ்வொரு வினாவுக்கும் தெழிவு செய்யப்பட்ட குறித்த விடைகள் கொடுக்கப்படுகிறது. இவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இது பல்தேர்வு வினா போன்று அமையும்.

(1) மனப்பாங்கு அளவீடானது அளக்கப்படுபவர் நேர்மையாகத் துலங்குபவராயின் பிழையான கருத்தைக் கொடுக்காது.

(2) அளக்கப்படுபவர் கொடுக்கும் விடையானது சிலசமயங்களில் அவர் விடையளிக்கும் பொழுது இருக்கும் சூழ்நிலையால் பாதிக்கும்.

(3) சில சமயங்களில் மனப்பாங்கு அளவீட்டு முறையே சிலரது புதிய மனப்பாங்குகளை உருவாக்குகின்றன.

செ.செந்தில்மணி.
விரிவுரையாளர்.
கோப்பாய் ஆசிரியர்.
கலாசாலை.

# சித்திரக்கலைப் பாடத்தில் சிறந்து பெறுபேற்றை அடைவதற்குரிய வழிகள்

சித்திரக்கலைப்பாடமானது யாழ் மாவட்டப் பாடசாலைகளில் மிகவும் வேண்டப்படுவதும் அதே நேரம் பின்தங்கிய ஒரு பாடப்பரப்பாகவும் காணப்படுகின்றது. இப்பாடப்பரப்பு ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரம் வரை பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது. க.பொ.த சாதாரணதரத்தில் சித்திரக்கலையில் தேர்ச்சியும் சித்தியும் உள்ள மாணவர்களுக்கு க. பொ. த உயர்தரத்தில் இப்பாடத்தை தெரிவு செய்து ஒரு பாடமாக கற்கக்கூடிய வாய்ப்பும் உள்ளது உயர்தர வகுப்பில் சித்திரபாடம் உள்ளிட்ட மூன்று பாடசித்தியுள்ள மாணவர்களுக்கு கல்வியியற் கல்லூரிகள் மூலம் ஆசிரிய பயிற்சியளிக்கப்பட்டு சித்திரக்கலை ஆசிரியர் ஆவதற்குரிய வாய்ப்புகளும் உண்டு.

க.பொ.த சாதாரண தரத்தில் சித்திரபாடத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவர்கள் அப்பாடத்தின் பரீட்சைமைய அறிவுஅற்றல்களை தெரிந்திருப்பது. அப்பாடத்தில் சித்திபெற ஏதுவாயிருக்கும். ஏனெனில் இப்பாடத்துறை சார்ந்த வினாத்தாள்களோ அல்லது கைநூல்களோ மாணவர்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை. அகவே, பரீட்சை வினாத்தாள் பற்றிய சில தரவுகளையும் அறிவுறுத்தல்களையும் இங்கே நோக்கலாம்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். அதாவது. சித்திரக்கலை. I, II, III ஆகியவை

### *1) சித்திரக்கலை* I

இப்பகுதி 40 வினாக்களைக் கொண்ட எழுத்துப் பகுதியாகும், இதில் பல் தேர்வு வினாக்கள், தொடர்புபடுத்தல், கீறிட்ட இடம் நிரப்பல், கலை விமர்சனம் போன்றவை அடங்கும். இப்பத்திரத்தின் நோக்கமாக பின்வருவன அமையும்.

இலங்கை, இந்திய, ஐரோப்பிய கலைகளுடன் தொடர்புடைய கலாசாரப் பின்னணியின் அறிவை மதிப்பிடல்.

பாரம்பரிய அலங்கரிப்பு, கலை கைத்தொழில் தொடர்பான அறிவு திறன்களை மதிப்பிடல் செயல் முறைப் பயிற்சிகளின் மூலம் பெற்றுக் கொண்ட கோட்பாடுகள் நுட்பமுறைகள் தொடர்பான விளக்கத்தைப் பரீட்சித்தல்

இப்பகுதி 80 - 90 வீதமான வினாக்கள் இலங்கைக் கலைகளுடன் தொடர்புபட்டவையாகவே அமைந்திருக்கும் இவற்றிலும் இலங்கையின் பௌத்தகலை. கலாசாரப் பின்னணியை மையமாகவைத்தே பெரும்பாலான வினாக்கள் தயாரிக்கப்பட்டிருக்கும். இவற்றிற்குரிய புள்ளிகள் வினாவுக்கு 1 புள்ளிவீதம் 40 புள்ளிகளாகும்.

### *பகுதி* II

இப்பகுதி - ஒரு செயல் முறை விளாப்பத்திரமாக அமையும். சுயாதீன இரேகை வரைதலும் அசையாப் பொருட்கூட்டவரைதலும் வர்ணம் தீட்டலுமாகும். இதற்குரிய மொத்தப்புள்ளி 30 வீதமாகும். இதில் ஒழுங்குபடுத்தப்பட்ட சில பொருட்களை பார்த்து இரேகைகளின் மூலம் ஒரு தனிச் சித்திரமும். (பருமட்டானது) அதேபொருட்கூடாத்தை வரைந்து வர்ணம் தீட்டிய சித்திரமும் அமைக்கப்படல் வேண்டும். இவற்றிற்கு நாம் அன்றாடம் சூழலில் அவதானிக்கின்ற இயற்கை, செயற்கைபொருட்களின் தோற்றத்தை
பார்த்து வரைந்து வர்ணம் தீட்டிப் பழகிக் கொள்ளல் வேண்டும். இப்படி நிறைவான பயிற்சி (சுயமான பயிற்சி) பெற்ற ஒருவருக்கு இப்பரப்பு பெரிய அளவிலான சுமையைத்தராது. இச்செய்முறை II இற்கான நோக்கமாக உமது ஆக்கத்தில் எதிர்பார்ப்பவையாக கீழ்வருபவை அமையும்.

- இயற்கை செயற்கைப் பொருட்களின் இயல்பு வடிவமைப்புகளின் தன்மைகளை விளங்கிக் கொள்ளும் திறமை, கோட்பாடுகளை கையாளும் ஆற்றல்களை அளவிடல்.

♦ இரேகை ஊடகத்தை உபயோகித்து பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரித்துக் காட்டும் திறமை

♦ வர்ணத்தைப் பாவித்துக் கொள்ளும் நுட்பமுறைகளையும், புற இயல்புகளை வெளிப்படுத்தும் வகையில் வர்ணங்களை உபயோகித்தல் தொடர்பான திறன்களை அளவிடுதல்.

பொருட்காட்டவரை தலுக்குரிய மதிப்பீட்டில் பின்வரும் நியதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. இரேகைக்கற்றல் - இரேகை கையாள்தல் தொடர்பில் காணப்படும் நுட்பாங்கள் திறன்கள் - 05 புள்ளி
2. கொடுக்கப்பட்ட பரப்பினை கருத்துடன் உபயோகித்துள்ள திறன் - 05 புள்ளி
3. பிரமாணம் (அளவுகள்), தூரதரிசனத் தன்மை போன்றவற்றை வெளிக்காட்டல் - 50 புள்ளி
4. வர்ணப்பாவனை (முப்பரிமாணப் பண்புகளை வெளிப்படுத்திக் காட்டல்)
5. பின்னணி முன்னணி வெளித்தோற்ற இயல்புகளை காட்டல் - 50 புள்ளிகள்
6. நுட்பத்திறனும் பொதுப் பூரணப்பாடும் - 05 புள்ளிகள்

***பகுதி* III**

பகுதி III ஆன்று கருத்துப்படவாக்கம். அல்லது அலங்காரப்படவாக்கமாகும். இதில் பரீட்சார்த்தி விரும்பிய ஒரு பகுதியைத் தெரிவுசெய்து ஏதாவது ஒரு ஆக்கத்தை மட்டுமே ஆக்கிக்கொள்ள வேண்டும். மனித உருவங்களோடு பெரிதும் தொடர்புபட்ட கருத்துப்படவாக்கங்களை ஆக்க முடியாமல் கஷ்டப்படுவோர். அலங்காரப்படவாக்கத்தினை தெரிவு செய்து கொள்ளலாம். ஏற்கனவே சில அலங்கார மாதிரிகளை வரைந்து பயிற்சி பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளுக்கு இவ்விடயம் கடினமாக அமையாது.

பகுதி III இற்குரிய கருத்துப்பட வாக்கத்தினது நோக்கமாக சூழலில் காணப்படுகின்ற இயற்கை செயற்கை சூழலின் இயல்புகளையும் அவற்றிடையே அனுபவங்களை சித்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகின்ற ஆக்கச்சிறப்புடன் கூடிய ஆற்றலை, நயத்தல் திறனை மதிப்பிடுதலாகும். கருத்துப்படவாக்கத்துக்கத்துக்குரிய மதிப்பீட்டு நியதிகள் பின்வருமாறு அமையும்.

1) உரிய தொனிப் பொருளுக்கான பொருத்தமான சூழலும் சந்தர்ப்பங்களும் தொடர்பான அவதானம் (6 புள்ளிகள்)
2) மனித மெய்நிலைகள் (உடற்தோற்றம்) பல்வேறுபட்ட வடிவமைப்புக்களை வெளிப்படுத்தியுள்ள திறன். (6 புள்ளிகள்)
3) கருத்து வெளிப்பாட்டின் பாணிக்கு ஏற்ப இயற்கை, செயற்கைத் தன்மையும்சிறப்பும் நுட்பத்திறன்களை
4) வர்ண ஊடாகத்தை உபயோகித்துள்ள திறன். (6 புள்ளிகள்)
5) பொதுப் பூரணப்பாடு தொடர்பான அவதானிப்பு (6 புள்ளிகள்)

பகுதி III இல் அடங்கும் ஆக்க அலங்காரப் பகுதியின் நோக்கமாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

அன்றாடம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிகழ்வுகளிற்கும், செய்திப் பரிமாற்ற நிகழ்வுகளிற்கும் ஏற்பத் தேவையான ஆக்கங்களைத் திட்டமிடுதல், அலங்கரித்தல் தொடர்பான திறன் வளர்ச்சியைப் பரீசித்தல்.

## ஆக்க அலங்காரப் படவாக்கத்தின் மதிப்பீட்டு நியதிகள்

1) தொனிப்பொருளுக்கு ஏற்றவாறு திட்டமிட்டுக் கொள்ளல் (6 புள்ளிகள்)
